# A BRIEF SKETCH

OF THE

# HISTORY OF INDIA

**For Lower Secondary Schools.**

BY

D. LAZARUS, B.A.,

*Principal, London Mission High School, Vizagapatam*

TRANSLATED INTO TAMIL

BY THE REV. J. LAZARUS, B.A.,

*Fellow of the Madras University*

2659
9154

**Revised Edition**

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
10 SEP 1913
MADRAS.

# இந்திய சரித்திரச் சுருக்கம்

முதற் பாகம்

MADRAS:

C. COOMARASAWMY NAIDU & SONS

1913

(Copyright Registered)

*Price 5 As.*] [விலை அணா 5

PRINTED AT
THE 'CAXTON PRESS,'
MADRAS, E

V2
N13

# பொருளடக்கம்


| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | தேசமும் ஜனமும் | 1 |
| 2. | ஆரியர்கள் | 11 |
| 3. | ஹிந்துஸ்தானம் | 21 |
| 4. | ஜைனமும், பௌத்தமும் | 37 |
| 5. | பழைய ஆரிய ராஜ்யங்கள் | 44 |
| 6. | மௌரிய ராஜாங்கம் | 48 |
| 7. | ஆந்திரரும் கிரேக்கரும் பார்த்தியரும் | 58 |
| 8. | குப்தர்களின் துரைத்தனம் | 70 |
| 9. | சாளுக்கியரும் ராஜபுத்திரரும் | 81 |
| 10. | தென் இந்தியா | 91 |
| 11. | மஹம்மதியப் படையெழுச்சி | 107 |
| 12. | பூர்வமகம்மதியப் படைகள் | 111 |
| 13. | காஸ்னி மகம்மது, 995—1030 | 113 |
| 14. | மகம்மதுகோர், — 1184 — 1206 | 116 |
| 15. | டில்லியின் அடிமை அரசர்கள், 1206 — 1290 | 119 |
| 16. | கில்ஜிராஜவமிசம், 1290 — 1320 | 125 |
| 17. | துக்லக் வமிசம், 1320 — 1414 | 129 |
| 18. | சையித், லோடிவமிசங்கள், 1414 — 1526 | 133 |
| 19 | பாமினி விஜயநகர ராஜ்யங்கள் | 134 |
| 20. | போர்த்துகீசர் | 137 |

| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 21. | முகல்ராஜ்யம் ஸ்தாபித்த பேபர், 1526—1530 | 140 |
| 22. | பிறதேசம் போன ஹூமாயூன் அரசன், 1530 — 1555 | 145 |
| 23. | முகல்ராஜ்யத்தைக் கட்டின மஹா ஆக்பர், 1556 — 1605 | 148 |
| 24. | மனையாளுக் கடிமையான ஜஹாங்கீர், 1605 — 1627 | 153 |
| 25. | பேர்போன கட்டடக்காரன் ஷாஜஹான், 1627 — 1658 | 157 |
| 26. | கண்டிப்பான மகம்மதியன் ஔரங்சிப், 1658 — 1707 | 162 |

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, MADRAS.
REGISTERED
18 SEP 1913

# இந்திய சரித்திரச் சுருக்கம்

## 1. தேசமும் ஜனமும்


**தேசம்**—நாம் வசிக்கும் தேசம் இந்தியா எனப்படும். இது ஆசியா கண்டத்தின் தெற்கேயுள்ள பெரிய பரியாயத் தீவு. நான்கு பக்கங்களிலும் நீரினாற் சூழப்பட்டது தீவு; மூன்று பக்கங்களில் மாத்திரம் நீரினாற் சூழப்பட்டு, நான்காம் பக்கத்தில் தரையுடன் சம்பந்தப்பட்டிருப்பது பரியாயத் தீவு. இந்தியா தேசமானது பரியாயத்தீவாக இருக்கிறதென்பது அதன் படத்தைப் பார்த்தால் நன்றாகத் தெரியும். இதற்குப் பின் பக்கத்திற் கொடுத்திருக்கிற படத்தைப் பாருங்கள். வடக்கே ஹிமாலய மலைத் தொடரும், கிழக்கே பர்மாவும் வங்காளக் கடலும், தெற்கே இந்து சமுத்திரமும், மேற்கே அரபிக் கடலும் அப்கானிஸ்தான் பெலுகிஸ்தான் என்கிற நாடுகளும் இந்தியாவுக்கு எல்லைகளாக இருக்கின்றன.

**இயற்கையான பிரிவுகள்**—படத்தை உற்றுப் பார்த்தால், இந்தியாவின் மத்தியில் ஒரு மலைத்


இந்தியா தேசம்

தொடர் தோன்றும். இதற்கு விந்தியமலை என்று பெயர். இதற்கு வடக்கேயுள்ள பாகம் வட இந்தியா என்றும், தெற்கேயுள்ள பாகம் தென் இந்தியா என்றும் சொல்லப்படும். இவை இயற்கையிலே ஏற்பட்ட பிரிவுகளாம்.

பழைய குடிகள் — பண்டைக்காலத்துக் குடிகளைப்பற்றி நமக்குத் தெரிந்தது வெகு சொற்பம். அவர்கள் நாகரிகமில்லாமல், வீடுவாசல்கள் அமைத்துக் கொள்ளாமல், புதர்களையும் குகைகளையும் வாஸஸ்தானமாகக்கொண்டு அங்குமிங்கும் அலைந்து



கற்களால் செய்த ஆயுதங்கள்

திரிந்தார்களாம். அவர்கள் எங்கிருந்து வந்தவர்கள், எப்பொழுது வந்தவர்கள் என்பது நமக்குத் தெரியாது. அவர்கள் குட்டையாகக் கறுத்து விகாரமாக இருந்தார்கள். காய், கனி, கிழங்கு, மாமிறைச்சி முதலியனவே அவர்களுக்கு உணவுப் பொருள்கள். கத்திகள் செய்ய அவர்களுக்குத் தெரியாது; கூர்மையான கருங்கற்களையே ஆயுதங்களாக உபயோகித்து வந்தார்கள்.

பிறகு, நாளடைவில், குடிசைகள் கட்டவும், சட்டிகள் செய்யவும், அம்பு எய்யவும், முன்பு இருந்ததை விடச் சுகமாக வாழவும் தெரிந்து கொண்டார்கள். வங்காளம், சூட்டியா நாகப்பூர்,



நீலகிரியிலுள்ள குறும்பர்

ஒரிஸ்ஸா, மத்திய மாகாணங்கள் ஆகிய இந்தப் பிரதேசங்களிலுள்ள மலை நாடுகளில் வசிக்கும் சாந்தலர், பீலர், கோண்டர், கோலர் முதலானவர்களும், நீலகிரி முதலிய இடங்களிலுள்ள குறும்பர்,

தோதவர் முதலானவர்களும் இந்தியாவின் பழைய குடிகளின் சந்ததியார்களென்று தெரிய வருகின்றது. இவர்கள் அகன்றுயர்ந்த கன்னமும், தட்டை மூக்கும், தடித்த உதடும் உடையவர்கள்.

**திராவிடர்** — பிறகு, இந்தத் தேசத்தில் வந்து சேர்ந்தவர்கள் திராவிடர். இவர்கள் எப்பொழுது வந்தார்களென்று சொல்ல முடியாது; ஆனால், தேச சரித்திரம் ஏற்படுவதற்கு வெகு காலத்திற்கு முன்னே வந்திருக்க வேண்டுமென்று சொல்லலாம். ஆதியில் இவர்கள் ஆசியாகண்டத்தின் மத்தியில்



வடமேற்குக் கணவாய்

வசித்துக் கொண்டிருந்து, அங்கே நீர்வளமும் நிலவளமும் போதாமையால், ஹிமாலயமலையைக் கடந்து இந்தியாவுக்கு வந்திருக்கவேண்டும்.

ஹிமாலயம் என்பது மிகவும் உன்னதமான மலைத்தொடர். 'ஹிமாலயம்' என்னுஞ் சொல்லுக்குப் 'பனிவீடு' என்பது பொருள். இதன் சிகரத்தில் எப்பொழுதும் பனி படிந்திருக்கும். இது கீழ்ச் சமுத்திரத்திலிருந்து மேற் சமுத்திரம் வரைக்கும் ஒரே உயரமாக இருக்குமாயின், இதனைக் கடந்து எவரும் இந்தியாவுக்கு வரமுடியாது. ஆனால், வடமேற்கிலும், வடகிழக்கிலும் இது சற்றுத் தாழ்ந்திருக்கின்றது. அப்படித் தாழ்ந்திருக்கும் இடங்களுக்குக் கணவாய்கள் (மலைமேற்பாதை, மலைகளுக்கிடைவழி) என்று பெயர். வடமேற்கிலுள்ள கணவாயின் வழியாகத் திராவிடர்கள் இந்தியாவுக்கு வந்தார்கள்.

கணவாயைக் கடந்துவந்து சிந்துநதிக்கரைகளிலும் கங்காநதிக் கரைகளிலுமுள்ள செழுமையான இடங்களைக்கண்டு மகிழ்ந்து, அவைகளிற் குடியேறிப் பயிரிட்டுச் சுகமாக வாழ்ந்தார்கள்.

**திராவிடர்களின் நாகரிகம்** — அந்தக் காலத்திலேயே இவர்கள் நாகரிகமுடையவர்களாக இருந்தார்களென்று தெரிகின்றது. ஆடு மாடுகளை வளர்த்து வந்தார்கள்; காடுகளைவெட்டி நிலத்தைத் திருத்திப் பயிர்செய்துவந்தார்கள். வீடுகள் கட்டிக் கிராமங்கள் அமைத்து, ஒரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டு அவனுக்கு அடங்கி நடந்தார்கள். இந்தியாவின் பல திக்குகளிலும் வியாபித்துக் கிராமங்களும், பட்டணங்களும், நகரங்களும் அமைத்துக்கொண்டு, ஒவ்வொரு கிராமத்திற்கு ஒவ்வொரு தலைவனும் இந்தத் தலைவர்களுக்கு அதிபதியாக அரசனும் ஏற்படுத்திக் கொண்டார்கள். விளை-

பொருள்களில் ஒரு பகுதியைக் குடிகள் அரச-னுக்குச் செலுத்துவது இவர்களுடைய காலத்-தில் உண்டான வழக்கம். கிராமங்களின் ஆட்சி-யைப்பற்றி இவர்கள் செய்திருந்த சில ஏற்பாடுக-ளும் விதிகளும் இக்காலத்திலும் வழங்குகின்றன. இவர்களுக்கு வியாபாரத்திலும் தேர்ச்சியுண்டு. அரிசி, தேக்குமரம், சந்தனமரம், 'மஸ்லின்' சல்லா, மயிலிறகு, யானைத் தந்தம் முதலிய சாமான்களை இதர தேசங்களுக்குக் கடல்மார்க்கமாக அனுப்பி வந்தார்கள். கம்மாள வேலை, தச்சுவேலை, நெசவு முதலிய கைத்தொழில்களில் வல்லவர்களாக இருந்-தார்கள்.

திராவிடர்கள் ஜனத் தொகையிலும், தேக பலத்திலும், நாகரிகத்திலும் மிகுந்தவர்களான-மையால், இந்தியாவிலிருந்த பழைய குடிகளைத் துரத்திவிட்டுச் செழிப்பான பிரதேசங்களை யெல்-லாம் கைக்கொண்டார்கள். சில இடங்களில் அவர்-களை வேலையாட்களாக வைத்துக்கொண்டார்கள். பின்பு, பற்பல ஜாதியார் பற்பல காலங்களில் இந்தி-யாவுக்கு வந்தார்கள். மத்திய ஆசியாவிலுள்ள மங்கோலியாவி லிருந்தும், அதற்குக் கிழக்கேயுள்ள சீன தேசத்திலிருந்தும் மங்கோலியர் வந்தார்கள். அவர்கள் திபெத்து மார்க்கமாகவும், சீன ராஜ்யத்-துத் தென்கிழ்மாகாணங்களின் மார்க்கமாகவும் இந்தியாவிற் பிரவேசித்தார்கள். இப்படி வந்த பற்-பல ஜாதியாரோடு, இந்தியாவின் பழைய குடிகளும் திராவிடர்களும் சிறிது காலம் போர் புரிந்து ஓய்ந்து, எல்லாரும் சமாதானமாகக் கலந்து குடி-யிருந்து வாழ்ந்தார்கள்.

'திராவிடர்' என்னும் பெயர் — சிறிது காலம் சென்ற பின்பு, மத்திய ஆசியாவினின்று ஆரியர் என்னும் மற்றொரு ஜாதியார், மற்றவர்களைப்போலவே வடமேற்குக் கணவாயின் வழியாக இந்தியாவுக்கு வந்தனர். இவர்கள் பலமிகுந்தவர்கள். முன்னால் வந்து திராவிடர்கள் கைப்பற்றிக்கொண்டிருந்த செழுமையான இடங்களைத் தம் வசப்படுத்திக் கொண்டு அனுபவிக்கக் கருதிப் போர் புரிந்து அவர்களை யெல்லாம் தெற்குத் திசையை நோக்கி ஓடச் செய்தார்கள். அப்படி ஓடியவர்களைப் பார்த்து ஆரியர்கள் 'திராவிடர்கள்' என்றார்கள்; 'திராவிடர்கள்' என்றால் 'ஓடினவர்கள்' என்று அர்த்தம். அது முதல் அவர்களுக்கு அந்தப் பெயரே நிலைத்தது. ஆரியர்களோடு கலந்து திராவிடர்கள் பெரும்பாலும் ஆரியாசாரங்களையே கைக்கொள்வாராயினர். அவர்கள் முதன் முதலில் வடமேற்குக் கணவாயின் வழியாக வந்து, இந்தியாவிற் குடியேறிய இடங்களும், பிறகு ஆரியரின் முன் நிற்கமாட்டாமல் தென்திசை நோக்கிய வழியும் இந்தப் படத்திற் குறிக்கப் பட்டிருக்கின்றன.

திராவிட ராஜ்யங்கள் — ஒரு காலத்தில் இந்தியா முழுமையும் பரவி, நாகரிகத்திற் சிறந்து, பிரபுக்களாக இருந்த திராவிடர்களுள், அங்கங்கே சிதறுண்டு, மற்ற வகுப்பினர்களோடு கலந்து போனவர்கள் போக மற்றவர்கள் தென்இந்தியாவில் வந்து நிலைகொண்டு, பல ராஜாங்கங்களை ஏற்படுத்திச் சிறப்பாக ஆண்டு வந்தார்கள். அக் காலத்தில் அவர்கள் பேசிவந்த பாஷைகள் பல. அவற்றுள் முக்கியமாக இப்பொழுது விளங்குவன தமிழ்,


இந்தியா தேசம்

தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம், என்பவைகள். அவர்களுடைய ராஜ்யங்களுள் முக்கியமானவை பாண்டிராஜ்யம், சோழராஜ்யம், சேரராஜ்யம். இவைகளைப்பற்றி மற்றோரிடத்தில் விவரிப்போம்.

ஆரியர் — மத்திய ஆசியாவிலிருந்து ஆரியர்கள் வடமேற்குக் கணவாய் வழியாக இந்தியாவிற் பிரவேசித்து, அதற்குமுன் குடியேறி யிருந்த திராவிடர் முதலானவர்களைத் துரத்திவிட்டு, இந்த தேசத்தில் நிலைகொண்டார்கள் என்று சொன்னோம். இவர்கள் வந்த காலம் கி-மு. 4,000 முதல் கி-மு. 1,500 வரையிலாகும். இவர்கள் வந்தது முதலே இந்து தேச சரித்திரம் நமக்குத் தெரிவதற்கு இடமாயிற்று. இவர்கள் கவிபாடுந் திறமை வாய்ந்திருந்தார்கள். அந்தப் பாடல்கள் கர்ணபரம்பரையாக வழங்கி வந்திருக்கின்றன. அவைகளில், ஆரியர்களுடைய நடையுடை பாவனைகளும், ஆதிகாலத்துச் சரித்திரங்களும் குறிக்கப்பட் டிருக்கின்றமையால், அவைகளிலிருந்து அனேக விஷயங்களை நாம் தெரிந்து கொள்வதற்காயிற்று.

ஆரியர்களுக்குப் பிறகு, இந்தியாவின் வடமேற்கு மூலையின் வழியாக மகம்மதியர், ஸெமிடிக் ஜாதியார் முதலான பற்பல ஜாதியார் பற்பல காலங்களில் வந்தார்கள்; ஆனால், அவர்கள் கொஞ்சம் பேர்களே. அவர்களுள், முதலில் வந்தவர்கள் ஆரியர்களோடு கலந்து போயினர்; பிறகு வந்தவர்கள் வேறு வேறு ஜாதியார்களாகவே இன்னும் இருப்பதைக் காணலாம்.

மேற்சொல்லியவர்களெல்லாரும் இந்தியாவின் வடமேற்கிலும் வடகிழக்கிலுமுள்ள ஹிமாலயக்கணவாய்களின் வழியாக, அதாவது, கரைமார்க்கமாக வந்தவர்கள். சென்ற நானூறு வருஷங்களில் ஐரோப்பாகண்டத்திலிருந்து ஆரிய குலத்தார் பல வகுப்பினர் கடல்மார்க்கமாக வந்தார்கள். இவர்களெல்லாரும் வியாபாரத்தைக் கருதியே வந்தார்களெனினும், அந்த வியாபாரத்தை உறுதியாக்கி அபிவிருத்தி செய்துகொள்ளும்பொருட்டு, கடல் மார்க்கத்தையுங் கரைமார்க்கத்தையும் தம் வசப்படுத்திக்கொள்ள முயன்றார்கள். இப்படிப் பிரயத்தனஞ் செய்தவர்கள் பலருள் மிகுந்த வெற்றி வாய்ந்து குடிகள் முதன்மை பெற்றவர்கள் அங்கிலேயரே.

## 2. ஆரியர்கள்

**மூலஸ்தானம்** — திராவிடருக்குப் பிறகு, இந்தியாவுக்கு வந்தவர்கள் ஆரியர்கள். இவர்கள் ஆதியில் வசித்துக்கொண்டிருந்த இடம் ஆசியாகண்டமும் ஐரோப்பாகண்டமும் ஒன்றுகூடும் எல்லைநாடென்பது பண்டித ஆராய்ச்சியின் துணிபு. அது ருஷியா தேசத்தின் தென் பக்கத்திலுள்ள எடார் ஆகும். அங்கே இவர்கள் நெடுங்காலம் வாழ்ந்திருந்ததாகத் தோற்றுகிறது. அப்பொழுது ஆடுமாடுகளை வளர்ப்பதும் பயிரிடுவதுமே இவர்களுக்குத் தொழில். இவர்கள் அழகு பொருந்திய சிவந்த மேனியும், உயர்ந்தோங்கிய நெற்றியும் வாய்ந்து, நெட்டையாக வளர்ந்திருந்தனர். இவர்களுக்குக்

கீழ்த்திசையி லுள்ள நாடுகளில் வசித்துக் கொண்டிருந்த தார்த்தார்களோ, மஞ்சள் நிறமும் சப்பை மூக்கும் வாய்ந்திருந்தனர்.

**வியாபகம்** — நாளடைவிற் குடித்தொகை அதிகரித்ததனல் எல்லாரும் வசிப்பதற்கு இடம் போதா தாயிற்று. இவர்கள் சிறு சிறு கூட்டங்களாக வேறு நாடுகளைத் தேடிப்போனார்கள். ஒரு பகுதியார் மேற்றிசையை நோக்கிச் சென்று ஐரோப்பாகண்டத்திற் குடியேறினார்கள். இப்பொழுது வேறு வேறு ஜாதியாராக வழங்கும் அங்கிலேயர் முதலாகிய ஐரோப்பியர்க ளெல்லாரும் இவர்களுடைய சந்ததியார்களே. மற்றொரு பகுதியார் கீழ்த் திசையையும் தென்கீழ்த் திசையையும் நாடிச் சென்றார்கள். இவர்கள் சிறிது காலம் காஸ்பியன் கடலின் வடகரையில் அலைந்து கொண்டிருந்து, கோகண்டு படக்ஷான் என்னும் பீடபூமிகளையடைந்தார்கள். அங்கே, என்ன காரணத்தினலோ, இரண்டு இனங்களாகப் பிரிந்து போனார்கள்; ஓர் இனத்தார் கீழப் பெர்ஷியாவிற் குடியேறினார்கள்; மற்றோர் இனத்தார் ஹிந்துகூஷ்மலையைக் கடந்து, கீழ் அப்கானிஸ்தானத்தில் வந்து நிலைகொண்டார்கள். இந்த இனத்தவர்கள் அனேகர் ஒருமிக்கத் திரண்டு காபூல்நதி பாயும் பள்ளத் தாக்குகளின் வழியே நடந்து, இந்தியாவிற் பிரவேசித்து பஞ்சாப் தேசத்திற் குடியேறினார்கள். இது நடந்தது கி.மு. 4,000 வருஷத்திற்கு முன் என்னலாம்.

**'ஆரியர்' என்னும் பெயர்** — இப்படிப் பெர்ஷியாவிலும் இந்தியாவிலும் வந்து குடியேறினவர்கள் தங்களை "ஆரியர்" என்று சொல்லிக் கொண்-

'டனர். "ஆரியர்" என்றால் "உயர்ந்த குலத்தவர்" என்று அர்த்தம். பெர்ஷியாவுக்கு "ஐரான்" என்றொரு பெயர் வழங்குகின்றது. "ஐரான்" என்பது "ஆரியன்" என்பதன் திரிபே.

**எல்லாரும் ஆரிய குலத்தவர்கள்** — ஒரே விதமான நடையுடைபாவனைகளிற் பழகி, ஒரே விதமான பயிற்சியும் தொழிலும் மேற்கொண்டு, ஒரே பாஷையைப் பேசி, ஒரே ஜாதியாராக ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையிலுள்ள எடாரில் வசித்துக்கொண்டிருந்த ஜனங்கள் பிரிந்து ஐரோப்பாவிலும், பெர்ஷியாவிலும், இந்தியாவிலும், மற்றுமுள்ள பூபாகங்களிலும் பரவி, இப்பொழுது வேறு வேறு பாஷைகளைப் பேசிக்கொண்டு, வேறு வேறு ஆசாரங்களைக் கைக்கொண்டு, ஒருவரையொருவர் அந்நியரென நினைத்து, ஒருமையின்றிப் பிரிவுற்று நிற்கின்றார்கள். இந்தியாவிலும் ஐரோப்பாவிலுமுள்ளவர்கள் ஒரே ஜாதியின் சந்ததியார்களானமையின், இவர்களை "இந்து-யூரோப்பியர்" என்பதுமுண்டு. இதனால், ஐரோப்பாவிலுள்ள அங்கிலேயர், பிரெஞ்சுக்காரர், ஜர்மனியர் முதலான பற்பல ஜாதியார்களும், இந்தியாவிலுள்ள பற்பல ஜாதியார்களாகிய நாமும் சகோதரர்களே.

**'இந்தியா' என்னும் பெயர்** — மேற் சொல்லியபடி இந்தியாவிற் பிரவேசித்த ஆரியர்கள் பஞ்சாபிலுள்ள பெரிய நதிகளின் கரைகளிற் குடியேறி, இந்த நதிகளைக் கடந்து செல்லமாட்டாமல் இங்கேயே சிறிது காலம் வசித்துக்கொண்டிருந்தார்கள். இங்கே ஜலம் கடல்போலப் பெருகித் திரண்டிருந்ததனாலே இதனை இவர்கள் "ஸிந்து" என்றார்கள்.

'ஸிந்து' என்னும் சொல்லுக்கு 'பிரவஹிக்கப்பட்டது (ஓடுவது)' என்று அர்த்தம்; அதாவது, 'ஆறு' என்பதாம்; இவர்கள் இதன் கரையிற் குடியேறியிருந்ததனால், இந்த நாடு "ஸிந்து தேசம்" என்னப்பட்டது. ஐரேனியர் (பெர்ஷியர்) இந்த நதியையும், இது பாயும் நாட்டையும் "ஹெறந்து" என்று வழங்கினர்; இக் காலத்தில் வழங்கும் "ஹிந்த்" என்னும் பெர்ஷிய வார்த்தை "ஹெறந்து" என்பதினின்று வந்ததாகும். பெர்ஷியர்களுக்குப் பிறகு இந்தியாவுக்கு வந்த கிரேக்கர் இந்த நதியை "இந்தாஸ்" என்றும், இந்நாட்டு ஜனங்களை "இந்தாய்" என்றும் வழங்கினர்; இதனின்று இப்பொழுது வழங்கும் "இந்தியா" என்னுஞ் சொல் வந்தது.

'இந்து - ஆரியர்' — இந்தியாவிற் குடியேறிய ஆரியர்களை "இந்து-ஆரியர்" என்றும், பெர்ஷியாவிற் குடியேறிய ஆரியர்களை "பெர்ஷோ-ஆரியர்" என்றும் சொல்லலாம். திராவிடருக்கும் இந்து-ஆரியருக்கும் சாயையில் வித்தியாச முண்டு. இவர்கள் குளிர்மிகுந்த நாடுகளிலிருந்து வந்தவர்களானமையால், சிவந்து நெட்டையாக இருந்தார்கள்; இந்தியாவின் பழைய குடிகளோ சூரிய வெப்பத்தினாற் கறுத்துக் குட்டையாக இருந்தார்கள். இந்து-ஆரியர் பேசிய பாஷை "பிராகிருதம்" எனப்படும். இந்தச் சொல்லுக்கு "இயற்கையானது" என்று அர்த்தம். இந்தப் பாஷையில் இவர்கள் கவிகளும் கீதங்களும் பாடினார்கள். இதுவே பிற்காலத்தில் திருத்தமுற்று "ஸம்ஸ்கிருதம்" என்னும் பாஷையாயிற்று. "ஸம்ஸ்கிருதம்" என்னுஞ் சொல்லுக்கு

"நன்றாகச் செய்யப்பட்டது" (திருத்தமுற்றது) என்பது பொருள்.

**ஆரியக் குடியேற்றம்** — ஆரியருள் ஒரு கூட்டத்தார் வந்து விந்து நதிக்கரையில் அமர்ந்த பிறகு, மற்றொரு கூட்டத்தார் ஜில்ஜிட்டு, சித்திரால் என்னும் நாடுகளின் வழியாக இந்தியாவுக்கு வந்து, மலைகளின் அடிவாரங்களை யடுத்துச் சென்று, கங்கையும் யமுனையும் பாயும் சமபூமிகளுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். இவர்கள் கடந்து வந்தது மிகவுங் கஷ்டமான மார்க்கம். கரடு முரடு மிகுந்து, கடப்பதற்குக் கஷ்டமாக இருக்கும் இந்த வழியாக வந்திருப்பதனால், இந்த இரண்டாம் ஆரியக் கூட்டத்தார் தம் மனைவி மக்களுடன் வரவில்லை யென்று ஊகிக்க வேண்டியிருக்கிறது. கங்காதீரத்திற் குடியேறிய பிறகு, அந் நாட்டுக் குடிகளுள் (அதாவது, திராவிடருள்) மனைவிகளைக் கொண்டிருக்க வேண்டும். இவர்களுடைய சந்ததியில் தோன்றியவர்களும் ஆரியர்களெனவே வழங்கப்பெற்று, பல கலைகளும் பயின்று, நாகரிகத்திற் சிறந்து, பேரும் பெருமையும் படைத்து விளங்கினார்கள்.

**ஆதி ஆரியரது தேர்ச்சி** — ஆதியில் ருஷிய எடாரிற் குடியிருந்து ஐரோப்பாவுக்கும் இந்தியாவுக்கும் வியாபித்த இந்து-யூரோப்பிய குலத்து மூலபுருஷர்கள் காட்டுமிராண்டிகளல்லர். ருஷிய எடாரிலிருந்த காலத்திலும் அவர்களுக்கு நற்பயிற்சிகளும் நாகரிகமும் உண்டு. பெர்ஷியாவிலும் இந்தியாவிலும் குடிப்புகுந்த ஆரியர்களின் முற்றொழில்கள் நிலத்தை உழுது பயிர்செய்வது, ஆடு மாடு முதலிய கால் நடைகளை வளர்ப்பது, வீடுகள் கட்டுவது,

வண்டிகள் செய்வது, படகுகள் செய்வது, தாமிரத்தினாலும் இரும்பினாலும் பாத்திரங்களும் ஆயுதங்களுஞ் செய்வது, சணல், கம்பளிமயிர் முதலியவைகளைக்கொண்டு வஸ்திரங்கள் நெய்வது, கோட்டைகளுங் கொத்தளங்களும் கட்டுவது ஆகிய பல பல காரியங்களில் தேர்ச்சியடைந்திருந்தார்கள். இவர்கள் பஞ்சாபுக்கு வந்து குடியேறிய காலத்தில் நாகரிகத்திற் சிறந்தவர்களாக இருந்தார்கள்.

**வேதங்கள்** — ஆதிகாலத்து இந்து-ஆரியர்களுடைய வாழ்க்கையும் வைபவங்களும் வேதங்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. "வேதம்" என்னுஞ் சொல்லுக்கு "அறிவு" என்று அர்த்தம்; இதற்கு "சுருதி" (கேட்டது) என்னும் மற்றொரு பெயர் உண்டு. வேதங்களுள் மிகவும் பழைமையான பாகங்களுக்கு 'மந்திரங்கள்' என்று பெயர்; இவை பல பல தீர்க்கதரிசிகளால் (ரிஷிகளால்) இயற்றப்பட்ட வசனங்களும் கீதங்களுமாகும். சிந்துநதிக் கரையிலும் கங்காநதிக் கரையிலும் வந்து குடியேறியபோது ஆரியர்கள் தம் பழைய ஊரிலிருந்துகொண்டுவந்த பெரிய ஆஸ்திகள் இவையே. ஆயுராரோக்கியாபிவிருத்திகளைத் தந்து காக்கும் பொருட்டுத் தெய்வப் பிரார்த்தனைகளும், மந்திரங்களும், ஸ்தோத்திரங்களும், யஞ்ஞங்களும் வேதங்களில் அடங்கியிருக்கின்றன. இவை வேறு வேறு காலங்களில், வேறு வேறு ரிஷிகளாற் கூறப்பட்டமையின், தொடர்ச்சியாகவும் துறையாகவும் இருப்பதில்லை. இவை மிகப் பழைமைப்பட்டமையின், இவைகளில் விவரிக்கப்படும் முறைகளும் வழக்கங்களும் பிற்காலத்தவருக்குப் புலப்படாமல் ஒழியலாயின.

பின்பு, உள்ளவைகளைக் காப்பாற்றிவைக்கும்பொரு-
ட்டு, மந்திரங்களை யெல்லாந் திரட்டி நான்கு கூறாக்கி-
னார்கள். ஒவ்வொரு கூறும் ஒவ்வொரு 'ஸம்ஹிதை' (தொகுதி) எனப்படும்; இவை ரிக்ஸம்ஹிதை, யஜுஸ்ஸம்ஹிதை, ஸாமஸம்ஹிதை, அதர்வஸம்ஹிதை என்பன; இவையே 'நான்கு வேதங்கள்' என வழங்கப் பெறுவன.

ரிக்வேதம் — ரிக்வேதத்தின் பாகங்கள் சில மற்ற வேதங்களைவிட முற்பட்டனவாகத் தோற்றுகின்றன. வேறு சில பாகங்கள் ஆரியர்கள் பஞ்சாபில் வந்து குடியேறிய பிறகு இயற்றப்பட்டதாகக் காணப்படும். இவைகளில், ஆரியர்களுக்குப் பழைமையான இருப்பிடம் ஒன்று உண்டென்பது குறிக்கப்பட்டிருக்கிறது; பஞ்சாபிலுள்ள ஸிந்து, சீனாப், ஜீலம், ரவி, ஸட்லெஜ் என்னும் நதிகளுங் குறிக்கப்பட்டிருக்கின்றன; தீரம்பொருந்திய மக்கள் பிறக்க வேண்டுமென்றும், கோதனம் பெருக வேண்டுமென்றும், க்ஷேமமுண்டாக வேண்டுமென்றும் தெய்வப்பிரார்த்தனைகள் அடங்கியிருக்கின்றன; கறுத்த தேகமும் சப்பை மூக்குமுள்ள தங்கள் சத்துருக்களோடு ஆரியர்கள் புரிந்தபோர்கள் விவரிக்கப்பட்டிருக்கின்றன; மயக்கங் கொடாமல் உற்சாகம் மாத்திரங் கொடுக்கும் ஸோமரஸத்தைக் கடவுளுக்கு நிவேதனஞ் செய்து குடிக்கும் வழக்கமும் குறிக்கப்பட்டிருக்கிறது. ஆரியர்களுள் தலைமைவாய்ந்து அவர்களுடைய வியவகாரங்களை யெல்லாம் நடப்பித்தவர்கள் ஏழு பெரிய ரிஷி குடும்பத்தார்கள் இருந்தார்களென்பது இந்த ரிக்குகளினால் விளங்குகின்றது. இந்த ஏழு ரிஷிகளின் சந்ததியில் தோன்-

றியவர்கள் தாங்களென்று இக்காலத்துப் பிராமணர்கள் நினைக்கிறார்கள்.

**பஞ்சாபில் ஆரியர் வாழ்க்கை** — ஆரியர்கள் பஞ்சாபில் வாஸஞ் செய்தார்கள் என்பதற்கான குறிப்புகள் ரிக்வேதத்தில் அகப்படுகின்றன வென்று சொன்னோம். ஸிந்துவையும் அதன் உபநதிகளையும் 'ஸப்தஸிந்தவ:' (ஏழு நதிகள்) என வழங்கியிருக்கிறார்கள். இவர்கள் விசாலமாகவும் நன்றாகவுங் கட்டிய வீடுகளில் வசித்துவந்தார்கள். வீடுகளைத் தொகுத்துக் கிராமங்களாக்கி, காட்டு மிருகங்களும் சத்துருக்களும் வந்து வருத்தா திருக்கும்பொருட்டு அந்தக் கிராமங்களைச் சுற்றி மதில்களாவது அகழ்களாவது அமைத்துக் கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட ஆரிய கிராமங்களுக்கெல்லாம் ஒருவனே அதிபதியாக இருக்கவில்லை; இவைகளை அங்கங்கே அனேக சிற்றரசர்கள் ஆண்டுவந்தார்கள். இந்தச் சிற்றரசர்கள் ஒன்றுகூடி, இவர்களுக்குச் சத்துருக்களாகிய பழைய குடிகளோடு சண்டை செய்வார்கள். சில சமயங்களில் இவர்களுக்குள்ளும் சண்டை ஏற்படும்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் தந்தையே தலைவனவன். ஆஸ்தி ஆண்பிள்ளை வழியிலேயே பரம்பரையாக வந்தது. வயதில் மூத்தவனே குடும்பபதி. குடும்பத்தில் ஸ்திரீகளுக்கு மிகுந்த கௌரவமும் மரியாதையும் உண்டு. கிருஹஸ்தன் ஒரு மனைவியையே கலியாணம் செய்து கொள்வான்.

**ஆரிய துரைத்தனம்** — குடும்ப வியவகாரம் சிறிய துரைத்தனமெனவும், ஊர் வியவகாரம் பெரிய

துரைத்தனமெனவுஞ் சொல்லலாம். அதாவது, குடும்பத்தை யாள்வதற்காக ஏற்பட்ட முறைகளும், நாட்டை யாள்வதற்காக ஏற்பட்ட முறைகளும் ஒரு மாதிரியானவை. சண்டை நேர்ந்த காலத்தில் அரசன் தலைவனாக நின்று ஜனங்களைக் காப்பான். ராஜ்யாதிகாரம் பரம்பரையாக வரும் உரிமையாகும். சிலவேளை ஜனங்கள்கூடித் தமக்கு அரசனை ஏற்படுத்திக் கொள்வார்கள்; சில சமயங்களில், ராஜ குடும்பத்தார் சிலர் ஒருமித்து ராஜாங்கத்தை நிர்வகிப்பார்கள். குடிகள் தாமாகவே இறை கொடுத்து அரசனை ஆதரிப்பார்கள். குடிகளுக்குள் உண்டாகும் வழக்குகளைத் தீர்க்கும் நியாயாதிபதி அரசனே; யுத்தகாலத்தில் தளகர்த்தனும் அவனே.

அரசன் ஒருபொழுதும் தன்மனம் வந்தவாறே வியவகாரம் நடத்தினதில்லை; அதாவது, அவனுக்கு நிரங்குசாதிகாரம் கிடையாது. அந்தந்தக் குலத்தாரும், அந்தந்த நாட்டாரும், அந்தந்த இனத்தாரும் சபைகூடி அரசனுடைய அதிகாரங்களை மட்டுப்படுத்தி, அவனுக்கு ஆலோசனைகள் சொல்லி, வியவகாரங்களை நடப்பிப்பார்கள்.

ஜீவன முறைமை — ஆடு மாடுகளை வளர்ப்பதும் பயிரிடுவதுமே அநாதிகாலமாக இவர்களுக்கு முக்கியமான தொழில். மனிதருக்கும் தேவருக்கும் பிரியமான பாலையும் வெண்ணெயையும் தருவதனாற் பசுக்களை இவர்கள் மிகவும் அன்புடன் போற்றி வந்தார்கள். கோதுமை, வாற்கோதுமை, அவரைவர்க்கங்கள், எள்ளு முதலியன பயிரிடுவார்கள். தானியங்களை அறுத்து, போரடித்து, உமிபோக்கி, யந்திரங்களில் அரைத்து மாவாக்கி

ரொட்டி செய்வார்கள்; வேட்டை யாடுவதும், மீன் பிடிப்பதும் உண்டு. ஆனால், இவர்களுக்கு ரொட்டி, பால், வெண்ணெய், கந்தமூலங்கள், பழங்கள் ஆகிய இவைகளே முக்கியமான உணவுப் பொருள்கள்; அருமையாகச் சில சமயங்களில் இறைச்சியைச் சமைத்துத் தின்பார்கள். இவர்கள் பல கைத்தொழில்கள் செய்துவந்தார்கள். இவர்களுள் தச்சர், கொல்லர், குயவர், தோல்பதமிடுபவர், ஆயுதங்கள் செய்பவர் ஆகிய இவர்களும் இருந்தார்கள்.

இவர்களுடைய காலத்தில் பணம் வழங்கவில்லை. ஐசுவரியம் என்பது ஆடுமாடுகளே; இவை கோதனம் எனப்படும். இவர்களுள் வியாபாரம் என்பது பண்டமாற்றே. ஸ்திரீகள் பாய் முடைவார்கள், நூல் நூற்று வஸ்திரங்கள் நெய்வார்கள்.

மதக் கொள்கைகள் — ஆரியருடைய மதக்கொள்கைகள் ரிக்வேதத்திற் காணப்படும் பற்பல வாக்கியங்களாலும் ஆராதனைக் கிரமங்களாலும் விளங்குகின்றன. சூரியன், சந்திரன், வைகறை, மின்னல், நெருப்பு, காற்று, மழை முதலியவைகளை ஆதித்தன், ஸோமன், உஷஸ், இந்திரன், அக்னி, வாயு, வருணன், மருத்துக்கள் என உருவகப்படுத்தித் தொழுது பிரார்த்திப்பதும், இவைகளுள் ஒன்றையே முக்கியமாகவும் எல்லாவற்றிற்கும் ஆதிகாரணமாகவும் பாவித்து வணங்கித் துதிப்பதும், உலகமனைத்தையும் படைத்துக் காக்கும் கடவுள் ஒருவரே என்னும் மதத்தை மேற்கொள்வதும், மனத் தேர்ச்சியடைந்து தத்துவ விசாரணை செய்வதும் ரிக்வேதத்திற் காணலாகும்.

## 3. ஹிந்துஸ்தானம்

வர்ணபேதம் — பஞ்சாபிலிருந்த கருநிறமுள்ள குடிகளை வென்றபிறகு, ஆரியர்கள் ஜனஸமுதாயக்-கட்டுப்பாடுகள் செய்துகொண்டதாகத் தோற்று-கின்றது. குடிப்பிறப்பு, தன்மை, தொழில், தேர்ச்சி முதலியவைகளைக் கொண்டு ஜனங்களை நான்கு வகுப்பாகப் பிரித்தார்கள்: மனப் பயிற்சியும் புத்-தித் திறமையுமுள்ளவர்கள் பிராமணர்கள்; போர் புரியத் தக்கவர்கள் க்ஷத்திரியர்கள்; வியாபாரமும் வியவஸாயமும் செய்பவர்கள் வைசியர்கள் — இம்-மூவரும் ஆரியர்கள்; இவர்கள் வென்று ஆட்-கொண்ட கருநிறத்தவர்கள் சூத்திரர்கள். இந்த ஏற்பாட்டினல், தொழில் தேடி மேற்கொள்வதற்-காக உண்டாகக் கூடிய தொல்லை நீங்கிற்று. ஒவ்-வொரு வர்ணத்தவரும் அவரவருடைய தொழிலை நடத்தி அதனில் தேர்ச்சி யடைந்தார்கள். அந்தத்-தேர்ச்சி, பரம்பரையாக வந்தமையால், வரவர ஒவ்-வொரு தலைமுறையிலும் அதிகப்பட்டது. இந்த வர்ணபேதக் கட்டுப்பாடு ஓர் ஊருக்கும், ஜில்லா-வுக்கும், நாட்டுக்கும் மாத்திரமே உரியதன்று; எந்த ஊரிலிருந்தாலும் ஒரு வர்ணத்தவர்களெல்லாரும் ஒருமித்துக் கலக்குந் தன்மை யுடையவர்களான-தனல், அந்தந்த வர்ணத்தவரும் ஜனஸமுதாயத்-தில் தமக்குரிய நிலைமையை யுணர்ந்து, பொது நன்-மைக்காக உழைக்கலானார்கள். எத்தனை மாறு-பாடுகளினலும் இந்த வர்ணபேதக் கட்டுப்பாடு மாறவில்லை.

கங்காதீரத்திற் குடியேற்றம் — மேற் கண்டபடி மதக் கொள்கைகளையும், ஜனஸமூஹத்தையும் சீர்திருத்திக்கொண்ட ஆரியர்கள் ஸரஸ்வதி என்னும் நதிக்கரையிற் சிறிதுகாலம் தங்கி யிருந்ததாகத் தெரிகிறது. இந்த நதி இப்போது இந்தியப்பாலைவனத்தில் மூடப்பெற்று மறைந்து போயிற்று. இங்கிருந்து இவர்கள் ரோகிற்கண்டு, டெல்லி, மதுரை, ஜயப்பூர் ஆகிய இடங்களுக்குச் சென்று, பின்பு அயோத்தியை, அலகபாத், பொந்திலீகண்டம் (பந்தற்கண்டு), குஜராத், மாளவம் (மால்வா) என்னும் பிரதேசங்களுக்கு வியாபித்தார்கள். இவர்கள் பிரவேசித்த நாடுகளின் தன்மையை யனுசரித்து, இவர்கள் அவைகளைவெல்வதற்கு வேண்டிய பிரயத்தனங்களைச் செய்யவேண்டியதாயிற்று. இந்தியாவின் பழைய குடிகள் கங்காதீரத்தில் ஜனத்தொகை மிகுந்திருந்ததன்றி, வலிமையும் மிகுந்திருந்தார்கள். ஆதலால், இந்த இடங்களிற் பிரவேசிப்பதற்கு ஆரியர்கள் மிகுந்த ஜனக்கட்டோடு போகவேண்டியதாயிற்று. இவ்வளவு பலமான பிரயத்தனம் செய்தாலன்றி இவர்களுக்கு வெற்றி கிட்டாதென்று தோற்றியது. பற்பல சிறிய குலங்களாகப் பிரிந்திருந்த ஆரியர்கள் ஒன்றுகூடிப் பெரிய கோஷ்டிகளாக ஏற்பட்டார்கள்; ஒவ்வொரு சிறிய குலத்திற்கு ஒவ்வொரு தலைவன் இருப்பதைப் போக்கி, ஸமுதாயத்தில் தீரர்களாக இருப்பவர்களைத் தெரிந்தெடுத்துத் தலைவர்களாக்கிக் கொண்டார்கள்.

அரசர்கள் — புதிதாகக் கைப்பற்றிய நாடுகளைக் காப்பதும், தம் ஜனங்களை ஆதரிப்பதும், கலகங்களை அடக்குவதும் மேற்சொல்லிய தலைவர்க-

வின் பொறுப்பாயிற்று. அவர்களுக்குப் பொறுப்பு அதிகரித்ததற்கேற்ப, அதிகாரமும் அதிகரித்தது. இப்படிப் பெரிய ராஜாங்கங்கள் ஏற்பட்டன.

**முக்கியமான ஆரியகுலப் பிரிவுகள்**—ஆதியிலிருந்த சிறியகுலங்கள் பல ஒன்றுகூடிப் பெரியகுலமாக அமைந்ததென்றும், அப்படிப்பட்ட பெரிய குலங்கள் பல ஏற்பட்டனவென்றும், அவை ராஜாங்கங்களாக மாறினவென்றும் கண்டோம். அந்தப் பெரிய குலங்களுள் முக்கியமானவைகளாவன — 1. குருவமிசத்தைச் சேர்ந்த பரதர்கள் (டெல்லிராஜ்யம்), 2. பாஞ்சாலர் (பரதராஜ்யத்திற்கு வடக்கு, கங்கையும் யமுனையும் உற்பத்தியாகுமிடத்திற்குச் சமீபம்), 3. கோஸலர் (கங்கைக்கு வடக்கே, பாஞ்சால ராஜ்யத்துக்குக் கிழக்கே), 4. விதேஹர் (கோஸலராஜ்யத்திற்குக் கிழக்கே திர்ஹுத்), 5. மத்ஸ்யர் (யமுனைக்கு மேற்கே), 6. ஸூரஸேனர் (மத்ஸ்ய ராஜ்யத்திற்குத் தெற்கே), 7. காசிக்காரர் (கங்கையும் யமுனையுங் கூடுமிடத்திற்குக் கீழே), 8. அங்கர் (காசிராஜ்யத்திற்குக் கிழக்கே), 9. மகதர் (காசிராஜ்யத்திற்குத் தென்கிழக்கே). இப்படி ராஜ்யங்கள் அமைத்துக் கொண்டவர்கள் நாட்டுப் பழையகுடிகளை அழித்துவிடாமல், அவர்களை நாளடைவில் தம்மோடு கலந்துகொண்டார்கள். முன்பு ஜில்ஜித் மார்க்கமாகவும், சித்திரால் மார்க்கமாகவும் வந்து கங்காதீரத்திற் குடியேறிய ஆரியர்கள் நாட்டுப் பழையகுடிகளோடு கலந்துபோனார்கள். இப்படி இரத்தக்கலப்பு ஏற்பட்டுக் கொண்டேவந்தபோதிலும், எல்லாரும் ஆரியர்களெனவே கொண்டாடுவது வழக்கமாக இருந்தது.

பிராமணர் — கல்விப் பயிற்சியினால் பிராமணர்கள் நாளடைவில்மிகவும் உயர்ந்த பதவியைப் பெற்றார்கள். கல்விக்களஞ்சியமாகவும், குணக்குன்றாகவும் விளங்கியதனால், அவர்களுக்குக் கௌரவமும், செல்வாக்கும், ஸர்வசக்தியும் பொருந்தின. ராஜரிகத்தையும் துரைத்தன வியவகாரங்களையும் விரும்பாமல் முற்றும் ஒழித்து, அவர்கள் வேதம் ஓதுவதும், மதவிசாரணை செய்வதும், தத்துவ ஆராய்ச்சி செய்வதுமே காரியமாக அமர்ந் திருந்தார்கள். சத்துருக்களோடு போர்புரிவது க்ஷத்திரியர்களுடைய கடமையாயிற்று; அவர்களுக்கு வீரமும் வெற்றியும் அளிக்கும்படியாகத் தேவதைகளை ஆராதித்துத் தெய்வானுக்கிரகம் பெறுவது பிராமணர்களுடைய கடமையாயிற்று. அவர்கள் அன்னத்திற்கு விசாரப்படாமல் மற்ற வர்ணத்தார் வைத்ததனால், மேற்சொல்லிய காரியங்களை அவர்கள் நன்றாகச் செய்துவந்தார்கள்.

பிராமணருடைய வாழ்க்கை கடுமையான கட்டுதிட்டங்கள் பொருந்தியது; இச்சையடக்கமும் ஆத்மதண்டனையுமே அதன் முக்கியமான அம்சங்கள். பிராமணர் தம் தர்மத்தை (கடமைகளை) நிறைவேற்றும் பொருட்டு, அவர்களுடைய வாழ்க்கை நான்கு ஆசிரமங்களாக வகுக்கப்பட்டது:—1. பிரம்மசரியாசிரமம் வேதாத்தியயனமும் சாஸ்திர விசாரணையும் செய்யுங்காலம்; 2. கிருகஸ்தாசிரமம் மனைவியோடு கூடி வாழுங்காலம்; 3. வானப்பிரஸ்தாசிரமம் தத்துவ விசாரணை செய்யுங்காலம்; 4. ஸந்நியாஸாசிரமம் துறவியாகத் திரியுங்காலம்.

**பிராமணங்களும் ஸூத்திரங்களும்**—வேதரிக்குகள் இயற்றப்பெற்ற காலத்தில் ஆரியர்கள் பேசிய பாஷை இப்பொழுது வழங்கப்பெறவில்லை. வேதமந்திரங்களிற் குறிப்பித்த சடங்குகள் பல இப்பொழுது விளங்காமற் போயின. வேதமந்திரங்களும் கணக்கி லடங்காமற் பெருகி நின்றன. ஆதலின், வேதங்களை நான்காகத் தொகுத்து, அவை ஒவ்வொன்றுக்கும் 'பிராமணங்கள்' என்னும் உரைகள் செய்தார்கள். இந்தப் பிராமணங்களிற் பல மதசித்தாந்தங்களும், வைதிகச் சடங்குகள் செய்வதற்கான விதிகளும், புராணக்கதைகளும், வேதவாக்கியங்களுள் கடினமான பாகங்களுக்கு விருத்தி யுரையும் அடங்கி யிருக்கின்றன.

சடங்குகளும், வி[illegible]வகைகளும் மிகுதியாக ஏற்பட்டமையின் அவைகளைக் கவனமாகத் தெரிந்துகொண்டு நடப்பிப்பதற்குப் புரோகிதர்கள் ஏற்பட்டார்கள். வைதிகச் சடங்குகளுக்குரிய விதிகளையும், வைதிக லௌகிக ஆசார முறைகளையும் எளிதில் ஞாபகப்படுத்திக்கொள்ளும்பொருட்டு அவைகளைச் சிறு வாக்கியங்களில் அமைத்து, அந்த வாக்கியங்களுக்கு 'ஸூத்திரங்கள்' எனப் பெயரிட்டார்கள்.

**மனப்பயிற்சி**—ஆரியர்களின் இருப்பிடம் மாறுபட்டதனாலும், ஸந்தர்ப்பங்கள் மாறுபட்டதனாலும், இவர்கள் மனப்பயிற்சிக்காக ஊக்கமுடன் உழைக்கவும், மதக்கொள்கைகளை ஆராய்ந்து சீர்ப்படுத்தவும் அனுகூல முண்டாயிற்று. [illegible]ங்காதீரம் முழுதும் இந்து-ஆரியருடைய வசமாயிற்று. இ[illegible]கள் பந்தற்கண்டு (பொந்திலீ கண்டம், சேதிதேசம்),

மால்வா (நிஷத தேசம்) முதலியவைகளிற் குடியேறின தல்லாமல், விந்தியமலையைக் கடந்து பீரார்ஸ் (விதர்ப்ப தேசம்) தேசத்திலும் வியாபித்தார்கள். அங்கிருந்து மற்றப் பக்கங்களுக்குஞ் சென்று இந்தியா முழுதும் பரவினார்கள்.

புரோகித குலமும் க்ஷத்திரிய குலமும் தலையெடுத்து ஓங்கின தனால், மத சம்பந்தமான காரியங்களும், போர்த்தொழிற் காரியங்களும் மற்ற வர்ணத்தாருக்கு இல்லாமற் போயின. ஆகையால் அவர்கள் தங்கள் தங்களுக்குரிய தொழில்களைக் கவனிக்கவும், அவைகளில் தேர்ச்சியடைந்து முன்னுக்கு வரவும் அனுகூல முண்டாயிற்று. நாட்டிற் செல்வம் செழித்தது, அரசர்களுக்குப் பலமும் பெருமையும் அதிகரித்தன. எல்லைநாடுகளிற் சண்டைகள் நடந்தபோதிலும், உள் நாடுகளில் அமைதி குடிகொண்டிருந்தது. வியவகார விஷயங்களெல்லாம் ஒருவழியாக ஒழுங்குபட்டதனால், மத சம்பந்தமான விஷயங்களிலும் நீதிசாஸ்திரத்திலும் ஜனங்கள் மனஞ் செலுத்தத் தலைப்பட்டார்கள். கல்வியின்மேல் ஆசை மிகுந்தது; பிராமணர்களுள் பிரம்மசரியமும் ஸந்நியாஸமும் வித்தியாபிவிருத்திக்கு அனுகூலமான நிலைமைகளாகப் பிரபலமாயின. தத்துவ விசாரணைக்குச் சாதகமாக உபநிஷத்துக்களும், ஸாங்கியம் முதலிய ஷட்தரிசனங்களும் உண்டாயின. பலபல நூல்கள் புதிதாக ஏற்பட்டன. வியாகரணம், சிக்ஷை, சந்தஸ், நிருக்தம், க்ஷேத்திரகணிதம், ஜோதிஷம், ஸங்கீதசாஸ்திரம், வைத்தியம், சஸ்திர சிகிச்சை முதலிய சாஸ்திரங்களும் ஏற்பட்டன. இவையன்றி, மனிதன்

கடவுளுக்குப் பிரீதியாகச் செய்யவேண்டியகடமை-களையும், ராஜாங்கத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகளையும், குடும்பத்திற்குச் செய்ய வேண்டிய கடைமைகளையும் வகுத்துக் கூறுஞ் சட்டங்கள் உண்டாயின. இந்த ஒழுக்க முறைகளும், வழக்கங்களும், விதி விலக்குகளும் "மானவதர்ம சாஸ்திரம்" என்னும் கிரந்தத்திற் காணலாகும். வெகு காலத்திற்குப் பிறகு, இவர்களுடைய வைத்தியம், ஜோதிஷம், கணிதம் முதலான சாஸ்திரங்களை அரபி தேசத்தாரும் ஐரோப்பா கண்டத்தாரும் கற்றுக்கொண்டார்கள்.

கல்விப்பயிற்சி மிகுந்ததனால், தேர்ந்த கவிவாணரும் தோன்றினார்கள். புதிதாகக் குடியேறிய ஜனங்களுடைய சரித்திரங்களும், அவர்களுக்கு நேர்ந்த யுத்தங்களின் சிறப்பும், வீரர்களின் பெருமையும் கவிபாடுவதற்கேற்ற நல்ல விஷயங்களாக அமைந்தன. அனேக கதைகள் அங்கங்கே வழங்கலாயின. இப்படிப் பாடப்பெற்ற கிரந்தங்களுள் மிகப் பிரபலமானவை ராமாயணமும் மகாபாரதமும் ஆகும். இவைகளில் தேசசரித்திர சம்பந்தமான உண்மைகளும், யுத்தங்களின் விவரங்களும், பற்பல நீதிகளும், ஒழுக்கமுறைகளும், சிறப்பான வர்ணனைகளும் அடங்கியிருக்கின்றன. இவை அயோத்தியில் ஆண்டுவந்த பெரிய க்ஷத்திரிய வமிசத்தாரது செயல்களையும், டெல்லி மாகாணத்திலுள்ள ஹஸ்தினபுரத்தில் ஆண்டுவந்த மற்றொரு க்ஷத்திரிய வமிசத்து விருத்தாந்தங்களையும் விளக்குகின்றன.

**ராமாயணம்** — ராமாயணம் என்பது, அயோத்தியின் மன்னரும் ஸ்ரீ விஷ்ணுவின் அவதாரமு-

மாகிய ஸ்ரீராமர், சிறியதாயாருக்குத் தமது தந்தை கொடுத்திருந்த வாக்குக்கு லோபம் வாராவண்ணம், வனவாஸஞ்செய்து பட்ட பலவித கஷ்டங்களையும், சத்துருக்களோடு போர் செய்து வெற்றி பெற்ற வைபவங்களையும் விவரமாகக் கூறுங் கிரந்தம். இதில் பல நீதிகளும் உண்மைமொழிகளும் அடங்கியிருக்கின்றன. இந்தக் கதையைச் சுருக்கமாக இங்கே சொல்வோம்.

அயோத்தியிலிருந்து அரசாட்சிசெலுத்திவந்தவர்கள் சூரியகுலத் தரசர்கள். அவர்களுள் தசரத சக்கரவர்த்தி என்பவர் பிரசித்தி பெற்றவர். அவருக்குக் கோஸலை, கைகேயி, ஸௌமித்திரை என்று மூன்று மனைவியர் இருந்தனர். கோஸலையின் வயிற்றிற் பிறந்த பிள்ளைக்கு ராமர் என்றும், கைகேயியின் வயிற்றில் தோன்றியவருக்குப் பரதர் என்றும், ஸௌமித்திரையின் கர்ப்பத்தி லுதித்தவர்களுக்கு லக்ஷ்மணர் என்றும் சத்ருக்னர் என்றும் பெயர். இவர்களுள், ராமரோடு லக்ஷ்மணரும், பரதரோடு சத்ருக்னரும் இணைந்திருப்பார்கள்.

ராமருக்குப் பதினாறு வயது நிரம்பிய போது, விசுவாமித்திர முனிவர் வந்து, தாம் செய்யும் யாகத்தைக் காக்கும் பொருட்டு ராமரையும் லக்ஷ்மணரையும் அழைத்துக் கொண்டு போனார். போகும் வழியில் தாடகை என்னுங் கொடிய ராக்ஷஸியை ராமர் அம்பினாற் கொன்றார்.

யாகம் நிறைவேறிய பிறகு, விசுவாமித்திரர் அவ் விளைஞர் இருவரையும் அழைத்துக் கொண்டு மிதிலாநகரஞ் சென்றார். அங்கே அரசாண்டு



விசுவாமித்திரரும் ராம லக்ஷ்மணரும்.

கொண்டிருந்த ஜனகமகாராஜர் தம் அருமைப் புதல்வியாகிய சீதைக்கு ஏற்ற வரன் கிடையா-மற் சிந்தித்துக் கொண்டிருந்தார். ஏனெனின், தம்-மிடத்திருந்த பெரிய வில்லை வளைத்து நாணே-ற்றுகிறவருக்கே அவளைக் கலியாணஞ் செய்து கொடுக்கவேண்டுமென்பது அவருடைய சங்கற்-பம். அனேக ராஜகுமாரர்கள் வந்து அந்த வில்-லுக்கு நாணேற்றமாட்டாமற் பின்னடைந்தார்கள். விசுவாமித்திரரது அனுமதியின்மீது ராமர் அந்த வில்லை வளைத்து நாணேற்றி முறித்துவிட்டார். ஜனகமகாராஜர் கண்டு களித்து, அவருக்குச் சீதா-தேவியைப் பாணிக்கிரகணம் செய்வித்துக் கொடுத்-தார்.

கலியாணக் கோலத்துடன் ராமர் அயோத்-திக்குத் திரும்பி வந்து சேர்ந்து சில நாளைக்குப் பிறகு, மூப்பு மிகுந்த தசரதசக்கரவர்த்தி தம் ராஜ்-யத்தை அவருக்கு ஒப்புவித்துத் தாம் ஒழிவடைந்-திருக்கக் கருத்துக் கொண்டார். ராமருக்குப் பட்டாபிஷேகஞ் செய்வதற்கான பிரயத்தனங்கள் நடந்துகொண்டிருக்கையில், கைகேயி என்னும் ராணி தசரத சக்கரவர்த்தியை நோக்கி, “முன்பு எனக்கு இரண்டு வரங்கள் தருவதாக வாக்களித்-திருந்தீர்களே. அவ் வரங்களை இப்பொழுது தர-வேண்டும்” என்றாள். அவர் வாக்குத் தப்பமாட்-டாமல் உடன்படவே அவள், “1. பரதனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்ய வேண்டும், 2. ராமனைப் பதினான்கு வருஷம் காட்டிற்கு அனுப்ப வேண்டும்” என்றாள். இந்த வார்த்தைகளைக் கேட்டு அவர் அயர்ந்து வீழ்ந்தார். இதை யுணர்ந்த ராமர், தந்-

தையின் வாக்குக்கு லோபம் வாராமற் காக்கக்-கருதி, சந்தோஷமாகக் கானகஞ்சென்றார். அவருடன் சீதையும் லக்ஷ்மணருஞ் சென்றார்கள்.

ஸ்ரீராமரும், சீதையும், லக்ஷ்மணரும் தண்டகாரண்யத்தி லிருக்கும் நாளில், லங்கைத் தீவுக்கு அதிபதியாகிய ராவணன் என்னும் ராக்ஷஸன் சீதை-



ராவண ஸந்நியாசி

யின்மீது மோகங் கொண்டு, சூது செய்து ராம-லக்ஷ்மணர்களைச் சீதையைவிட்டுப் பிரித்து, அவள் தனியே இருந்த தருணத்தில் ஸந்நியாஸிவேஷம் பூண்டு பர்ணசாலைக்கு வந்து, அவளைப் பலாத்-

காரமாகத் தேரிலேற்றிச் சென்று, அசோக வனத்-திற் சிறைவைத்தான்.

ராமலக்ஷ்மணர்கள் சீதையைக் காணமல் தேடித்திரிந்து, வானரப் படைகளின் உதவியினுற் சமுத்திரத்திற்கு அணை கட்டி, லங்கைக்குச் சென்று, ராவணனோடு போர் புரிந்து வென்று, அவனைக் கொன்று, அவனுடைய தம்பி விபீஷணனுக்குப் பட்டங்கட்டி, சீதையைச் சிறைமீட்டுக்கொண்டு அயோத்திக்கு வந்து, நெடுங்காலம் அரசுபுரிந்து கொண்டிருந்தார்.

மகாபாரதம் — இதனிற் பெரும்பாகம், யமு-னையாற்றுக்கு மேற்புறத்தில், இப்பொழுது டெல்லி-நகர் இருக்கு மிடத்திற்குச் சமீபத்தில் ஹஸ்தின-புரம் என்னும் ராஜ்யத்தை ஆண்டுவந்த சந்திர-வமிசத்துக் குடும்பங்கள் இரண்டுக்கும் நேர்ந்த பெரிய யுத்தத்தின் விவரமாகும். பரதன் என்ப-வன் பண்டைக் காலத்து அரசருள் ஒருவன்; அவ-னுடைய சந்ததியார் பாரதர்; பாரதரைப் பற்றிச் சொல்வது 'பாரதம்;' 'மகா' என்றால் 'பெரிய' என்று அர்த்தம். ஆகையால், 'மகா பாரதம்' என்பது 'பரதனுடைய சந்ததியார்களுக்குள் நடந்த பெரிய சண்டையின் விவரம்' ஆகும்.

கதையின் சுருக்கம் — ஹஸ்தினபுரத்து அரச-னுக்குத் திருதராஷ்டிரன் என்றும் பாண்டு என்-றும் இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். திருத-ராஷ்டிரன் பிறவிக் குருடனானமையின், ராஜ்யாதி-காரம் வகிக்கக் கூடாதவனானன்; பாண்டுவே அர-சாண்டுவந்தான். இருவருக்கும் விவாகம் நடந்தது. திருதராஷ்டிரனுக்குத் துரியோதனன் முதலாக

நூறு பிள்ளைகள் பிறந்தார்கள்; பாண்டுவுக்குத் தருமபுத்திரர், பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன் ஆகிய ஐந்து பிள்ளைகள் பிறந்தார்கள். திருதராஷ்டிரனுடைய மக்களுக்குக் கௌரவர் என்றும், பாண்டுவினுடைய புத்திரர்களுக்குப் பாண்டவர்கள் என்றும் பெயர்.

பாண்டுமகாராஜன் இறந்தபோது, பாண்டவர்களும் கௌரவர்களும் இளைஞர்களானமையால், வேறொரு பிரதிநிதி அரசு செலுத்திவந்தான். இரண்டு குடும்பத்துச் சிறுவர்களும் துரோணாசாரியரிடத்தில் வில்வித்தை முதலியன பயின்றுகொண்டிருந்தார்கள். பாண்டவர்கள் நற்குணமும் நல்லொழுக்கமு முடையவர்களாய் வித்தைகளைக் கற்று யோக்கியர்களாகத் தேர்ந்து விளங்கினார்கள். கௌரவர்கள் பொறாமை முதலிய துர்க்குணங்களுக்கும் துஷ்ட சரியைகளுக்கும் இருப்பிடமாய்ப் பாண்டவர்களைப் பகைத்து வஞ்சிப்பதே முக்கிய காரியமாக இருந்தார்கள்.

வியவகாரயோக்கியமான வயது வந்தவுடனே பாண்டவர்களும் கௌரவர்களும் ராஜ்யாதிகாரத்தை நாடினார்கள். எந்த வகையிலாவது பாண்டவர்களைக் கொன்றுவிட்டு ராஜ்யம் முழுமையும் தாமே ஆளவேண்டுமென்று கௌரவர்கள் பலபல சதிக் காரியங்கள் செய்தார்கள். முடிவில், அரக்கு மாளிகை யொன்று அமைத்து, அதனிற் பாண்டவர்களுக்கு விருந்தளித்து, அங்கேயே அவர்களை உறங்கவைத்தார்கள். நடுநிசியில் அரக்குமாளிகைக்குத் தீ வைத்து விட்டார்கள். இந்தத் தந்திரத்தை யுணர்ந்து பீமன் தன் சகோதரர்களையுப்

தாயையும் தூக்கிக்கொண்டு வெளியேறி, வேற்றாருக்குப் போய்ச் சேர்ந்தான். பாண்டவர்களெல்லாரும் அரக்குமாளிகையில் மடிந்து போனார்களென்று நினைத்துத் துரியோதனன் சந்தோஷமாக ராஜ்யாதிகாரம் மேற்கொண்டான்.

பாஞ்சாலதேசத் தரசனான திருபதராஜனுடைய மகள் திரௌபதியின் ஸ்வயம்வரத்திற்குத் துரியோதனன், கர்ணன் முதலான ராஜகுமாரர்களும் சூரர்களும் வந்து, அங்கே கட்டியிருந்த மச்சயந்திரத்தை அம்பினால் பேதிக்கமாட்டாமற் கைசோர்ந்து முகம்வாடி அவமானமுற்று நிற்கையில், பாண்டவருள் வில்வீரனாகிய அர்ஜுனன் அந்த மச்சயந்திரத்தை முறைப்படி அம்பினா லடித்து வெற்றி கொண்டான். அதற்குப் பரிசாகத் திரௌபதியைப் பாண்டவர்கள் மனைவியாகப் பெற்றார்கள். இதனால், பாண்டவர்கள் இன்னும் உயிரோடிருக்கிறார்களென்னும் பெருந் துக்கமும், அழகிற் சிறந்த திரௌபதியை அவர்கள் மனைவியாகப் பெற்றார்களென்னும் பொறாமையும் துரியோதனனுக்கு மிகுந்தன.

இனிப் பாண்டவரைச் சமாதானப் படுத்த வேண்டியது அவசியமெனக் கருதித் திருதராஷ்டிரன் தென்பாதி ராஜ்யத்தை அவர்களுக்குக் கொடுப்பித்தான். அவர்கள் டெல்லிக்குச் சமீபத்தில் இந்திரப்பிரஸ்தம் என்னும் நகரை நிர்மித்துக் கொண்டார்கள். ஆயினும், அவர்களை எவ்வகையிலாவது தொலைப்பதே சிந்தையாகக் கொண்ட துரியோதனன் ஓர் அரண்மனை கட்டி, அதன் கிருஹப் பிரவேச காலத்தில் விருந்தினராகப் பாண்டவர்களை

வரவழைத்தான். விருந்துண்ட பிறகு, பொழுது போக்கும் பொருட்டுச் சொக்கட்டான் ஆடலாமென்று தருமபுத்திரரைத் துரியோதனன் அழைத்தான்.

சூது சும்மாவிடுமா? 'சூதும் வாதும் வேதனை செய்யு'மல்லவா? தருமபுத்திரர் தம் ராஜ்யத்தையும், தம் தம்பிமாரையும், திரௌபதியையும், தம்மையும், ஒவ்வொரு பந்தயமாக வைத்து ஆடித் தோற்றார். அப்போது, பன்னிரண்டு வருஷம் வனவாஸஞ் செய்து, ஒருவருஷம் அஞ்ஞாதவாஸஞ் செய்து (ஒருவர் கண்ணிலும் அகப்படாமல் மறைந்திருந்து), பதினான்காம் வருஷ ஆரம்பத்தில் வந்தால், பாண்டவர்கள் இழந்த ராஜ்யத்தைத் திருப்பிக்கொடுப்பதாகத் துரியோதனன் சொன்னான். பாண்டவரும் பாஞ்சாலியும் காட்டிற் கடுங்காலங் கழித்துவருகையில், துரியோதனன் அவர்களுக்கு அனேக இடையூறுகள் செய்தான். பதின்மூன்றாம் வருஷம் அவர்கள் விராடராஜனது அரண்மனையில் மாறுவேஷம் பூண்டு வேலைகளில் அமர்ந்து மறைந்திருந்தார்கள். பதினான்காம் வருஷத்தில், துவாரகாநாதராகிய ஸ்ரீ கிருஷ்ணபகவானைத் தூதனுப்பிப் பாண்டவர்கள் தம் ராஜ்யத்தைக் கேட்டனர்.

முன்பு சொல்லியபடி ராஜ்யத்தைத் திருப்பிக்கொடுக்கத் துரியோதனன் இசையாததனாற் கடும்போர் விளைந்தது. அவரவர்களுக்கு வேண்டிய அரசர்கள் அவரவர்களுக்குத் துணையாக வந்து சேர்ந்தார்கள். பாண்டவர்களுக்கு முக்கியமான துணைவர் ஸ்ரீ கிருஷ்ணபகவான். குருக்ஷேத்திரத்தில் (இப்பொழுது தானேசுவரத்திற்கு அருகிலுள்ள

பாணிப்பட்டு என்னும் இடத்தில்) பதினெட்டு நாள் பெரும் போர் நடந்தது. அதனிற் கௌரவர்களெ-ல்லாரும் மாண்டார்கள். பாண்டவர்கள் வெற்றி பெற்று ராஜஸூய யாகஞ்செய்து, நெடுங்காலம் சிறப்புடன் அரசாண்டார்கள்.

மகாபாரதம் பதினெட்டுப் பருவங்களடங்கிய இதிஹாஸம். இது புராணகர்த்தராகிய வியாஸ பகவானால் இயற்றப்பட்டது. இது ஏறக்குறைய 100,000 சுலோகங்கள் அடங்கியது.

ராமாயண மகாபாரதங்களின் பிரயோஜனம் — பூர்வத்து ஆரியர்களுடைய வழக்கங்களையும், காரி-யங்களையும், கொள்கைகளையும், ஒழுக்கங்களையும் இவைகளினின்று தெரிந்துகொள்கின்றோம். ஆரி-யர்கள் தென்இந்தியாவைக் கைப்பற்றிய வரலாறு ராமாயணத்தினால் விளங்குவதாகக் கொள்ளலாம். க்ஷத்திரியர்களுக்குள் நடந்த பெரிய யுத்தத்தை விவரிப்பது மகாபாரதமாகும். இவ்விரண்டு நூல்-களும் பல நீதிகளையும் நல்லொழுக்கங்களையும் வற்-புறுத்துகின்றன. கவிகளின் திறமையை நன்கு விள-க்குகின்றன; அனேக தத்துவ விஷயங்களை உருவ-கக்கதைகளாகப் போதிக்கின்றன. சுகம் நேர்ந்த காலத்தும், துக்கம் நேர்ந்த காலத்தும், ஜனங்கள் இவைகளைப் படித்து மனந்தேறி ஊக்கமுற்றுத் தம் கடமைகளைச் செய்து திருப்தியடைகிறார்கள். ஆகையால், இவை இந்தியர்களுக்குள்ள பழைமை-யான ஆஸ்திகளாகும்.

# 4. ஜைனமும் பௌத்தமும்

**புதியசமயங்கள்** — ஜனங்கள் விசேஷமாக மனப்பயிற்சி செய்துவந்தார்களென்று முன் அத்தியாயத்திற் கூறினோம். அந்தப் பயிற்சி வெகுகாலம் நடந்துவந்ததன்பயனாக, கி-மு. ஏழாம் நூற்றாண்டின் இறுதியில், புதிய மதக்கொள்கைகள் பல தலையெடுத்தன. பிறப்பிறப்புக்களினாலாகிய சமுசாரத்துக்கத்தினின்று நீங்குவதே அவைகளின் முக்கியமான கருத்து. மானிடதேகத்திற்குரிய துன்பங்களையும், மனிதர்கள் படுங் கஷ்டங்களையும், ஆயுள் ஆரோக்கியம் ஐசுவரியம் அநுபவம் முதலியன ஜனங்களெல்லாருக்கும் ஒரே அளவாக இல்லாமையையும், உலகத்து வஸ்துக்களின் நிலையாத்தன்மையையுங் கண்டு ஜனங்கள் மனம்வாடி நின்றார்கள். தத்துவ விசாரணையிற் சிறந்த பிராமணர்கள் தவத்தில் அமர்ந்து, மற்றவர்களுடன் கலக்கவில்லை. துறவுமார்க்கமே சிறந்ததென நினைத்து ஜனங்கள் அதனை நாடினார்கள். ஆனால், பிராமணர்களுக்கன்றி மற்றவர்களுக்கு, பிராமண மதத்தின்படி, ஸந்நியாஸம் ஏற்படவில்லை. பிராமணர் விதித்துள்ள கர்ம விசேஷங்களில்லாத ஸந்நியாஸம் வேண்டுமென்னும் விருப்பம் ஜனங்களுக்கு உண்டாயிற்று. இந்தக்காலத்தில் ஏற்பட்ட புதியசமயங்கள் பலவற்றுள் சிறந்தோங்கி நீடித்து நின்றவை ஜைனமும் பௌத்தமுமாகும்.

**ஜைனமதம்** — ஜைனம், பௌத்தம் என்னும் இரண்டனுள் ஜைனமதமே முற்பட்டது. இந்த மதத்தை ஸ்தாபித்த வர்த்தமானர் என்பவர் ஏறக்-

குறைய கி-மு. 599-ஆம்வருஷத்திற் பிறந்தவர். இவர் விதேகராஜ்யத்துத் தலைநகராகிய வைசாலி என்னும் நகரிலிருந்த ஸித்தார்த்தர் என்னும் க்ஷத்திரியப்பிரபுவின் மைந்தர். பெற்றோர்கள் இறந்துபோன பிறகு, இவர் துறவியானார். தவம் பண்ணி ஞானோதயம் பெற்று, லௌகிக சம்பந்தங்களை யெல்லாம் முற்றும் விட்டொழித்ததற்கு அடையாளமாகத் தம் ஆடைகளைக் களைந்தெறிந்தார். பத்து வருஷகாலம் சிஷ்யர்களைச் சம்பாதித்துக்கொள்ளும்பொருட்டு, பேஹார் தேசத்தில் (மகதராஜ்யத்தில்) திரிந்து கொண்டிருந்தார். 42-ஆம் வயதில் பூர்ணஞானம் பெற்று "மகாவீரன்" என்றும், "ஜினன்" என்றும் பெயர் பூண்டார். 'ஜினன்' என்றால் 'வெற்றிகொண்டவன் (விஜயன்)' என்று அர்த்தம். ஜினனுடைய மதம் 'ஜைனமதம்' என வழங்கப் பெற்றது. தமிழில் சமணமதம் எனப்படுவதும் இதுவே. அது முதல் முப்பது வருஷகாலம் பேஹார் (மகதம்), திர்ஹுத் (விதேஹம்), அயோத்தியை (கோஸலம்) என்னும் ராஜ்யங்களில் தம் மதத்தைப் பரவச்செய்து, சிஷ்யர்களைச் சேர்த்துக்கொண்டிருந்தார். அனேகரை ஜைனர்களாக்கி, மதானுஷ்டான முறைகள் ஏற்படுத்திவிட்டு, ஏறக்குறைய கி-மு. 527-ஆம் வருஷத்தில் நிர்வாண மெய்தினார். சிறிது காலத்திற்குப் பிறகு இந்த மதம் குஜராத்து தேசத்தில் அரசர்களால் ஆதரிக்கப்பட்டது.


அவருடைய கொள்கைகளாவன — ஆரியர், சூத்திரர், மிலேச்சர் முதலான எல்லாச் சாதியாரும் ஜைனமதத்திற் சேர்ந்து முக்தியடையலாம்; 2. முக்தி அல்லது மோக்ஷம் என்பது பிறப்பிறப்பு

என்னுஞ் சக்கரத்தினின்று விடுவிக்கப் பெறுவதாகும்; 3. ஜினனையும் அவனுடைய போதனைகளையும் உறுதியாக நம்பி, நல்லொழுக்க முற்றுத் தவநிலை மேற்கொண்டு, காமக் குரோதாதிகளுக்கு இடங்கொடாமல், உலகவிஷயங்களிற் பற்றுக்கொண்டு உழலாமல், மனத்தினுலும் வாக்கினுலும் செய்கையினுலும் மற்றப் பிராணிகளுக்குத் தீமை செய்யாமல், பாவமான காரியங்களில் தலையிடாமல், ஜீவகாருண்ய மேற்கொண்டு ஒழுகுகிறவர்களெல்லாரும் மோக்ஷ மடையலாம்; 4. உலகவியவகாரங்களை விட்டொழிக்க மாட்டாதவர்கள் ஜினனை நம்பி, இச்சையடக்கி, நன்னெறியில் நடப்பார்களானுல், அவர்களுக்கு மோக்ஷம் கிடையாதாயினும், மோக்ஷம்பெறுவதற்கான சாதனங்களைத் தேடிக்கொண்டவர்களாவார்கள். இந்த மதத்திற்கும் பௌத்தமதத்திற்கும் சில விஷயங்களில் ஒற்றுமை யுண்டு.

**பௌத்தமதம்** — புத்தருடைய மதம் 'பௌத்தம்.' புத்தர் என்னுஞ் சொல்லுக்கு 'ஞானோதயம் பெற்றவர்' என்று அர்த்தம். அவருக்குப் பூர்வ நாமம் ஸித்தார்த்தர்; குடும்பப் பெயர் கௌதமர். பேஹாருக்கு (மகதராஜ்யத்திற்கு) வடக்கே ஹிமாலயத்தின் அடிவாரத்தில், நேபாள ராஜ்யத்திலுள்ள *கபிலவாஸ்து என்னும் பட்டணத்தில், ஏறக்குறைய கி-மு. 567-ஆம் வருஷத்தில் இவர் பிறந்தார். இவருடைய தந்தை சுத்தோதனர் க்ஷத்திரிய குலத்தைச் சேர்ந்த சாக்கியர் என்னும் வகுப்பாருக்குத் தலைவர்; இவருடைய தாயார் மாயாதேவி எனப்படுவாள்.

* காசிக்கு வடக்கே 110 மைல் தூரத்திலுள்ளது.

இவர் தம் நிலைமைக்குரியபடி, பல கலைகளையும் வித்தைகளையுங் கற்றுத்தேறி, செல்வமும் சிறப்பும் பெருவாழ்வும் மங்களமும் ஆனந்தமும் சூழப் பெற்றிருந்தார். ஆயினும், உலகசுகத்தில் இவர் ஈடுபடவில்லை; வாழ்க்கையில் இவருக்கு உருசியில்லை. மானிட தேகத்திற்கு இன்றியமையாத நோய் மூப்புச் சாக்காடுகளைப் பற்றியே அடிக்கடி சிந்தித்துக்கொண்டிருந்தார். இவருக்குக் கலியாணம் ஆயிற்று, ஓர் ஆண் குழந்தையும் பிறந்தது. சமுசாரத்தில் விருப்பமில்லாமல், 29-ஆம் வயதில் இவர் மனையையும் மனைவியையும் மகனையும் மற்றவர்களையும் விட்டு, மன வமைதியை நாடித் திரிந்தார். இரண்டு வருஷகாலம் பிராமணர்களிடத்தில் தத்துவ சாஸ்திரங்கள் படித்தார். இவைகளினால் மனத்துக்குச் சமாதானம் உண்டாகாமையால், உருவேலக் காட்டுக்கு (இக்காலத்துப் புத்த-கயைக்குச் சமீபம்) ப்போய்த் தவஞ் செய்து, அதனிலும் சமாதானம் கிட்டாமல், மறுபடி உலகத்திற்குத் திரும்பி வந்தார். சிறிது காலஞ் சென்ற பின்பு, ஒரு நாள் இரவில், இவர் தியானத்தில் ஆழ்ந்திருக்கையில் ஞானோதயமாயிற்று. இதுவரையில் தேடித்திரிந்த உண்மை வெளியாயிற்று என்று நினைத்தார். உடனே இவருக்குப் பரம சாந்தியும் சமாதானமும் உண்டாயின. அதுமுதல் இவர் தன்னய மறுத்து உலகத்தவருக்கு ஞானோபதேசஞ் செய்வதே காரியமாகப் புறப்பட்டார். 45-வருஷகாலம் இந்தக் காரியத்தில் அமர்ந்திருந்தார். பூததயை, அன்பு, அமைதி ஆகிய இவைகளுக்கு இருப்பிடமாக விளங்கினர். போதிப்-



புத்த கயை

பதற்கு ஏற்றபடி ஒழுக்கமும் பொருந்தியிருந்ததனுல், இவருடைய வார்த்தைக்கு மரியாதையும் மகிமையும் ஏற்பட்டன. பிரஸங்கஞ் செய்வதிற் சிறந்த தேர்ச்சியடைந்து, கேட்பவர் மனத்தைக் கவருந் திறமை படைத்தார். அனேக ஆயிரம் ஜனங்கள் இவருக்குச் சிஷ்யர்களாகி, இவருடைய மதத்தை யனுஷ்டிக்கலானுர்கள்.



கௌதம புத்தர்

இவருடைய கொள்கைகளாவன — 1. ஜன்மமெடுத்தவர்களெல்லாரும் துன்பத்தில் ஆழ்ந்தினவர்களே. வாழ்க்கையில் துக்கமேயொழியச் சுகமில்லை. மரணத்தினுல் இந்தத் துக்கம் தீர்வதில்லை. ஏனெனில், அதன் பிறகு மறுஜன்மம் வருகின்றது; 2. இந்தத் துன்பத்திற் கெல்லாம் மூலகாரணம் ஆசை—உயிர் வாழவும், இந்திரிய சுகங்களை யனுப-

விக்கவும், மிகுந்த சக்திகளைப் பெறவும் ஆசை. இந்த ஆசை ஒழிந்தால் துன்பம் ஒழியும்; 3. ஆசையை ஒழிப்பதற்கு உபாயம் "மேன்மையான அஷ்டபத மார்க்க" மாகிய நன்னெறியைக் கடைப் பிடித்தொழுகுதலாம். அஷ்டபத மார்க்கத்தின் எட்டு அமிசங்களாவன — நேர்மையானநம்பிக்கை, நேர்மையானநோக்கம், நேர்மையானவாக்கு, நேர்மையான காரியம், நேர்மையான வாழ்க்கை, நேர்மையான முயற்சி, நேர்மையானஎண்ணம், நேர்மையான சிந்தனை; 4. நீதியாக நடக்க வேண்டும், பெரியாரைப் போற்ற வேண்டும், ஞானிகளுக்குப் பணிவிடைகள் செய்து பூஜிக்கவேண்டும், நற்காரியங்கள் செய்யவேண்டும்; 5. இரக்கம், தருமம், மதுவிலக்கு, அடக்கம், திருப்தி, நன்றி, பொறுமை, இச்சையடக்கம், பூததயை (பிராணிகளிடத்து அன்பு) ஆகிய இவைகளை மேற்கொள்ள வேண்டும்; 6. தர்மங்களுள் சிறந்தது ஜீவவதைசெய்யாமை (அஹிம்ஸா பரமோ தர்மः).

அனேகர் இம் மதத்தைப் பின்பற்றினர். தம் மதத்தைப் பரவச்செய்வதற்காகப் புத்தர் மடங்களை ஏற்படுத்தி, ஸ்திரீகளும் புருஷர்களும் துறவு பூண்டு பிக்ஷுகர்களாக அங்கங்கே சென்று மதபோதனை செய்ய ஏற்பாடுகள் பண்ணினர். இந்தியாவில் அரசர்கள் இம் மதத்தையனுஷ்டித்துப் பிரபலப் படுத்தினார்கள்; பிறத் தேசங்களிலும் இது பரவியது. இவர் ஏறக்குறைய கி-மு. 487-ஆம் வருஷத்தில், எண்பதாவது வயதில், நிர்வாண மெய்தினர்.

## 5. பழைய ஆரிய ராஜ்யங்கள்

**ராஜ்யங்களின் நிலைகுலைவு** — மகா பாரதம் நடந்த காலத்தில் வட இந்தியாவில் கங்கைக் கரைகளிலும் யமுனைக் கரைகளிலும் (மேற்பாகங்களில்) பிரபலமாக அனேக ராஜ்யங்கள் இருந்தனவென்று கண்டோம். கி-மு. 650-ஆம் வருஷத்திற்குள் அவைகளின் நிலை மாறுபட்டது. பெரிய ராஜ்யங்கள் பலங்குன்றிச் சிறுமைப் பட்டன; சிறிய ராஜ்யங்கள் முதன்மை பெற்றன. இந்தக் காலத்தில் எழுத்து ஏற்பட்டுப் பிரபலமாயிற்று; இதற்குமுன், கதைகளும் பாடல்களும் கர்ண பரம்பரையாகப் பரவினவேயன்றி, எழுத்து மூலமாக அன்று. ஏறக்குறைய கி-மு. 600-ஆம் வருஷத்தில் வடக்கே ஹிமாலயம் முதல், தெற்கே நர்மதாநதி வரையில் பதினாறு ராஜாங்கங்கள் ஏற்பட் டிருந்தன. வடகோடியி லிருந்தது காந்தாரதேசம் (இப்பொழுது பெஷாவர் எனப்படுவது); தென்கோடியி லிருந்தது அவந்தி (மாளவதேசம்; இதன் தலைப்பட்டணம் உஜ்ஜயனி); கங்கையின் கீழ்பாகத்தி லிருந்தது மகதராஜ்யம் (பேஹார்); இப்பொழுது அயோத்தியை எனப்படுவது அப்பொழுது கோஸலநாடு.

**மகதராஜ்யம்** — கோஸல ராஜ்யம் பிரபலமாகிக் குரு, பாஞ்சால, காசிராஜ்யங்களை வென்று முதன்மைபெற்று விளங்கியது. கி-மு. 519-ஆம் வருஷத்தில் மகதராஜ்யம் தலையெடுத்துப் பலமுற்று, விளங்கிற்று. அப்பொழுது அதனை ஆண்ட அரசன் பிம்பிஸாரன். இவன் சிசுநாகவம்சத்து ஐங்-

தாம் அரசன். இவன் அங்கராஜ்யத்தை (பாகல்பூர்) ஜயித்து, கங்கைநதியின் கீழ்பாகத்துக் கரைகளை வசப்படுத்திக் கொண்டான். விவாகசம்பந்தத்தினாற் காசிராஜ்யம் பெற்றான், வைசாலிநாட்டிற் செல்வாக்குற்றான். ராஜகிருகம் என்றொரு தலைநகரம் அமைக்கத் தொடங்கினான். இவனுக்குப் பிறகு இவனுடைய மகன் அஜாதசத்துரு என்பவன் வேறு நாடுகளையும் வென்று தன் ராஜ்யத்தைப் பெருக்கி, கண்டகீநதி கங்கையுடன் கலக்குமிடத்திற் பலமான கோட்டையொன்று கட்டினான். இது பாடலீபுத்திரம் (பட்னா) என இவனுடைய பேரன் காலத்தில் தலைநகராக விளங்கியது.

பேர்ஷியப் படையெழுச்சி — இந்துஸ்தானத்தில் ஆரியர்களுடைய மகதராஜ்யம் பலப்பட்டு நான்கு திக்குகளிலும் வியாபித்துப் பெருகிக்கொண்டிருக்கையில், பேர்ஷியாவிற் குடியேறிய ஆரியர்களும் பிரபலர்களாகிப் பெரிய ராஜாங்கம் அமைத்துக்கொண்டு, சுற்றுமுற்றுமுள்ள நாடுகளை வென்று சிறப்புற்றிருந்தார்கள். கி-மு. 525-ஆம் வருஷத்தில் அவர்களுடைய ராஜ்யம் மத்தியதரைக்கடலிலிருந்து கிழக்கே இந்தியாவின் எல்லை வரைக்கும் வியாபித்திருந்தது. கி-மு. 521-486-ஆம் வருஷங்களில் முதலாம் டரியஸ் என்னும் மகாராஜன் பேர்ஷிய ராஜ்யாதிபதியாக இருந்தான். இவன் ஐரோப்பாவிற் பல நாடுகளையும், ஆசியாவில் அப்கானிஸ்தானம், பெலுகிஸ்தானம், பஞ்சாபின் மேற்பாகம், ஸிந்துதேசம் ஆகிய இவைகளையும் ஜயித்தான். இவன் பெரிய ஜயசீலன், திறமையாக அரசாள்பவன். இந்தியாவில் ஜயித்த நாடுகளைத் தனியாக ஒரு மா-

காணமாக்கி, அதற்கு ஒரு 'கவர்னரை' நியமித்து ஆண்டு வந்தான். இவனுடைய உத்தரவின்படி, ஸ்கைலாக்ஸ் என்னுந் தளகர்த்தன் ஸிந்து நதியின் வழியே சென்று, அதன் முகத் துவாரத்தையடைந்து, அங்கிருந்து செங்கடலுக்குப் போக வழி கண்டு பிடித்தான்.

**நந்த வமிசம்** — கி-மு. நான்காம் நூற்றாண்டின் முற்பகுதிவரையில் சிசுநாக வமிசத்தார் மகதராஜ்யாதிபதிகளா யிருந்தார்கள். அதன் பிறகு, நந்தர்கள் என்னும் சூத்திர வமிசத்தார் அந்த ராஜ்யாதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டார்கள். இவர்கள் கைப்பற்றிய காலத்தில் மகத ராஜ்யம் கங்காநதி பாயும் இடங்களெல்லாம் வியாபித்திருந்தது. நந்தவமிசத்திற்கு மூலபுருஷன் மகாபத்மநந்தன். இந்த வமிசத்தார் ஏறக்குறைய நாற்பது வருஷகாலம் அரசாண்டார்கள். கி-மு. 321-ஆம் வருஷத்தில் நந்தராஜனை வென்று சந்திரகுப்தன் சிங்காசன மேறினான்.

**கிரேக்கப்படையெழுச்சி** — கி-மு. 327-ஆம் வருஷத்தில், ஐரோப்பா கண்டத்திலுள்ள கிரீஸ் தேசத்தில் மாசிடோனியா என்னும் ராஜ்யாதிபதியாகிய மகாஅலெக்சாண்டர் என்பவர் இந்தியாவின்மீது படையெடுத்து, வழக்கமாக வுள்ள கைபர்கணவாயின் வழியாகப் பிரவேசித்து, இந்தியாவின் வடமேற்குப் பிரதேசத்தில் பெரிய பட்டணமாகிய தக்ஷசிலாநகரத்தை நோக்கி 80,000 ஆட்களுடன் வந்தார். தக்ஷசிலாநாதன் பயப்பட்டு அலெக்சாண்டருக்கு வணங்கிவிட்டான். அங்கிருந்து புறப்பட்டு அலெக்சாண்டர், ஜீலம் நதிக்

கரையை நாடிவந்தார். அவ்விடத்தில் அரசு செலுத்திக்கொண்டிருந்த பௌரவன் ('போரஸ்' என்பார் கிரேக்கர்) என்பவன் போர்க் கோலத்தோடு நதியின் அக்கரையில் வந்திருந்தான். நதியைக் கடந்து பௌரவனை யெதிர்த்துச் செல்ல மாட்டாமல் அலெக்சாண்டர் இக்கரையிலேயே அனேக நாள் திகைத்துநின்றார். பிறகு, ஒருநாளிரவில் பதினாறு மயிலுக்கு அப்பாற்சென்று நதியைக்கடந்து பௌரவனுடைய படையைச்சூழ்ந்துகொண்டார். பௌரவன் மிகத் திறமையுடன் போர்செய்தும் தோற்றுப்போனான். ஆயினும், அவனுடைய தைரியத்திற்கும் சௌரியத்திற்கும் மெச்சி அலெக்சாண்டர் பௌரவனுடைய ராஜ்யத்தை அவனுக்கே திருப்பிக் கொடுத்து விட்டார்.

அங்கிருந்து முன் நடந்து அலெக்சாண்டர் கங்காதிரத்து ராஜ்யங்களின்மீது படை யெடுக்க நினைத்திருந்தார். ஆனால், படைவீரர்க ளெல்லாரும் அலுப்புற்றிருந்ததனால் ஸ்வதேசத்திற்குத் திரும்பிப் போக விரும்பினார்கள். அவர்களுக்கு இணங்கி அவர் கங்காதீரத்திற்குச் செல்லாமல் இந்தியாவை விட்டுப் புறப்பட்டுப் போனார். அப்படித் திரும்பிப் போனவர் கி-மு. 323-ஆம் வருஷத்தில் இறந்து போனார். அவருக்குப் பிறகு, அவருடைய ராஜ்யம் சிதறுண்டது. இந்தியாவில் அவருடைய ஆட்சி நிலையாமற் போயினும், அவரிடத்தி லிருந்து போர்த் தொழில் நுட்பங்களும், துரைத்தன நிர்வாக முறைகளும் இந்தியர்கள் கற்றுக் கொண்டார்கள்.

## 6. மௌரிய ராஜாங்கம்

சந்திர குப்தன் — கிரேக்கர் படையெடுத்து வந்தபோது, மகத ராஜ்யத்தை நந்த வமிசத்தார் ஆண்டுவந்தார்கள். அலெக்சாண்டர் இறந்து-போன செய்தி இந்தியாவுக்கு எட்டினவுடனே, நந்தராஜனது உறவினனாகிய சந்திரகுப்தன் என்-பவன் ஒரு சிறு படையைத் திரட்டிக் கொண்டு கிரேக்கரை எதிர்த்துச் சென்று பஞ்சாபைக் கைப்-பற்றிக் கொண்டான்; கிரேக்கப் படைகளை இந்தி-யாவினின்று ஒழித்து விட்டான். அந்தச் சமயத்-தில் மகத ராஜ்யாதிபதியாகிய நந்தராஜன் கொடுங் கோலனாக இருந்ததனால் குடிகள் அதிருப்தியினால் முறுமுறுத்துக் கொண்டிருந்தார்கள். இந்த நிலை-மையை யுணர்ந்து சந்திரகுப்தன் மகத ராஜ்யத்-தின்மீது படையெடுத்துச் சென்று அதனை வசப்-படுத்திக் கொண்டான்.

இவன் மகதராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொள்-வதற்குப் பெருந்துணையாக இருந்தவன் சாணக்கி-யன் என்னும் பிராமணன். அவன் ராஜ்யதந்திர நிபுணன், வெகு சாமர்த்தியசாலி. அவனுடைய புத்திக்கூர்மை அதிசயமானதென்று சொல்லப்பட்-டிருக்கிறது. சாணக்கிய தந்திரத்திற்கு ஈடான தந்திரம் இல்லையென்பது வழக்கச் சொல். ராஜா-ங்கம் நடத்தும் முறையைப்பற்றி அவன் எழுதிய "அர்த்த சாஸ்த்ரம்" என்னும் ஸம்ஸ்கிருத கிரந்-தத்தை இப்பொழுது மைசூர் கவர்ன்மெண்டார் பிரசுரித்திருக்கிறார்கள்.

மகதராஜ்யத்துப் பெரும்படை சந்திரகுப்தனது ஸ்வாதீனமாயிற்று, வட இந்தியா முழுமைக்கும் இவனே அதிபதியானான். ஏறக்குறைய கி.மு. 321-ஆம் ஆண்டில் பாடலீபுரத்துச் சிங்காசனத்தில் இவன் நிலைகொண்டான். மௌரிய வமிசத் தலைவன் இவனே. கி. மு. 305-ஆம் ஆண்டில் அலெக்சாண்டரது தளகர்த்தனாகிய செலூக்கஸ் என்பவன் இந்தியாவின்மீது படையெடுத்து வந்து, பழைய கிரேக்கமாகாணங்களைக் கைப்பற்ற முயன்றான். ஆயினும், அவனைச் சந்திரகுப்தன் வென்றதனால், ஹிந்துகூஷ்மலைக்குத் தெற்கிலுங் கிழக்கிலுமுள்ள நாடுகளையெல்லாம் (ஆப்கானிஸ்தானம், பெலுகிஸ்தானம் உள்பட) சந்திரகுப்தனுக்கு விட்டுக்கொடுத்துச் செலூக்கஸ் திரும்பிப் போனான். மற்றும், செலூக்கஸ் தன் மகளைச் சந்திரகுபதனுக்குக் கலியாணம் செய்து கொடுத்து, தன்னுடைய தூதன் ஒருவனைச் சந்திரகுப்தனுடைய தர்பாரில் இருக்கும்படி நியமித்தான். இதற்காகச் சந்திரகுப்தன் செலூக்கஸுக்கு 500 யானைகளைப் பரிசு கொடுத்தான். செலூக்கஸினுடைய ராயபாரியின் பெயர் மெகாஸ்தனீஸ். பிற நாட்டார் இந்திய ராஜாங்கத்தில் நிலையாக வந்திருந்தது இதுவே முதல் தடவையாகும். இந்த மெகாஸ்தனீஸ் என்பவன் கூரியபுத்தியுள்ளவன், எதையும் உய்த்துணர்ந்து தெளிவாகவும் விவரமாகவும் எழுதுந் திறமையுள்ளவன். இவன் இந்தியாவிற் கண்டது கேட்டது அனுபவித்தது முதலாகிய ஸமஸ்த விஷயங்களையும் விவரித்து எழுதிவைத்தான். ஆதலால், சந்திரகுப்தனுடைய துரைத்தனத்தைப்-


பற்றி நமக்கு நன்றாகத் தெரிந்து கொள்வதற்கு ஆதாரம் ஏற்பட்டது.

ஆப்கானிஸ்தானமும் குஜராத்தும் உள்பட வடஇந்தியா முழுமையும், ஹிந்துகூஷ்மலை ஹிமாலயமலை ஆகிய இவைகளிலிருந்து தெற்கே விந்தியமலைவரையிலும், மேற்கிலும் கிழக்கிலும் கடல் எட்டின மட்டும் சந்திரகுப்தனுடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. இவனுடைய போர்ப் படை மிகவும் பெரியது. அதனில் 600,000 பதாதிகளும், 30,000 குதிரை வீரர்களும், 9,000 யானையாட்களும் இருந்தார்கள். இவன் தன் ராஜாங்கத்தை வேறு வேறு 'இலாகா'க்களாகப் பிரித்து, அரசு செலுத்தினான். ஜனனமரணக் கணக்கு எழுதுவோர், [illegible] 'வசூல்' செய்வோர், கைத்தொழில்களைக் கவனித்து நடப்பிப்போர் முதலாகிய வேறு வேறு 'இலாகா' அதிகாரிகள் இருந்தார்கள். தூரத்திலுள்ள மாகாணங்களுக்கு 'வைஸ்ராய்' களை நியமித்து அவர்கள் மூலமாக ஆண்டுவந்தான். நீர்ப்பாசனங்களைக் கவனித்துச் சீர்ப்படுத்துவதற்காக ஓர் 'இலாகா' ஏற்படுத்திப் பயிர்த்தொழிலை அபிவிருத்திசெய்தான். தர்ம பள்ளிக்கூடங்கள், தர்ம வைத்திய சாலைகள், 'முனிசிபாலிடி'கள் முதலியனவும் ஏற்படுத்தியிருந்தான்.

சந்திரகுப்தனுக்குப் பிறகு பிந்துஸாரன் என்பவனும், அவனுக்குப் பின்பு அசோகமகாராஜாவும் பட்டத்திற்கு வந்தார்கள்; அசோகர் சிங்காசனமேறியபோது, மௌரிய ராஜ்யம் தெற்கே சென்னப்பட்டணம் வரையில் வியாபித்திருந்தது.

அசோகர் — கி.மு. 272-ஆம் வருஷத்தில் பிந்துஸாரன் இறந்துபோனபிறகு, அவனுடைய குமாரர் அசோகவர்த்தனர் பட்டத்திற்கு வந்தார். களிங்கதேசம் (ஒரிஸ்ஸா) மௌரிய ராஜ்யத்திற் சேராமல் தனிமையாக இருந்ததனால், கி.மு. 261-ஆம் வருஷத்தில் இவர் அதன்மீது படையெடுத்து அதனை வென்றார். களிங்கர்கள் தீரமாக நின்று எதிர்த்துப் போர்செய்தார்கள். ஆயினும், லக்ஷக்கணக்கான ஜனங்கள் யுத்தத்தில் மடிந்தார்கள். அந்தச் சவக்களத்தைக் கண்ட வுடனே அசோகருக்கு மிகுந்த பச்சாத்தாப முண்டாயிற்று. இனி, மனிதர்களுக்கும் மற்றப் பிராணிகளுக்கும் தீங்கு செய்வதில்லையென்று திடமாகத் தீர்மானம் செய்துகொண்டார். அதுமுதல், இவர் யுத்தத்திற்குப் புறப்படவே யில்லை.

இந்தியாவிற் பெரும்பாகம் இவருடைய ராஜ்யமாயிற்று. ஹிந்துகூஷ்மலையும் ஆப்கானிஸ்தானத்தில் ஒரு பகுதியும் அசோக ராஜ்யத்துக்கு வடக்கு எல்லைகளாக இருந்தன. காச்மீரமும் நேபாளமும் இந்த ராஜ்யத்திற் சேர்ந்தவைகளே. பெலுகிஸ்தானம், ஸிந்து தேசம், காத்தியாவாட், மால்வா ஆகிய இவை இந்த ராஜ்யத்து மேற்கு மாகாணங்கள். கிழக்கே வங்காளமும் களிங்கமும் இதற்குச் சேர்ந்திருந்தன. களிங்கத்திற்குத் தெற்கே, கோதாவரிக்கும் கிருஷ்ணைவுக்கும் இடையில், ஆந்த்ர ராஜ்யம் இவருடைய ஆதிபத்தியத்திற்கு உட்பட்டிருந்தது. இந்தியா தேச படத்தில் பெங்களூரின் மீது கிழக்கு-மேற்காகக் கோடு கீறினால், அந்தக் கோடு அசோக ராஜ்யத்தின் தெற்கு எல்லையாகும். அந்தக்


இந்தியா
சிந்து
பாடலீபுத்திரம்
கங்கை
மகாநதி
கோதாவரி
கிருஷ்ணை
வடபெண்ணையாறு
சோழ
காவேரி
சேர
பாண்டி

கோட்டுக்குக் கீழே சோழ, பாண்டிய, சேர, கொடகு ராஜ்யங்கள் இருந்தன.

தேசங்களை வெல்லவேண்டுமென்னும் விருப்பத்தை யொழித்து அசோகர் இரக்கமும் பக்தியும் மேற்கொண்டு, குடிகளைச் சந்தோஷமாகவும் செழிப்பாகவும் வைப்பதற்கு வேண்டிய வகைகளை நாடுவதில் மனத்தைச்செலுத்தி, ஜனங்களுக்கு மதபோதனை செய்து அவர்களுடைய மனத்தையும் பக்குவப் படுத்தப் பிரயத்தனப் பட்டார். முதலில் அசோகருடைய மதக் கொள்கைகள் என்னவோ தெரியாது. மனவமைதியை நாடிக்கொண்டேயிருந்து, முடிவில் பௌத்த மதத்தைத் தழுவினர். அந்த மதத்தைச் சீர்திருத்தவும் பரவச் செய்யவும் பெரு முயற்சிகள் செய்தார். பௌத்தர்களையெல்லாம் சபைகூட்டி, மத சித்தாந்தங்களையும் ஒழுக்கங்களையும் ஒழுங்குபடுத்தினர். கி.மு. 259-ஆம் ஆண்டில் இவர் பௌத்தரான வுடனே மிருகவேட்டை பறவைவேட்டை முதலியன வெல்லாம் ஒழித்து, அங்கங்கே யாத்திரைஸ்தலங்கள் ஏற்படுத்தினர். தம் ராஜ்யத்தில் சீர்திருத்த மில்லாமலும் நல்லொழுக்க மில்லாமலும் இருந்த போஜர்கள், புலிந்தர்கள் ஆந்திரர்கள் காம்போஜர்கள் முதலானவர்களுக்குப் பௌத்த மதத்தைப் போதிப்பதற்காக உபதேசிகளை அனுப்பினர். ஸ்வதந்திர ராஜ்யங்களாகிய சோழ ராஜ்யம், பாண்டியராஜ்யம், கேரள ராஜ்யம், கொடகு ராஜ்யம், லங்கைத் தீவு, மேற்றிசையிலுள்ள சிரியா, எகிப்து, ஸைரீன், மாசிடோனியா முதலான இடங்களுக்கும் மதபோதகர்களை அனுப்பினர். இவருடைய பெரும் பிரயத்த-

னங்களினுல் அனேக நாடுகளில் பௌத்த மதம் நிலைகொண்டது; அது உலகமுழுதும் பரவுமெனத் தோற்றியது.

பௌத்த மதத்தினின்று இவர் தெரிந்து-கொண்ட நீதிமுறைகளைத் தம் சொந்த ராஜ்-



அசோகர் நாட்டிய தூண்

யத்தாருக்கெல்லாம் போதிக்கக் கருதி, அந்தக் காரியத்தைக் கவனிப்பதற்காகத் தனியாக உத்தி-யோகஸ்தர்களை நியமித்து, சத்திரங்கள் சாவடி-

கள் மடங்கள் முதலியவைகளின் தருமபரிபாலன அதிகாரத்தையும் அவர்களுக்குக் கொடுத்தார். நீதிநெறியைக் கடைப்பிடித்துக் குடிகள் நடக்கவேண்டுமெனக் கருதி, நீதிவாக்கியங்களைப் பெரிய கற்றூண்களில் செதுக்கித் தம் ராஜ்யத்தில் அங்கங்கே நிறுத்தினர். கி. மு. 257 - 256 - ஆம் வருஷங்களில் இப்படிப்பட்ட கல்வெட்டுகள் பதினாறு அமைத்தார். கல்வெட்டுகள் பாலிபாஷையிற் செதுக்கப்பட்டன. அவைகளில் அடங்கிய முக்கியமான விஷயங்களாவன:

1. எவ்வுயிரையும் போக்கக் கூடாது. எல்லாரும் ஜீவகாருண்யமிருந்து ஒழுகல்வேண்டும். எந்தப் பிராணியையும் வருத்தக் கூடாது.

2. பெற்றோர்க்கும், ஆசானுக்கும், மூத்தோர்க்கும் அடங்கி வணக்கமாகவும் மரியாதையாகவும் நடக்க வேண்டும்; தமக்குக் கீழ்ப்பட்டவர்களின் விஷயத்தில் அன்புடன் நடக்கவேண்டும்.

3. உண்மையே நன்மை. உண்மையே பேசவேண்டும். உண்மையாகவே வியவகரிக்க வேண்டும்.

4. மற்றவர்களுடைய மதக்கொள்கைகளை இகழக்கூடாது.

மேற்சொல்லிய விதிகளை யனுசரித்தே அசோகரும் நடந்துவந்தார். தான தருமங்கள் விசேஷமாகச் செய்தார். பிரயாணிகளின் அனுகூலத்திற்காகத் தோப்புகளும் துரவுகளும் சாலைச்சாவடிகளும் அமைத்தார். இப்படியே மிருகங்களின் க்ஷேமத்திற்கு வேண்டிய அனுகூலங்களையும் செய்தார். நோயினல் வருந்தும் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் மருந்துகள் கொடுப்பித்து ஆத-

ரித்தார். இவருடைய காலத்தில் ராஜ்யமெங்கும் அமைதி குடிகொண்டிருந்தது; குடிகள் க்ஷேமமாகவும் சௌக்கியமாகவும் செழிப்பாகவும் வாழ்ந்-



அலகபாதிலிருக்கும் அசோகசாஸன ஸ்தம்பம்

தார்கள். இவருடைய தயாளத்தையும் பெருந்தன்மையையும் நோக்குமிடத்து, நெடுநாளைக்குப் பின்பு இந்தியாவை ஆண்ட அக்பர் சக்ரவர்த்தியின்

நல்ல அமிசங்களும், விக்டோரியா மஹாராணியின் நற்குணங்களும் இவரிடத்திற் பொருந்தியிருந்தன வென்னலாம்.

அசோகருடைய சாஸனங்கள் பாறைகளிலும், குகைகளிலும், ஸ்தம்பங்களிலும் அனேக இடங்களிற் செதுக்கப் பட்டிருக்கின்றன. பிஷாவர், டெல்லி, குஜராத்து, அலகபாத் முதலான இடங்களில் இன்றைக்கும் அவைகளைக் காணலாம்.

கி. மு. 240-ஆம் வருஷத்தில் இவர் பௌத்த பிக்ஷுவாகி (ஸந்நியாஸியாகி) மஞ்சள்நிறமான ஆடை தரித்து பௌத்தஸ்தலயாத்திரை செய்தார். தம் குமாரர்களுக்கும் குமாரிகளுக்கும் மஞ் ஆடையுடுத்தி மதபோதகர்களாக அனுப்பினார். இவருடைய குமாரன் மகேந்திரன் லங்கையில் பௌத்தமதத்தை உபதேசித்தான்; இவருடைய குமாரி போதிவிருக்ஷத்தின் கிளையை லங்கையிற் கொண்டுபோய் நாட்டினாள். அது பெரிய மரமாகி ஒரு சதுர மைல் நிலத்தை அடைத்துக்கொண் டிருக்கிறது. இவர் முப்பத்தேழு வருஷம் அரசாண்டார். இவருடைய பரம்பரையில்வந்த அரசனொருவன் துரைத்தனத்தைக் கவனியாமல், தன் சேனாதிபதியாகிய புஷ்யமித்திரன் என்பவனுக்கு ஒப்புவித்திருந்தான். நல்ல சமயம் பார்த்துச் சதி செய்து அரசனைக் கொன்று (கி. மு. 184) அவன் ராஜ்யாதிகாரம் வகித்து, தன் மகன் அக்கினிமித்திரனுக்குப் பட்டங்கட்டி, ராஜதானியை மாளவதேசத்திற்கு மாற்றிக்கொண்டான்.

# 7. ஆந்திரரும் கிரேக்கரும் பார்த்தியரும்


(கி-மு. 232—கி-பி. 300)

**ஸங்கவம்சம் —** இந்த வம்சத்திற்கு மூலபுருஷன் புஷ்யமித்திரன். வட இந்தியா முழுமையிலும் தன் ஆதிபத்தியத்தை நிலை நிறுத்தும்பொருட்டு இவன் ராஜஸூய யாகம் செய்யத் தொடங்கினான். இதனால், இவன் ஹிந்துவென்றும், ஸங்க வம்சத்து அரசர்கள் ஹிந்து மதத்தை அனுசரித்தார்களென்றும் தெரிகிறது. புஷ்யமித்திரனுக்குப் பிறகு, (கி. மு. 148), இந்தச் சந்ததி நெடுநாள் நிலைக்கவில்லை. மொத்தத்தில் 112-வருஷ காலம் இந்தச் சந்ததி ஆட்சி பெற்றிருந்தது. கி. மு. 72-ஆம் ஆண்டில் முடிவுற்றது.

பம்பாய் ராஜதானியிலுள்ள லானௌலி என்னும் ஊருக்குச் சமீபத்தில் கார்லி என்னும் இடத்திலும், ஒரிஸ்ஸா மாகாணத்திலுள்ள கட்டக் என்னும் பட்டணத்திலும் பாறைகளைக் குடைந்து ஆலயங்களாக அமைத்தவர்கள் இவர்களே.

**கண்வ வம்சம் —** ஸங்க வம்சத்துக் கடைசி அரசனை அவனுடைய மந்திரியாகிய வாஸுதேவன் என்னும் பிராமணன் கொல்லுவித்து மகதராஜ்யத்துச் சிங்காஸனத்தைக் கைப்பற்றிக் கொண்டான். வாஸுதேவனுக்குப் பிறகு பட்டத்திற்கு வந்தவர்கள் நால்வர். இவர்களுக் கெல்லாம் கண்வ ராஜாக்கள் என்று பெயர். இவர்களுள் கடைசி அரசன் (கி. மு. 27) ஆந்திரராஜ்யாதிபதியினற் கொலையுண்டான்.

**ஆந்திர வமிசம்** — சந்திரகுப்தனுடைய காலத்தில் ஆந்திர ராஜ்யமானது அவனுடைய ஆதிபத்தியத்திற்கு உட்பட்ட நாடாக இருந்தது. அசோகர் இறந்த பிறகு ஆந்திர அரசன் மௌரிய ஆதிபத்தி-



கார்லி குகைகளின் வாயில்

யத்தை யொழித்து ஸ்வதந்திரனானன். வடஇந்தியாவிற் கலகங்கள் மிகுந்திருப்பதைத் தெரிந்து, ஆந்திரர்கள், இப்பொழுது நைஜாம்ராஜ்யம் எனப்படும் நாட்டின் தென்கிழ்மூலையிலுள்ள தான்யகடகம்

என்னும் இடத்தினின்று புறப்பட்டு ஊர்களை ஒவ்வொன்றாகக் கைப்பற்றிக்கொள்ளத் தலைப்பட்டார்கள். அசோக வமிசத்தாரையும், வாஸுதேவ வமிசத்தாரையும், புஷ்யமித்திர வமிசத்தாரையும் கண்ட இடங்களில் நாசஞ் செய்தார்கள். ஆந்திர அரசனுடைய ராஜ்யம் இப்பொழுது தெலுங்கர் வசிக்கும் நாடுகளாகும். அவனுடைய தலைநகரம் கிருஷ்ணா நதியின் முகத்துவாரத்திலிருந்தது. இந்த ராஜ்யம் பலப்பட்டு மேற்குமலைத்தொடர்கள் வரையில் வியாபித்தது. நாசிக் என்னும் நாடும் இதனிற் சேர்ந்திருந்தது. கி. மு. 27-ஆம் ஆண்டில் கண்வராஜனைக்கொன்று ஆந்திர ராஜன் வட இந்தியாவையுங் கட்டிக்கொண்டான். கிரிஸ்து பிறப்பதற்கு முந்திய நூற்றாண்டிலும், கி. பி. முதல் நூற்றாண்டிலும் இந்தியாவிற் பிரபலமாக இருந்தவர்கள் ஆந்திரர்களே. ஆரியர்கள் இத்தேசத்திற் குடியேறி ஆட்சிகொண்ட பிறகு, திராவிடர்கள் மிகவும் உன்னதமான தசையில் நின்று இந்தியாவுக்கெல்லாம் அதிபர்களாக இருந்தது இந்தக் காலமே. 150-வருஷங்களுக்குப் பிறகு ஆந்திர அரசனொருவன் ஸிந்து தேசத்தை ஜயித்துத் தன் ராஜ்யத்துடன் சேர்த்துக் கொண்டான். இந்த வமிசத்தில் முப்பது அரசர்கள் ஆண்டார்கள்; இவர்களுடைய ஆட்சி 450-வருஷ காலம் நிலைத்திருந்தது.

இந்தியாவின்மீது படை யெழுச்சிகள் — புஷ்யமித்திரனுடைய காலமாகிய கி. மு. 160-ஆம் ஆண்டிலிருந்து கி. பி. இரண்டாம் நூற்றாண்டு வரையில், வடமேற்கு நாடுகளிலிருந்து அனேகர் இந்தியாவின்மீது படையெடுத்து வந்தார்கள். இப்படிவந்த-

வர்கள் மத்திய ஆசியாவிலிருந்த முரட்டு ஜனங்கள். இவர்கள் ஹிந்துகூஷ் மலைவரையிற் பரவி, அங்கிருந்தவர்களைத் துரத்தியடிக்க, அவர்கள் இந்தியாவிற் புகுந்தொளிய வேண்டியதாயிற்று.

**கிரேக்கர்கள்** — சந்திரகுப்தன் கிரேக்கர்களை யோட்டிவிட்டுப் பஞ்சாப் தேசத்தைப் பிடித்துக் கொண்டான் என்று சொன்னோம். அவனுடைய குடும்பத்தாருடைய வசத்தில் அது நூறு வருஷகாலம் இருந்தது. பிறகு, கிரேக்கர் மறுபடி படையெடுத்துவந்தார்கள். இப்பொழுது வந்த கிரேக்கர் பாக்ட்ரியா என்னுந் தேசத்திலிருந்து வந்தவர்கள், மாசிடோனியாக்காரர்க ளல்லர். இவர்களுடைய அரசன் யூக்ரடைடீஸ் எனப்படுவன். இவர்கள் இந்தியாவிற் பிரவேசித்துப் பஞ்சாபை வசப்படுத்திக் கொண்டார்கள்.

**ஸிதியர்கள்** — ஸிதியர்கள் என்னுஞ் சாதியாரின் தலைவனான அன்டியாக்கஸ் என்பவன் ஸிரியா நாட்டுக்கு அதிபதி. (கி. மு. 223 - 167.) இவன் செலூக்கஸின் வமிசத்தவன். இவன் முதலில் பாக்ட்ரியாவின்மீது படையெடுத்துச் சென்று, பின்பு காபூல் நாட்டுக்கும் வந்தான். இவனுடைய மருமகனான டெமீட்ரியஸ் என்னும் பாக்ட்ரியன் காபூலைக் கடந்து (கி. மு. 190) பஞ்சாப் தேசத்திலும் ஸிந்து தேசத்திலும் பெரும்பாகத்தை வென்றான். இப்படி ஜயிக்கப்பட்ட நாடு கிரேக்க-பாக்ட்ரியத் தலைவர்கள் பலருடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. இந்தத் தலைவர்களுள் பிரபலமானவன் மீனாண்டர். (கி. மு. 150). இவன் பலமிகுந்தவன், நியாயமாக ஆள்பவன், பௌத்த மதத்திற் சார்-


புடையவன். முதலில் இவன் காபூலைத் தலைநகராகக் கொண்டிருந்தான், பிறகு, ஸகலை (ஸியால்கோட்)யைத் தலைநகராக்கிக் கொண்டான். இவன் காபூல், ஸிந்துதீரங்கள், காத்தியாவாட் ஆகிய பிரதேசங்களை வசப்படுத்திக்கொண்டு, மதுரை (மட்ரா), ஸாகேதம் (அயோத்தியை), ராஜபுதனம் ஆகிய நாடுகளில் ஆக்கிரமித்தான்.

**சாக்கர்கள்** — சாக்கர்கள் என்னும் மங்கோலியநாடோடிகள் ஐக்ஸார்ட்டீஸ் என்னும் நதியின் மேற்புறத்துள்ள ஸிர்டேரியா என்னும் நாட்டிலிருந்தார்கள். இவர்களை யூச்சி என்னும் மற்றொரு நாடோடிச் சாதியார் (கி. மு. 160) ஊரைவிட்டுத் துரத்தினார்கள். இந்தியாவில் மீனண்டர் வெற்றிகளடைந்துகொண் டிருக்கையில், சாக்கர்கள் பலமிகுந்து பாக்ட்ரிய துரைத்தனத்தைக் கவிழ்த்துவிட்டு, ஹிந்துகூஷ்மலையைக் கடந்து ஆப்கானிஸ்தானத்திற் பிரவேசித்தார்கள். அங்கிருந்து இந்தியாவிற் புகுந்து தக்ஷசிலை (டாக்ஸிலா), மதுரை (மட்ரா), ஸௌராஷ்டிரம் (காத்தியாவாட்) என்னும் சிற்றரசுகள் ஏற்படுத்திக் கொண்டார்கள். இவர்கள் பெர்ஷிய தேசாதிபதிக்கு உடன்பட்டவர்களென்று தோன்றுகிறது. இருப்பிடத்தை இழந்த சாக்கர்கள் இந்தியாவில் வந்து நிலைகொண்டு, முன்னூறு வருஷகாலம் ஸிந்துதேசத்தை ஆண்டுவந்தார்கள். கி. பி. 126-ஆம் வருஷத்தில் ஆந்திர சக்கரவர்த்தியாக இருந்த இரண்டாம் விலிவாயகூரன் என்பவன் இவர்கள்மீது படையெடுத்து, ஸிந்து தேசத்தைக் கைப்பற்றிக்கொண்டு, தனக்குப் பதிலாக அரசாள்வதற்கு ஒரு 'வைஸ்ரா'யை நியமித்தான். இப்படி

'வைஸ்ரா'யாக நியமிக்கப்பெற்றவன் ஒரு சாக்கன். அவன் உஜ்ஜயினியில் இருந்துகொண்டு அந்த மேனாட்டை ஆண்டுவந்தான். அவனுக்குப் பிறகும் அதேமாதிரியாக 'வைஸ்ராய்'களே அதனை ஆண்டுவந்தார்கள். கி. பி. 140-ஆம் ஆண்டிலிருந்த 'வைஸ்ராய்' தன்னுடைய யஜமானனாகிய ஆந்திரராஜனுக்கு அடங்காமற் கலகித்து, ஆந்திரப்படையை முறியடித்து, மால்வா, ஸிந்து, கொங்கணம் ஆகிய பிரதேசங்களை வசப்படுத்திக்கொண்டு ஸ்வதந்திரனானான்.

பல்லவர்கள் — பெர்ஷிய தேசத்தாரைப் 'பார்த்தியர்' என்பதும் உண்டு. 'இந்து'-பெர்ஷியர் என்பதற்குப் பதிலாக 'இந்து-பார்த்தியர்' என்று வழங்குவார்கள். மேற்சொல்லிய சாக்கர்கள் பார்த்தியர்களுக்குச் சம்பந்தப்பட்டவர்களென்று சொன்னோம். அவர்களை 'இந்து-பார்த்தியர்' என்னலாம். சுத்தமான பார்த்திய குலத்தவர்கள் சிலர் (கி. மு. 120) இந்தியாவுக்கு வந்து வடமேற்குப் பிரதேசத்தில் நூறுவருஷ காலம் அரசாண்டதாகத் தெரிகிறது.

பார்த்தியக் கூட்டத்தார் வேறு சிலர் தக்கணத்திற் புகுந்து, அங்கிருந்து தென்-இந்தியாவுக்கு வியாபித்தார்கள். 'பார்த்தியர்' என்பது 'பல்லவர்' எனத் திரிந்தது. இவர்கள் கஞ்சி, வேங்கி, பாலக்காடு என்னும் நாடுகளுக்கு அதிபதிகளான பிறகே, இவர்கள் பெயர் பிரபல்மாயிற்று. ஆதியில் இவர்கள் பெர்ஷியாவி லிருந்தே புறப்பட்டு, சாக்கர்கள் இந்தியாவுக்கு வந்தபொழுதே, வந்திருக்கவேண்டும். இந்தியாவில், மேல் நாடுகளிலே, இவர்கள்



மகாபலிபுரம் — கோயிலும் தேர்களும்

இருந்தார்கள். ஆந்திரராஜனேடு நேர்ந்த யுத்தத்திலை, தெற்கே யோடியொளிய வேண்டியதாயிற்று. இங்கே வந்து நிலைகொண்டு, தம் ராஜ்யங்களை ஏற்படுத்திக்கொண்டார்கள். அவையாவன:— கிருஷ்ணைவுக்கும் கோதாவரிக்கும் இடையிலுள்ள வேங்கி ராஜ்யம்; பாலக்காடு (இப்பொழுதும் பாலக்காடு என வழங்கப்படுவதே); கஞ்சி (இப்பொழுது காஞ்சீபுரம் எனப்படுவது.) பல்லவர்கள் இந்துமதத்தை யனுசரித்தவர்கள். கி.பி. பத்தாம் நூற்றாண்டு வரையில் இவர்களுடைய ஆட்சி நடைபெற்றது. காஞ்சீபுரத்துப் பழைய கோவில்களும் மகாபலிபுரத்திலுள்ள தேவாலயங்களும் இரதங்களும் இவர்களுடைய காலத்தில் ஏற்பட்டவைகள். தமிழில் தேவாரமும் நாலாயிரப் பிரபந்தமும் இவர்களுடைய காலத்தில் எழுதப்பட்டன.

குசன வமிசம் — சாக்கர்களை அவர்களுடைய தேசத்தினின்று (கி. மு. 160) துரத்தி, இந்தியாவிற் குடியேறும்படியாகச் செய்தவர்கள் யூச்சி என்னும் நாடோடி ஜனங்களென்று சொன்னேம். இவர்கள் ஆக்ஸஸ் நதிக்கு வடக்கேயுள்ள சாக்கர்களின் நாட்டைக் கைப்பற்றிக்கொண்டு ராஜ்யம் ஏற்படுத்திக்கொண்டார்கள். வரவரப் பிரபலமாகி, ராஜ்யத்தை அதிகப்படுத்திக்கொண்டு, (கி.பி. 50) பாக்டிரியாவென்னும் கிரேக்கநாட்டு அரசனை வென்று, அந்தத் தேசத்தையுங் கைப்பற்றிக்கொண்டார்கள். இப்படி யூச்சி ராஜ்யத்தை அபிவிருத்திசெய்துபெரிய அரசனுக விளங்கினவன் முதலாவது காட் பிஸீஸ் என்பவன். இவன் யூச்சிகளுள் குசனச்சாதிக்குத் தலைவன். இவன் நாற்பது வருஷகாலம் அரசாண்-

டான். இதற்குள்ளாக ஹிந்துகூஷைக் கடந்து, காச்மீரத்தையும், காபூலையும் ஜயித்தான். வட-மேற்கி லிருந்த இந்து-பாக்ட்ரியர்களையும், இந்து-பார்த்தியர்களையும் அழித்தான். இவனுக்குப் பின்பு (கி. பி. 35) பட்டத்திற்கு வந்த இரண்டாம் காட்பி-ஸீஸ் என்பவன், வட இந்தியாவெல்லாம் ஜயித்து, தெற்கே ஸிந்து தேசம் வரையிலும், கிழக்கே காசி-வரையிலும் வியாபித்தான். இவனுடைய நாட்டின் எல்லைகள் சீனராஜ்யத்தையும், பார்த்திய ராஜ்யத்-தையும்,ரோமராஜ்யத்தையும் அளாவின. தேசமெங்கும் தலையெடுத்திருந்த சிற்றரசுகள் ஒழிந்துபோயின. இந்தச் சிற்றரசுகளின் பிரபலத்தினல், அசோகருக்-கும் செலூக்கஸுக்கும் பிறகு, ஆசியா கண்டத்-திற்கும் ஐரோப்பா கண்டத்திற்கும் வியாபாரம் தடைபட்டிருந்தது, போக்கு வரவு அற்றுப்போ-யிருந்தது. சிற்றரசர்கள் ஒழியவே, வியாபாரம் தலை-யெடுத்தது, கிரேக்கர்களுடைய சகவாசத்தினுலும் ரோமர்களுடைய சகவாசத்தினுலும் இந்தியக் கைத்தொழில்கள் கிளைத்துத் திருந்தி அபிவிருத்தியாயின. இதனல், இரண்டாம் காட்பிஸீஸின் பெருமையும் ஐசுவரியமும் பெருகி விளங்கின. இவன் கி. பி. 125-ஆம்வருஷத்தில் இறந்தான். இவனுக்குப் பிறகு பட்டத்திற்கு வந்தவன் கனிஷ்கன்.

சாக்கர்களும் யூச்சிகளும் பெர்ஷியாவில் வழ-ங்கிய ஜோராஸ்ட்ரிய மதத்தவர்களாக இருக்கலாம். ஆனல், கனிஷ்கன் பௌத்த மதத்திற் பற்றுக்கொ-ண்டு, அதனைத் தழுவினன். அசோகருக்குப் பிறகு, பௌத்த சரித்திரத்தில் பிரபலமான ராஜன் கனிஷ்-கனே (கி. பி. 125-153). இவன் பௌத்த பிக்ஷுக்-

களைச் சபைகூட்டி மதக் கொள்கைகளிற் சில மாறுபாடுகள்செய்தான். இப்படித் திருந்திய பௌத்தமதம் "மகாயனம்" (பெரிய வாகனம்) எனப்படும். மகாயனமுறையின்படி, புத்தரைத் தெய்வமாக வைத்துத் தொழலாம். இதற்குமுன் வழங்கிய பௌத்த கொள்கை "ஹீநயனம்" (அஸம்பூர்ண வாகனம், குறைவான வாகனம்) எனப்படும். மகாயன பௌத்தம் திபெத்து, சீனு, ஜபான் ஆகிய தேசங்களுக்கும் பரவியது. தென் தேசங்களாகிய பர்மா, சியாம், சிங்களம். ஆகிய தேசங்களிலுள்ளவர்கள் அசோகரால் அனுப்பப்பெற்ற போதர்கள் உபதேசித்த பழைய பௌத்த முறைகளையே அனுஷ்டித்தார்கள்.

இந்தியாவில், காச்மீரத்தையும், கிழக்கே பாடலீபுத்திரம் வரையிலுள்ள நாடுகளையும் கனிஷ்கன் வசப்படுத்திக்கொண்டான். பார்த்தியர்களோடும், சீனர்களோடும் போர் செய்து வென்று, யார்க்கண்டு, கோட்டான், காஷ்கர் என்னும் மாகாணங்களைப் பற்றிக்கொண்டான். இவனுடைய ராஜ்யம் பொக்காராவிலிருந்து ஸிந்து தேசம் வரையிலும், பெர்ஷியாவி லிருந்து பீஹார் வரையிலும் வியாபித்தது. இந்தியாவுக்கு வெளியேயுள்ள ராஜ்யபாகம் இந்தியாவி லுள்ளதைவிடப் பெரிதாக இருப்பினும், இவன் இந்திய அரசனெனவே வழங்கப்பெற்றுன். இவனுடைய தலைநகரம் 'புருஷபுரம்' (பெஷாவர்) எனப்படும். அந்த நகரத்தைச் சுற்றியுள்ள காந்தார நாட்டில் இவன் அனேகம் பௌத்தாலயங்கள் நிர்மித்தான். புத்தரது சரித்திரத்தை விளக்கத்தக்க சித்திரங்களை

நேர்த்தியாக அந்த ஆலயங்களிற் செதுக்கினான். இப்பொழுது சில நாளைக்குமுன் அந்தப் பிராந்தியத்தில் பெரிய ஸ்தூபி யொன்று தோண்டிக் கண்டெடுக்கப்பட்டது. அதனில் புத்தரது ஞாபகக்குறிகள் அடங்கி யிருக்கின்றன. இந்த ஞாபகச்சின்னங்களைப் பர்மா தேசத்திற் பத்திரப் படுத்தி வைத்திருக்கிறார்கள். இந்திய ராஜ்யத்திற்குள் பௌத்த தேசமாக இப்போது வழங்குவது பர்மா ஒன்றேயல்லவா?

கனிஷ்கன் 25-வருஷகாலம் அரசாண்டான். இவனுடைய காலத்தில் சாஸ்திரப் பயிற்சி அதிகமாயிருந்தது. சரகன் என்னும் வைத்திய சிரேஷ்டன் "சரகஸம்ஹிதை" என்னும் வைத்திய கிரந்தம் எழுதியதும், சுச்ருதன் என்னும் சஸ்திர வைத்திய நிபுணன் 'சுச்ருதம்' என்னும் நூல் எழுதியதும் இவனுடைய நாளிலேயே. ஜோதிஷ சாஸ்திரம் மிகுந்த தேர்ச்சி யடைந்தது. கனிஷ்கனுக்குப் பிறகு, ஹுவிஷ்கன் என்பவனும் வாஸுதேவன் என்பவனும் குசன ராஜ்யாதிபதிகளா யிருந்தார்கள். வாஸுதேவன் என்னும் பெயரினாலேயே, இவன் ஹிந்து மதத்தை யனுசரித்தவனென்றும், குசன ராஜர்கள் இந்திய நாட்டாரானார்களென்றும் தெரிகிறது. கி. பி. 226-ஆம் ஆண்டில், வாஸுதேவனுடைய ஆட்சியும், தக்கணத்திலும் மகத தேசத்திலும் பிரபலமாயிருந்த ஆந்திரஸந்ததியும் முடிவு பெற்றன. பின்பு, சிற்றரசர்கள் அங்கங்கே தலையெடுத்தார்கள். அராஜகம் குடிகொண்டது. கி.பி. நான்காம் நூற்றாண்டில் மகததேசத்தில் மற்றொரு சந்ததியார் ஓங்கி வளர்ந்தார்கள்.

**மதம்** — மேற் சொல்லிய காலத்தில் (கி. மு. 232 — கி. பி. 300), மௌரியவமிசம் க்ஷீணதசையடைந்தவுடனே பிராமணமதமும் ஜைனமதமும் தலையெடுத்தன. புஷ்யமித்திரன் ராஜஸூய யாகஞ் செய்தான்; கலிங்க தேசாதிபதியாகிய கரவேலன் ஜைனமடாதிபதிகளை யாதரித்து, அவர்களுக்கு மானியங்களும் ஸத்காரங்களும் அளித்தான். ஆயினும், பௌத்த மதம் முற்றும் க்ஷீணிக்கவில்லை; பிற நாடுகளிலிருந்து வந்த சாக்கர்களும், யூச்சிகளும், பல்லவர்களும் அதனை அனுசரித்துக் கொண்டாடினார்கள்; கனிஷ்கனுடைய நாளில் அது உன்னததசை யடைந்தது.

**ஸம்ஸ்கிருத கிரந்தங்கள்** — பிராமணமதத்தோடுகூட ஸம்ஸ்கிருத பாஷையும் அபிவிருத்தி யடைந்தது. பாணினி இயற்றிய வியாகரண ஸூத்திரங்களுக்குப் பாஷியம் எழுதிய பதஞ்சலி என்னும் பண்டிதசிரோமணி விளங்கியது இந்தக் காலத்திலேயே. கல்விப் பயிற்சி வாய்ந்த பிராமணரும் பௌத்தரும், பிராகிருதத்தை வழங்காமல், ஸம்ஸ்கிருதத்தையே பேசத் தொடங்கினார்கள். அசுவகோசன் முதலான பௌத்த நூலாசிரியர்கள் ஸம்ஸ்கிருதத்தில் நூல்கள் இயற்றினார்கள்; ராஜசாஸனங்கள் முதலியன ஸம்ஸ்கிருதத்திலேயே எழுதப் பட்டன.

மதவிசாரமும், தத்துவ விசாரமும் அதிகமாயின. இவை சம்பந்தமான புதிய நூல்கள் இயற்றப்பட்டன. ஒழுக்க முறைகளை விளக்கும் சட்டங்களாகிய தர்மசாஸ்திரங்கள் எழுதப்பட்டன.

கதைகளும், காவியங்களும், நாடகங்களும் பல்கின. 'மிருச்சகடி' என்னும் பிரசித்தமான நாடக மெழுதிய சூத்ரகன் என்னும் கவியும், ஹலன், பாஸன் முதலான கவிகளும் இருந்தது இந்தக் காலமே. சரகம், சுச்ருதம் என்னும் வைத்திய நூல்கள் எழுதப்பட்டதும் இந்தக் காலத்திலேயென்று கண்டோமல்லவா? சிற்பநூற் பயிற்சி மிகுந்து கட்டட விசேஷங்களும் கற்சித்திரங்களும் ஏற்பட்டது இந்தக்காலமே.

## 8. குப்தர்களின் துரைத்தனம்

**குப்தராஜ்யம்** — ஷிதியர்களும் ஆந்திரர்களும் நசித்தபிறகு, குப்தராஜ்யம் தலையெடுத்தது. இந்த ராஜ்யம் கி. பி. 319-ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் தலைப்பட்டணம் பாடலீபுத்திரம் (பாட்ணு). பிறகு, பைஸாபாத் ஜில்லாவிலுள்ள அயோத்தியையும், குவாலியரிலுள்ள உஜ்ஜயனியும் தலைநகர்களாயின. இந்த ராஜ்யம் வடஇந்தியா, கீழ் இந்தியா, பஞ்சாப், குஜராத்து ஆகிய இவையனைத்தும் சேர்ந்ததாகும். இந்த அரசர்கள் விஷ்ணுவையும் லக்ஷ்மியையும் பூஜிப்பவர்கள்; பிராமணமதத்தை யனுசரிப்பவர்கள்.

**சந்திரகுப்தன்** — இவன் பாடலீபுத்திரத்துச் சிற்றரசனை யிருந்து, கலியாணஞ் செய்து கொண்ட மனைவியினாற் கிடைத்த செல்வாக்கையும் பலத்தையுங் கொண்டு பிரபலமானவன். குப்த வமிசத்திற்கு ஆதிபுருஷன் இவனே. இவன் கி. பி. 320-ஆம்

ஆண்டிற் பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு, 326-ஆம் ஆண்டில் மரித்தான்.

**ஸமுத்திரகுப்தன்** — இவன் சந்திரகுப்தனுடைய மகன்; திறமையான ராஜன், பிரசித்திபெற்ற போர் வீரன். இந்தியா முழுமையும் இவனுக்குப் பயப்பட்டு அடங்கி யிருந்தது. வட இந்திய அரசர்களை வென்று, தென் இந்தியாவிலும் படையெடுத்துச் சூறையாடினன்; ராஜஸூய யாகமொன்று செய்தான். இவன் ஹிந்துவாயிருந்தும், புத்த கயையில் மடம் கட்டிக்கொள்ளும்படி லங்காபுரீசனை பௌத்த ராஜனுக்கு அனுமதி கொடுத்தான். ராஜதந்திரத்திலும் போர்த்தொழிலிலும் வல்லவனாயிருந்ததன்றிக் கவிபாடுவதிலும் ஸங்கீதத்திலும் தேர்ச்சி மிகுந்திருந்தான்.

**விக்ரமாதித்யன்** — (கி. பி. 375 - 413) இவன் ஸமுத்திரகுப்தனுடைய மகன். இவனுடைய பூர்வ நாமம் இரண்டாம் சந்திரகுப்தன்; குப்த ராஜபரம்பரையில் மூன்றுவதவன்; கி. பி. 375-ஆம் ஆண்டிற் பட்டத்திற்கு வந்தவன்; வெற்றிகள் பல பெற்றவன்; கல்வித்திறன் மிகுந்தவன்; வங்காளத்தில் நேர்ந்த கலகத்தை யடக்கினன்; ஸிந்து முகத்துவாரங்களைக் கடந்து படையெடுத்துப் போனன். கி. பி. 395-ஆம் ஆண்டில் மேல் இந்தியாவிலுள்ள பெரிய *'ஸாட்ராப்பு' களை (க்ஷேத்திர பாவனர்களை, 'கவர்னர்'களை) வென்று, ஸௌராஷ்டிரம் (காத்தியாவாட்), மால்வா, குஜராத்து ஆகிய நாடுகளைக்

*'ஸாட்ராப்பு' — மாகாணதிபதிகள் பெர்ஷியபாஷையில் 'க்ஷேத்திரபர்' அல்லது 'க்ஷேத்திர பாவனர்கள்' எனப்படுவார்கள்.

கைப்பற்றினான். அதன் பின்பு 'விக்ரமாதித்யன்' (வல்லமையிற் சூரியனை நிகர்த்தவன்) எனப் பெயர் பூண்டான். தன்னுடைய வல்லமையை விளக்குவதற்காக இவன் தன் நாட்டு நாணயங்களில், ஒரு கையில் வில்லும் மற்றொன்றில் அம்பும் வைத்திருக்கும் தன் உருவத்தைப் பதித்திருந்தான். இந்நாட்டில் வழங்கும் விக்கிரமார்க்கக் கதைக்கு நாயகன் இவனே போலும். 'ஸாட்ராப்பு' நாடுகளை வசமாக்கிக் கொண்டதனால், சமுத்திரக்கரை இவனுக்கு எளிதில் எட்டியது; இதனால், மேற்றிசை நாடுகளோடு கடல்மார்க்கமாக வியாபாரம் பலப்பட்டது. 'ஸாட்ராப்பு'த் தலைநகரான உஜ்ஜயினியையே இவன் தலைநகராகக்கொண்டு மிகப் பிரசித்தி பெற்றான். இவனுடைய ஸம்ஸ்தானத்தில் விளங்கிய வித்வச்சிரோமணிகள் எழுதிய பல நூல்களினால், இவனுக்கும் உஜ்ஜயனிக்கும், அழியாப் புகழ் உண்டாயிருக்கிறது.



சந்திரகுப்த விக்ரமார்க்கன் நாணயம்.

புத்தருடைய ஜனனக்ஷேத்திரத்திற்கு யாத்திரையாக வந்த பா-ஹியான் என்னும் சீனதேசத்தான் இந்தியாவிற் சஞ்சரித்தது இந்தக் காலத்திலேயே. விக்கிரமாதித்தியனுடைய காலத்தில், மகதராஜ்யத்திற் பெரிய பட்டணங்கள் இருந்தன, ஜனங்-

கள் செழித்துச் செல்வவான்களாக இருந்தார்கள், சாலைகளிற் பிரயாணிகள் தங்குவதற்குச் சத்திரங்களுஞ் சாவடிகளும் இருந்தன, தர்ம வைத்திய சாலைகள் (ஆசுபத்திரிகள்) இருந்தன, துரைத்தனம் கடுமையு மில்லாமல் இளக்கமுமில்லாமல் நடுத்தரமாக இருந்தது, வரிகள் அதிகம் இல்லை. ஜனங்கள் தம் இஷ்டப்படி வரலாம், இஷ்டப்படி போகலாம், குற்றங்களுக்குத் தண்டனைக் கடுமையேயாயினும் இரக்க மற்றுக் குரூரமாக இருக்கவில்லை; பௌத்தாசாரமாகிய அஹிம்ஸை பெரிதும் அனுஷ்டிக்கப்பட்டது (அதாவது, எவ்வுயிருங் கொல்லப் படவில்லை), பலகறை (சோகி) பணமாக வழங்கியது, மொத்தத்தில் விக்கிரமாதித்தியன் செவ்வையாக அரசாண்டான் — என்று பா-ஹியான் எழுதிவைத்திருக்கிறான்.

விக்கிரமாதித்தியனுக்குப் பிறகு குப்தராஜாங்கம் க்ஷீணகதியடைந்தது. அவனுடைய மகனாகிய முதலாம் குமாரகுப்தனும், பேரனாகிய ஸ்கந்தகுப்தனும் கி. பி. 413 - முதல் 480-வரையில் அரசாண்டார்கள். அவர்களுடைய காலத்தில் ராஜ்யம் மெலிவுற்றது.

ஹூணர் படையெழுச்சி — ஹூணர்கள் ஆசியாவிலுள்ள மங்கோலியா தேசத்து நாடோடிச் சாதியார்கள். இவர்களுள் ஒரு பகுதியார் ஐரோப்பாகண்டத்திற் பிரவேசித்து, அநேக தேசங்களைக் கைப்பற்றி அரசாண்டு வந்தனர். மற்றொரு பகுதியார் வெள்ளை ஹூணர் எனப்படுவர். இவர்கள் பெர்ஷியாவை ஜயித்துக்கொண்டு, குசன ராஜ்யமாகிய காபூலைத் தாக்கி வசப்படுத்திக் கொண்-

டார்கள். கி. பி. 450-க்கும் 460-க்கும் இடையில் இவர்களைச் சேர்ந்த சிறிய கூட்டத்தார்கள் சிலர் ஹிந்துஸ்தானத்திற் பிரவேசித்தார்கள். இவர்களைக் குப்தராஜாக்கள் துரத்தியடித்தார்கள். பத்து வருஷத்திற்குப் பிறகு வெள்ளை ஹூணர்கள் பெருங் கூட்டமாக வந்து பஞ்சாபையும் எல்லை நாடுகளையும் பற்றிக் கொண்டார்கள். மற்றொரு கூட்டத்தார் கி. பி. 480-ஆம் ஆண்டில் பெர்ஷிய ராஜாங்கத்தைச் சிதைத்தெறிந்து, அந்தப் பெரிய ராஜ்யத்தைக் கவர்ந்துகொண்டார்கள். கி. பி. 510-ஆம் வருஷத்திற்குள் இவர்கள் பஞ்சாபுக்கும் வடஇந்தியாவுக்கும் அதிபதிகளானார்கள்.

இவர்களை எதிர்ப்பதற்குப் போதுமான சக்தி குப்தர்களுக்கு இல்லை. ராஜாங்கம் அழிந்ததென்றே சொல்லத்தக்க நிலைமையிலிருந்தும், குப்தர்கள் தங்களுடைய பழைய ராஜ்யத்தின் கிழப் பகுதியை மாத்திரம் ஆண்டுகொண்டு, தம் பெயரால் நாணயங்களும் அச்சிட்டுவந்தார்கள். ஹூணர்களையெதிர்த்துப் போர் செய்வதற்காக உண்டான கிளர்ச்சியில், மகத ராஜ்யத்திற்கு உட்பட்டிருந்த சிற்றரசுகளாகிய உஜ்ஜயினியும் ஸ்தானேசுவரமும் பிரபலமெய்தின.

**மிஹிரகுலன்** — ஹூணர்கள் விரிந்த முகமும், பரந்த புஜமும், சப்பை மூக்கும், சிறிய கண்ணும் வாய்ந்து, குட்டையாயிருப்பார்கள்; காட்டுமிராண்டித்தன்மை மிகுந்தவர்கள்; குரூர சித்தமுள்ளவர்கள்; கொலை செய்வதிற் பிரியமுடையவர்கள். இவர்களுக்குத் தலைவனாக இருந்த தோரமானன்

(கி. பி. 90-510) என்பவன் பஞ்சாப், ராஜபுதனம், மத்திய இந்தியா ஆகிய இவைகளை ஒரே ராஜாங்கமாக அமைக்கப் பிரயத்தனப் பட்டான். அவனுடைய மகன் மிஹிரகுலன் என்பவன் (கி. பி. 510-540) மேற்சொன்ன வகையிலே பிரயத்தனஞ் செய்து இருபது வருஷகாலம் அரசாட்சி செய்தான். அவனுடைய கொடுமையைப் பொறுக்க மாட்டாமற் குடிக ளெல்லாரும் கலகிக்கத் தொடங்கினார்கள். குறுகிப்போன மகத ராஜ்யத்திற்குத் தலைவனா யிருந்த நரசிம்மகுப்தனும், உஜ்ஜயனியில் ஆண்டுவந்த யசோதர்மனும் (கி. பி. 528) மிஹிர குலனுடைய ஆட்சியைக் குலைத்து, அவனைக் காச்மீரத்திற்குத் துரத்தியடித்தார்கள். அங்கே அவன் (கி. பி. 540) இறந்து போனான்.

**தானேசுவர வமிசம்** — ஹூணர்களை யோட்டுவதற்குப் போராடிக் கீர்த்தி பெற்ற சிற்றரசர்களுள் பிரபாகரவர்த்தனன் என்பவன் ஒருவன். இந்தச் சந்தர்ப்பத்தில் வாய்த்த வெற்றியினால் இவன் ஏழாம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஸ்ரீகண்டம் என்னும் ராஜாங்கத்தை ஸ்தாபித்து, ஸ்தானேசுவரத்தை அதற்குத் தலைப் பட்டணமாக்கிக்கொண்டான். ஸ்தானேசுவரம் குரு வமிசத்தாரது நாடெனப் பிரசித்தி பெற்றதல்லவா? இவன் கி. பி. 605-ஆம் ஆண்டில் இறந்தான்.

**ராஜ்ய வர்த்தனன்** — பஞ்சாபில் அனேக இடங்களிலிருந்து ஹூணர்களைப் பிரபாகரவர்த்தனன் ஓட்டினான். ஆயினும், அவர்களை முற்றும் ஒழித்தவன் பிரபாகரனுடைய மகனாகிய ராஜ்யவர்த்தனன். பிரபாகரன் தன் மகள் ராஜ்யஸ்ரீயைக் கனோஜ

தேசத் தரசனுக்குக் கலியாணஞ் செய்து கொடுத்திருந்தான். பிரபாகரன் இறந்த பிறகு ராஜ்யவர்த்தனன் ஹூணர்களைத் துரத்தப்போராடிக் கொண்டிருக்கையில், மாளவ தேசத்து (உஜ்ஜயனி) அரசன், பொறாமையினால், கனோஜ தேசத்தின்மீது படையெடுத்து, அவ் வரசனைக் கொன்று, அவனுடைய மனைவியாகிய ராஜ்யஸ்ரீயைச் சிறையாகப்பிடித்துக்கொண்டு போனான்.

உடனே, ராஜ்யவர்த்தனன் மாளவத்தின்மீது படையெடுத்து, அதனை வென்று, நாடுமுழுதுந் தேடிப் பார்த்தும் தன் சகோதரியாகிய ராஜ்யஸ்ரீயைக் காணாமல் துக்கித்தான். பின்னும், மேல்வங்காளத்தில் ஆண்டுகொண்டிருந்த குப்தராஜன் மாளவத் தரசனுக்குத் துணைசெய்து தன் மைத்துனனைக் கொல்லுவித்தா னென்றுணர்ந்து ராஜ்யவர்த்தனன் அவன்மீது படையெடுத்துப் போனான். அவன் குப்தவமிசத்துக் கடைசியரசனாவன். அவன் போர்செய்யத் துணியாமல், இணங்கி ராஜ்யவர்த்தனனை நயந்துகொண்டு விருந்துக்கு அழைத்துச் சதியாகக் கொலை செய்துவிட்டான்.

**ஹர்ஷசக்கரவர்த்தி** — (கி. பி. 606-648) ராஜ்யவர்த்தனனுடைய தம்பியாகிய ஹர்ஷவர்த்தனன் பட்டத்திற்கு வந்து வங்காளத் தரசன்மீது பகைசாதிக்கப் போனான். கங்காநதிக்கரையில் இறங்கியிருக்கையில், தன் தங்கை ராஜ்யஸ்ரீ இருக்குமிடம் புலப்பட்டது. அவளைத் தேடிக்கொண்டு விந்தியமலைக் காடுகளிற் புகுந்து சென்று, திவாகரர் என்னும் பௌத்த ரிஷியின் ஆசிரமத்தை யடைந்தான். அவரிடத்தில் ஆயிரக் கணக்கான சிஷ்யர்கள் பற்-


பல சாஸ்திரங்கள் படித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுள் ஒருவனுடைய உதவியினால் தன் தங்கையைக் கண்டுபிடித்தான். அவள் அந்த ரிஷியினிடத்தில் உபதேசம் பெற்று பௌத்தத் துறவியானாள்.

பிறகு, வங்காளத்தரசனை வென்று, கொன்று, குப்தவமிசத்தை (கி. பி. 606) அடியோடு அழித்தான்.

ஹிந்துஸ்தானம் முழுமையும் ஜயித்து, மறுபடி ஒரு குடையின் கீழாக்கி, ஆண்டவன் இவனே. இவன் மிகவும் பிரசித்தி பெற்றவன். இவனுடைய பெயரால் ஒரு சகமும் ஏற்பட்டது. வங்காளமும் நேபாளமும் இவனுடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. காமரூப ராஜ்யத்து (ஆஸ்ஸாம்) அரசனும், வல்லபராஜ்யத்து (குஜராத்து) அரசனும் இவனுக்குக் கப்பங்கட்டி வந்தார்கள். இவனுடைய படையில் 60,000 போர் யானைகளும், 100,000 போர்க் குதிரைகளும் இருந்தன வென்பார்கள். தக்கணத்தில் அரசாண்ட சாளுக்கிய ராஜனாகிய இரண்டாம் புலிகேசி என்பவனால் மாத்திரம் இவன் நர்மதாநதிக்கரையில் தோற்கடிக்கப்பட்டான்.

பிறகு, ராஜ்யத்தின் க்ஷேமத்தின் பொருட்டுச் சாஸ்திரப் பயிற்சியும், கைத்தொழில்களும், மதப் பிரசாரமும், தருமங்களும் நாட்டிற் பெருகச் செய்தான்; சீன ராஜ்யத்தோடு நல்லுறவு கொண்டாடினான். பௌத்த பிக்ஷுக்களும் பிராமணர்களும் நாட்டிற் கல்வியைப் பெருக்கினார்கள். வித்துவான்களுக்குத் துரைத்தனத்தார் ஆதரணையும் ஸம்-

மானமும் உண்டு. பௌத்த மதம், ஜைன மதம், ஹிந்து மதம் ஆகிய மூன்றும் நாட்டில் வழங்கின.




ஹர்ஷன் பௌத்தமதஸ்தன். முதிர் வயதில் அதன்மீது அதிகப் பற்றுக் கொண்டான். இவன் சிறந்த

கவிவாணன்; நாடகங்கள் எழுதி அவைகளை ஆடிக்காட்டுவதற்குக் கொடுப்பான். இவனுடைய சரித்திரத்தைப் பாணகவி என்னும் பிராமணன் "ஹர்ஷசரிதம்" என்னுங் காவியமாக எழுதினன். நாடெங்கும் கொல்லாவிரதம் அனுசரிக்கப்பட்டு வந்தது. தர்மசாலைகளும், ஆஸ்பத்திரிகளும், பௌத்தமடங்களும், இந்து ஆலயங்களும் அதிகமாயின. இவனுடைய தலைநகரம் கனோஜம். இவன் கி. பி. 648-ஆம்வருஷத்தில் இறந்தபிறகு, ராஜ்யத்திற் குழப்பம் மேலிட்டது.

ஹியூன்-ஸாங் — இவன் சீனதேசத்து யாத்திரிகன்; பௌத்தபிக்ஷு (ஸந்நியாஸி); ஹர்ஷ சக்கரவர்த்தியின் ராஜாங்க முறைகளை விவரமாக எழுதி வைத்தவன்: இந்தியா முழுதும் யாத்திரை செய்து, கயைக்கு அருகிலுள்ள நீலந்தக்கலாசாலையில் பௌத்த நூல்களைப் படித்துத் தேர்ந்தவன். நீலந்தக் கலாசாலை பெரிய பௌத்த மடம். அதனில் 10,000 வித்தியார்த்திகள் கல்வி கற்றுவந்தார்கள். அவர்களின் போஷணைக்காக அனேக கிராமங்கள் மானியமாக விடப்பட்டிருந்தன. இவ்வளவு இருந்தும் பௌத்தமதம் இந்தியாவிற் பரவாததைக் கண்டு ஹியூன்-ஸாங் விசனப்பட்டு எழுதி யிருக்கிறான்.

**பௌத்தமதமும் பிராமணமதமும்** — (கி. பி. 300 — 650) நாளடைவில் பௌத்த மதம் ஒழியத் தலைப்பட்டது; பிராமண மதம் சிறிது மாறுபாடுகளை எய்தி இப்பொழுது வழங்கப்பெறும் ஹிந்து மதமாயிற்று. ஜனங்களுக்குப் பக்தி யுண்டாக்கும் பொருட்டு, அவர்களுடைய அபிப்பிராயங்களுக்கு

இசைந்தபடி பற்பல தேவதைகளையும், ஆசாரங்களையும், விக்கிரகாராதனையையும், சிறப்பு மிகுந்த உற்சவங்களையும், ஊர்கோலங்களையும் அவ்விரண்டு மதத்தவர்களும் தம் அனுஷ்டானங்களிற் சேர்த்துக்கொண்டார்கள். இப்படிப் பாமரஜனங்களுக்கு இணக்கமான ஏற்பாடுகளை முதலிற் செய்தவர்கள் பௌத்தர்களே. அவர்களைப்பார்த்து பிராமணர்களும் அப்படியே செய்து அவர்களை மிஞ்சினார்கள். அது மாத்திரமே யல்லாமல், பௌத்த மதத்திற் காணப்பெறும் உத்தமமான கொள்கைகளையும் பிராமணர்கள் கைக்கொண்டதனால், பௌத்தமத மென்று வேறொரு மதம் இருக்க வேண்டியது அவசியமில்லாமற் போயிற்று. மற்றும், குலப்பெருமை யில்லாதவர்க ளாயினும், பிறநாட்டா ராயினும் வீரர்களா யிருப்பவர்களைப் பிரபுக்களென மதித்துப்பிராமணர்கள் க்ஷத்திரியர்களாகக் கொண்டமையால், குசனர்கள், குப்தர்கள், ஹூணர்கள் முதலாயினோர் பிராமண மதத்தை யாதரிக்கலானார்கள். இவர்களுடைய காலத்தில் இந்து மதக்கொள்கைகள் ஒழுங்கு படுத்தப் பெற்றன; மதக் கிரந்தங்களும், ஜனசாரகிரந்தங்களும் அனேகம் எழுதப்பெற்றன. புராணங்களும் தர்மசாஸ்திரங்களும் திருத்த முற்றன. அரைத்தன முறையில் மனுதர்மசாஸ்திர விதிகள் அனுசரிக்கப் பட்டன, வர்ண பேதக் கட்டுப்பாடுகள் பலமாயின, தொழில்கள் ஜாதியை யனுசரித்து ஏற்பட்டன.


குப்த ராஜர்களும் ஹார்ஷசக்கரவர்த்தியும் வித்துவான்களை மிகவும் ஆதரித்ததனால், ஸம்ஸ்கிரதக் கல்வி மிகுந்தது. காவியங்களும் பற்பல

நூல்களும் எழுதப்பெற்றன. இரண்டாம் சந்திர குப்தனாகிய விக்கிரமாதித்தியனுடைய ஸம்ஸ்தானத்திற் காளிதாஸர் முதலாகிய பிரபல கவிரத்தினங்கள் விளங்கினார்கள். அவர்களுக்குப் பிற்காலத்தில், ஹர்ஷனுடைய மரணத்திற்கு முன், நிகண்டாசிரியராகிய அமரசிங்கர்; மருத்துவச்சிரேட்டராகிய தன்வந்திரி; தருமசாஸ்திராதிகாரியாகிய யாஞ்ஞவற்கியர்; வானசாஸ்திர நிபுணர்களாகிய ஆரியபட்டர், பிரம்மகுப்தர், வராஹமிஹிரர்; 'வாஸவதத்தை' என்னுங் காவியகர்த்தராகிய ஸுபந்து; 'தசகுமார சரித்திர' கர்த்தராகிய தண்டிகவி, வியாகரண சாஸ்திரிகளாகிய வாமனர், ஜயாதித்தியர்; 'கிராதார்ஜுனீயம்' எழுதிய பாரவிகவி; 'ஸேதுகாவியம்' என்னும் பிராகிருத காவியமெழுதிய பிரவரஸேனனென்னும் காச்மீரத்தரசன்; நீதிசதகம், சிருங்காரசதகம், வைராக்கிய சதகம் முதலியன எழுதிய பர்த்திருஹரி முதலானவர்கள் விளங்கினார்கள். ஹர்ஷ சக்கரவர்த்தி இரண்டு நாடகங்கள் எழுதினார்.

## 9. சாளுக்கியரும் ராஜபுத்திரரும்

**சாளுக்கிய வமிசம்** — (கி. பி. 608 — 850) ஹர்ஷ சக்கரவர்த்தியைத் தக்கணத்தில் முறியடித்தவர்கள் இந்த வமிசத்தவரே. இந்த வமிசம் ஆறும் நூற்றாண்டில் ஏற்பட்டது; இதன் மூலபுருஷன் முதலாம் புலிகேசி. அப்பொழுது ஆந்திர ராஜ்யத்துப் பெரும்பாகம் இவனுடையதாயிருந்தது.

இவன் வட இந்தியாவிலிருந்து தக்கணத்திற்கு வந்த ராஜபுத்திரத் தலைவர்களுள் ஒருவன். ராஜ-புத்திரர்கள் எப்பொழுதும் இந்து மதாபிமானிகள், நல்ல போர்வீரர்கள், க்ஷத்திரியர்களெனப்பட்ட-வர்கள். இவன் கி. பி. 550-ஆம் ஆண்டில் வாதாபி புரம் (பீஜபூர்) என்னும் நகரைப் பிடித்துக்கொ-




ண்டு, ராஜாங்கம் அமைத்து, தென் இந்தியாவில் பிரபலனானான்.

இவனுடைய பேரனாகிய ஸத்தியாசிரயன் என்னும் இரண்டாம் புலிகேசி கி. பி. 608-ஆம் ஆண்டிற் பட்டத்திற்கு வந்து, அனேக நாடுகளை வென்று

தன் ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டான். மேற்கே குஜராத்து, மால்வா, கொங்கணம் ஆகிய தேசங்களையும், கிழக்கே பல்லவர்களது வேங்கி நாட்டையும், தெற்கேயிருந்த பல்லவ ராஜ்யங்களையும் ஜயித்தான். சோழ, பாண்டிய, கேரள ராஜ்யாதிபதிகளையும் அடக்கி, அவர்களால் பேரரசென மதிக்கப் பெற்றான். 620-ஆம் ஆண்டில் ஹர்ஷனுடைய படையைத் துரத்தியடித்த பிறகு, நர்மதா நதிக்குத் தெற்கிலுள்ள தேசமுழுதும் ராஜபுத்திர சாளுக்கியர்களுடைய ஆட்சிக்குள் அடங்கியிருந்தது. ராஜ்யம் விஸ்தாரமாக இருந்ததனால், கீழ்த்திசையிலுள்ள பாகத்தை ஆள்வதற்காக இவன் தன் தம்பியாகிய விஷ்ணுவர்த்தனனை 'வைஸ்ரா'யாக வேங்கிக்கு அனுப்பினான். பிற்காலத்தில், விஷ்ணுவர்த்தனனுடைய சந்ததியார் ஸ்வதந்திரர்களாகிக் கீழ்நாட்டுச் சாளுக்கிய வம்சத்தாரெனப் பிரிந்து போயினர். மகாராஷ்டிர நாட்டில் வாதாபிபுரத்தில் (பாதாமி அல்லது பீஜபூர்) நிலை கொண்ட ஆதிசாளுக்கியர் மேல்நாட்டுச் சாளுக்கியரென வழங்கப் பெற்றார்கள். ஹியூன்-ஸாங் என்னும் சீனத்து யாத்திரிகன் இந்தப் புலிகேசியின் ஸம்ஸ்தானத்திற்கு (கி. பி. 639) வந்திருந்து, இவனுடைய துரைத்தனத்தைப்பற்றி நன்றாக எழுதியிருக்கிறான். புலிகேசியின் பிரதாபத்தைக் கேட்டு மகிழ்ந்து பெர்ஷிய தேசத்தரசன் கி. பி. 625-ஆம் ஆண்டில் இவனுடைய ஸம்ஸ்தானத்திற்கு ராயபாரம் அனுப்பினான்.

இவ்வளவு பராக்கிரமசாலியான புலிகேசியைக் காஞ்சீபுரத்துப் பல்லவர்கள் (கி. பி. 642) வென்று,

இவனுடைய தலைநகரைக் கொள்ளை யடித்து, வடஇந்தியாவுக்கு அதிபதிகளானார்கள். ஆனால், 13-வருஷத்திற்குப் பிறகு, புலிகேசியின் மகனாகிய முதலாம் விக்கிரமாதித்தியன் (கி. பி. 655) பல்லவர்களை வென்று, அவர்களுடைய தலைநகராகிய காஞ்சிபுரத்தைப் பிடித்துக் கொண்டான். சாளுக்கியர்களுடைய ஆட்சி கி. பி. 850-வரையில் நீடித்திருந்தது. பின்பு, மகாராஷ்டிர வமிசத்து ராஷ்டிரகூட ராஜ பரம்பரையில் தோன்றிய ராஜனொருவன் அவர்களை வென்று ஆட்சிபெற்றான். அதுமுதல் இருநூறு வருஷகாலம் ராஷ்டிரகூடத்தார் தக்கணத்துக்குப் பிரபுக்களாக இருந்தார்கள்.

மதக் கொள்கைகள் வட இந்தியாவில் மாறுபட்டதுபோலவே, சாளுக்கிய ராஜ்யத்திலும் மாறுபாடுகள் எய்தின. வரவர பௌத்தமதம் பலங்குறைந்து வாடிற்று, ஹிந்துமதம் பிரபலமாயிற்று. சாளுக்கியருடைய காலத்தில் ஹிந்துக்கள் தம் தெய்வங்களாகிய விஷ்ணுவுக்கும் சிவனுக்கும் அனேக ஆலயங்கள் கட்டினார்கள். எல்லோராவிலுள்ள பிரசித்தமான தேவாலயம் இவர்களுடைய காலத்தில் கற்பாறையைக் குடைந்து நிர்மிக்கப்பட்டது. பாறைகளைக் குடைந்து கோவில்களாக்கும் வழக்கம் பௌத்தர்களிடத்திருந்து ஹிந்துக்கள் கற்றுக்கொண்டார்கள். தென்நாடுகளிலும் மேல்நாடுகளிலும் ஜனங்கள் ஜைன மதத்தையே உறுதியாகக் கடைப்பிடித்துவந்தார்கள். ஜைன சமயிகள் சாளுக்கியர்களுடைய பிரபுத்துவத்தில் அதிகரித்தார்கள். குஜராத்திலிருந்த (கூர்ஜரதேசம்) சாளுக்கியர்கள் ஜைனமதத்தை ஆதரிப்பதற்குப்

பெயர் பெற்றவர்கள். ஹேமசந்திரர் என்னும் பிரபல (ஜைன) வித்துவான் அவர்களுடைய ஸம்ஸ்தானத்துப் பண்டிதரே. அந்தச் சாளுக்கியருள் சிலர் பிராணிகளின் உயிரைத் தம் உயிரெனக் கருதி இரங்கி ஆதரித்தார்கள். குஸ்மாரபாலன் என்பவன் தன் ராஜ்யத்திலிருந்த கசாப்புக் கடைகளை யெல்லாம் ஒழித்துவிட்டு, மூன்று வருஷ காலம் தன் பொக்கிஷத்திலிருந்து அந்தக் கசாப்புக்காரர்களுக்குள்ளாக சராசரி வரும்படித் தொகையைக் கொடுத்து வந்தான்.

ஹர்ஷனுக்குப் பிற்காலம்—ஒருவனுடைய புத்தி பலத்தையும் பராக்கிரமத்தையுமே ஆதாரமாகக் கொண்டு ஒரு ராஜ்யம் அமைக்கப் பெறுமாயின், அந்தத் தீரன் உயிர்த்திருக்கும்பொழுதே ராஜாங்கம் கிரமமாக நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அவன் செய்யவேண்டும்; இல்லாவிட்டால், அவனுக்குப் பின்பு அந்த ராஜ்யம் சிதைந்துக் கட்டுக் கடங்காமல் நிலைகுலைந்து போகுமென்பது ஹர்ஷனுக்குப் பிறகு வட இந்தியாவின் சரித்திரத்தினால் விளங்கும். அந்த வமிசத்தில் ஹர்ஷனே கடைசிச் சக்கரவர்த்தியென்றே தோன்றுகிறது. அவனுடைய பட்டத்திற்குச் சரியான நாதன் இல்லாததனால், மந்திரி யொருவன் அதனைப் பற்றிக்கொண்டான். சீனதேசத்திலிருந்து வந்திருந்த ராயபாரிக்கு அந்த மந்திரி கொடுமை செய்ததனாலே, சீனத்தார் சினந்து அவனோடு சண்டைக்கு வந்து, அவனைச் சிறைப்பிடித்துப் போயினர்.

ராஜாங்கம் சோர்வுற் றிருப்பதை யுணர்ந்து, வெளி மாகாணங்க ளெல்லாம் ஸ்வதந்திரம் மேற்-

கொண்டன. முதலில் ஸ்வதந்திரம் மேற்கொண்டது வல்லபராஜ்யம் (கூர்ஜரதேசம், குஜராத்து); அதன் தலைவர்கள் ஹர்ஷன் வகித்திருந்த ஸாம்ராஜ்யபிருதுகனை வகித்துக்கொண்டார்கள். ஹர்ஷனுக்குக் கீழ்ப்பட்டிருந்த கனோஜமும் நேபாளமும் தனியரசுகளாயின. ஹர்ஷராஜ்யத்திற்கு வெளியே யிருந்த காச்மீரம், காபூல், பஞ்சாப், ஸிந்து ஆகிய இவைகள் அப்படியே நின்று, ஒவ்வொன்றாக மகம்மதியர்களுடைய அதீனமாயின. ஹர்ஷனுடைய விஸ்தாரமான ராஜ்யத்தில் மீந்து நின்றது பீஹாரும் மேல்வங்காளமும் மாத்திரமே. இதனை ஆள்வதற்கு கி. பி. 670-ஆம் ஆண்டில் இரண்டாம் குப்தவமிசம் தோன்றியது. இந்த வமிசமும் கி. பி. 825-ஆம் ஆண்டில் நசித்துப் போயிற்று.

ராஜபுத்திரர் — முதலாம் குப்தவமிசத்து ராஜாக்களுடைய காலத்திற்கு முன்னும் பின்னும் ஹிந்துஸ்தானம் அல்லகல்லோலமாக இருந்ததல்லவா? அந்தக் காலங்களில் பிறத்தேசத்தார் பலர் — சாக்கர்கள், பல்லவர்கள், ஹூணர்கள் முதலானவர்கள் — இந்தியாவுக்கு வந்து நாளடைவில் இங்கேயே குடியேறி யமர்ந்து, அதற்குமுன் இருந்த ஸ்வதேசக் குடிகளோடு கலந்து ஒருமைப் பட்டுப் போனார்கள். இப்படிக் கலந்த பிறநாட்டார்கள் மதத்திலும் ஒழுக்கத்திலும் ஹிந்துக்களாகிவிட்டார்கள். இந்தக் கலப்பினாற் புதிய ஜாதியொன்று தோன்றியது. இந்தச் சாதியாரிடத்து மத்திய ஆசியக் குடிகளுக்குரிய தேகவலிமையும் போர்க்குணமும், ஹிந்துக்களுக்குரிய மதாபிமானம், பக்தி, வைராக்கியம், குலாபிமானம் ஆகிய இவைகளும்

அமைந்திருந்தன. இந்தப் புதிய ஜாதியின் தலைவர்கள் பழைய ஹிந்துதேவதைகளின் பரம்பரையிலும் வீரர்களின் பரம்பரையிலும் தோன்றியவர்களெனச் சொல்லிக்கொண்டார்கள் (அக்கினிகுலத்தவர்கள் இப்படி ஏற்பட்டவர்கள்). நாளடைவில், இவர்களுடைய உற்பத்தி அவ்வளவு சிறப்புடையதெனவே ஒப்புக்கொண்டு, இவர்களை இக்காலத்து க்ஷத்திரியர்களென ஜனங்கள் மதிக்கலானார்கள். இவர்கள் ஹிந்துமதத்தில் மிகுந்த பற்றுடையவர்களாக இருப்பது ஹிந்து புரோகிதர்களுக்குப் பிரீதியாக இருந்தது. இந்தப் புதிய தலைவர்களும், இவர்களுடைய கூட்டத்தார்களும் "ராஜபுத்திரர்கள்" என்னும் பெயர் பூண்டார்கள். எட்டாம் நூற்றாண்டு முதல், மகம்மதியர் ஆட்சிபெறுமளவும் ஹிந்துஸ்தானத்துச் சரித்திரமெனப்படுவது இந்த ராஜபுத்திரர்களுக்குள் நடந்த ஓயாச் சண்டைகளின் விவரமே. இந்தச் சண்டைகளினால் ராஜபுத்திர ராஜாங்கங்களின் பலம் குன்றியது, இவர்களுக்குள் ஒருமைப்பாடும் இல்லாமற் போயிற்று; இவர்களைத் தனித்தனியே வெல்வது மகம்மதியர்களுக்கு எளிதாயிற்று. மேற்சொல்லிய போராட்டங்களினால், ராஜபுத்திரர்களுக்கு அருமையான சௌரியமும், பராக்கிரமமும், உறுதியான விசுவாசமும், பெருந்தன்மையும், தயாளமும் மேலும் மேலும் உண்டாயின.

பௌத்தமதம் — *ராஜபுத்திரர்கள் இந்தியாவில்* பிரபலமாக இருந்த காலத்தில் பௌத்தமதம் முற்றும் க்ஷீணித்தது, ஹிந்துமதம் எங்கும் வியாபித்தது; வியாபாரம் அதிகரித்தது, ஐசுவரியம் பெரு-

கிற்று. பத்தாம் நூற்றாண்டு வரையில் கோவில்கள், மடங்கள் முதலியவை செங்கல்லினாற் கட்டப்பட்டிருந்தன. ராஜபுத்திரர்கள் அனேகங் கோவில்களைக் கருங்கல்லினாற் கட்டினார்கள்; அவைகளை அழகாகவும் சிறப்பாகவும் அமைத்தார்கள். டெல்லியில் சோஹார்கள் கட்டுவித்த கோவில்களும், ஆஜ்மீர், கனோஜம், ஜான்பூர் முதலிய ராஜபுத்திரஸம்ஸ்தானங்களிற் கட்டப்பட்ட கோவில்களும் கருங்கல்லினாற் சிறப்பாக அமைக்கப் பட்டவைகளே. பிற்காலத்தில் மகம்மதியர்கள் இவைகளைத் தங்களுடைய மசீதுகள் கட்டுவதற்கு உபயோகித்துக் கொண்டார்கள். கட்டடத்திற்குக் கருங் கல்லை முதலில் உபயோகித்தவர்கள் தக்கணத்து ராஜபுத்திரர்கள்.

ராஜபுத்திரர்கள் இந்துமதத்தையே ஆதரித்தார்களெனினும், பௌத்த மதத்திற்கும் ஜைன மதத்திற்கும் இடைஞ்சல் செய்யவில்லை. இவர்களுடைய காலத்தில் ஜைனமதம் சற்று அபிவிருத்தியாயிற்று; அனேக மதகிரந்தங்களும் லௌகிக கிரந்தங்களும் எழுதப்பட்டன. பௌத்த மதத்தில் வெளியாசாரங்களும் சடங்குகளும் அதிகரித்தன, தத்துவ போதனை குறைந்தது, பிக்ஷுக்களுக்கும் லௌகிகர்களுக்கும் மரியாதை வித்தியாசப்பட்டது, லௌகிகர்கள் இழிவாகக் கணிக்கப்பட்டார்கள், அதன் சிறந்த கொள்கைகளும் அனுஷ்டானங்களும் ஹிந்துமதத்திற் பொருந்தப் பெற்றன — இந்தக் காரணங்களினால் பௌத்தமதம் பலமற்றது, ஹிந்து மதம் பலமுற்றது. ராஜர்களின் ஆதரணையில் சிறிது காலம் பௌத்தமதம் பீஹாரில் நடமாடிக்கொண்-

டிருந்தது; ஆனல், மகம்மதியர்கள் பிரவேசித்த-பொழுது அது அங்கிருந்து ஒழிந்து நேபாளம், ஆஸ்ஸாம், பூதான் முதலாகிய மலைநாடுகளிற்போய் நிலைகொள்ள வேண்டியதாயிற்று.

**ஹிந்துமதம்** — ராஜபுத்திரர்களுடைய காலத்-திற் கிளைத்தோங்கிய ஹிந்துமதத்திற்கும் பழைய பிராமணமதத்திற்கும் மிகுந்த வித்தியாசமுண்டு. புதிய குலத்தாரையும் புதிய ஜாதியாரையும் ஹிந்து மதத்திற் சேர்த்துக்கொண்டு அதனைப் பலப்படுத்-துவதற்குப் பிரயத்தனஞ் செய்ததில், பிறநாட்டுப் பாங்குகளும், கொள்கைகளும், ஸம்பிரதாயங்களும் ஹிந்துமதத்திற் கலந்துபோயின. புராணக் கதை-கள் பெருகிப் பெருங் கிரந்தங்களாயின. புதிதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தேவர்களையும் தேவி-களையும் ஹிந்து மதத்திற்குப் பொருத்துவிக்கும் பொருட்டுக் கதைகளுங் காரணங்களும் கற்பிக்கப் பட்டன. சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் எல்லாக் காலங்களிலும் முதன்மையே யளிக்கப்படினும், 11-ஆம் நூற்ருண்டில் ஆதித்தியன், காளி, கணபதி, ஸ்கந்தர் ஆகிய இவர்களும் முக்கியமாக ஆராதிக்-கப்பட்டுவந்தார்கள். ஆராதனையின் உத்தேசமும் தத்துவார்த்தமும் விசாரித்து அறிவோர் அரிய-ராஞர்கள்; ஜனங்கள் ஆராதனைச் சடங்கையே முக்-கியமாகக் கொண்டு, அதனையே கவனித்து வந்-தார்கள். ஜபம், தவம், ஆத்மதண்டனை, பலிகள், விரதங்கள் முதலியன அதிகரித்தன; மதச்சாகை-கள் பெருகின; சிற்சில மாறுபாடுகளுக்காக வெவ்-வேறு உட்பிரிவுகள் ஏற்பட்டன. எல்லா மதங்க-ளுக்கும் ஆதிகாரணமா யிருக்கும் தத்துவங்களை

விசாரிப்பவர்கள் அரியராஜனர்கள். இப்படிப்பட்ட துர்த்தசை முதிராமல் தடுப்பதற்குத் திறமைமிகுந்த மதாசாரியர் ஒருவர் அவசியமா யிருந்தது. படிப்பிலும், புத்தியிலும், மதாபிமானத்திலும் மிகுந்த குமாரிலபட்டர் என்னும் பிராமணர் இந்தக் கெடுவழியைத் தவிர்த்து ஜனங்கள் நல்வழியை நாட வேண்டுமென்று போதிக்கத் தலைப்பட்டார். வைதிக கர்மங்களையும், வைதிக ஆசாரங்களையுங் கைக்கொண்டு மற்றவைகளை ஒழிக்க வேண்டுமென்று அங்கங்கே பிரசங்கங்கள் செய்து ஜனங்களை ஒருவழியாகத் திருப்பினர். அவர் பௌத்த மதத்தைக் கண்டித்தும் பிரசங்கித்தார். அவருக்கு நெடுநாளைக்குப் பிறகு (கி. பி. 800) ஸ்ரீ சங்கராசாரியர் தோன்றி, திக்விஜயஞ் செய்து, ஹிந்து மதக்கொள்கைகளை ஒழுங்குபடுத்தி, ஆசாரங்களைச் சீர்திருத்தி, ஜனங்களைக் கட்டுப்படுத்திச் சட்டதிட்டங்கள் ஏற்படுத்தினர். ஹிந்து மதத்தைச் சீர்திருத்துவதே அவருடைய முதற் காரியமாக இருந்தது. அவர் ஸம்ஸ்கிருதத்தில் மகா வித்துவான், நூல்கள் இயற்றுவதில் மிகவும் வல்லவர், கேட்பவரது மனத்தைக் கவரத்தக்க வாசாலமுடையவர், சிறந்த ஆசாரியர், கட்டுதிட்டங்களமைத்து ஆளுந் திறமை மிகுந்தவர். அவர் ஹிந்து மதத்தின் தத்துவார்த்தங்களை விளக்கிக் காட்டி, ஹிந்துக்களில் எல்லாச் சாதியார்களுக்கும் ஏற்கும்படியாக ஹிந்துமதத்தை ஒழுங்குபடுத்தி, பௌத்தமதம் இருந்த பிரபலமான ஸ்திதியில் ஹிந்து மதத்தைக் கொண்டுவந்து வைத்தார். மதபோதனை கிரமமாக நடந்தேறும்பொருட்டு, ஸந்நி-

யாஸிகளை நியமித்து, அவர்களுக்கு மடங்களும் மானியங்களும் அமைத்துக் கொடுத்து, ஆசாரிய பரம்பரைகள் ஏற்படுத்தினர்.

11-ஆம் நூற்றாண்டில் ஸ்ரீ ராமானுஜர் என்னும் மதாசாரியர் தோன்றி, மிகுந்த திறமையுடன் வைஷ்ணவமதத்தைப் பரவச் செய்தார். இவரும் மகாவித்துவான். மகத்தான சக்திகளுடையவர்; வைஷ்ணவ மதத்தை யபிவிருத்தி செய்வதற்காக மடங்களும் ஆசாரிய பரம்பரைகளும் ஏற்படுத்தினர். இவரை யனுசரித்து வங்காளத்தில் சைதனியரும், மற்றத் தேசங்களில் வேறு ஆசாரியர்களும் தோன்றி ஊக்கத்துடன் உழைத்தார்கள்.

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS

## 10. தென் இந்தியா

**ஆதிதிராவிடர்கள்** — இங்கே தென் இந்தியா எனப்படுவது கிருஷ்ணா நதிக்கும் துங்கபத்திரா நதிக்கும் தெற்கேயுள்ள தேசம். ஆரியர்கள் இந்தியாவிற் பிரவேசிப்பதற்கு அனேக ஆயிரம் வருஷங்களுக்குமுன்னே, இந்தத் தேசத்தில் திராவிடர்கள் குடியேறி யிருந்தார்கள். ஒரு காலத்தில் இவர்கள் வடக்கே இந்துஸ்தானத்திற் குடியேறி யிருந்தார்களென்றும், அங்கிருந்து ஆரியர்கள் இவர்களைத் துரத்திவிட்டார்களென்றும் சொல்லி யிருக்கிறோம். அந்தக்காலத்திலும் இவர்கள் மனப்பயிற்சி, சரீரப்பயிற்சி, கைத்தொழில்கள், வியாபாரம், லலிதகலைகள், ராஜரிகம், நாகரிகம் ஆகிய இவைகளில் ஆரியர்களுக்குத் தாழ்ந்திருக்கவில்லை. இந்தியாவின் தென்-

கோடியில் வந்து அமர்ந்து, வட இந்தியாவிலுண்டான மாறுபாடுகளும் கலப்புகளும் இல்லாமல், இவர்கள் தம் பாஷைகள், ஒழுக்கங்கள், நடையுடை பாவனைகள் முதலியவைகளை இன்றைக்கும் பெரும்பாலும் மாற்றமற் கைக்கொண்டுவருகிறார்கள். கால கதியினால் நேர்ந்திருக்கக் கூடிய பிறசாதிக் கலப்புகள் ஒருவாறு இருப்பினும், இக்காலத்துத் தென் இந்தியக் குடிகளின் முகத்தில் ஆதிதிராவிடச் சாயை காணலாகும்.

**தமிழரும் தமிழ்நாடுகளும்** — தக்கணத்து ராட்டர்களும் ஆந்திரர்களும் திராவிட குலத்திற் சேர்ந்தவர்களென்றே தோன்றுகிறது. திராவிடபாஷைகளுள் ஒன்றாகிய தெலுங்கு இன்றைக்கும் ஆந்திர பாஷையென்றே வழங்கப் பெறுகிறது. ஆனால், தமிழர்களைக் குறித்துப் பேசும்பொழுது தெலுங்கர்கள் அவர்களை, 'திராவிடர்கள்' என்கிறார்கள். இதனால், உண்மையான திராவிடர்கள் தமிழர்களேயென்று நினைக்கலாகும். தமிழர்களுடைய நாடுகள் மூன்று அநாதிகாலமாகத் தென் இந்தியாவில் ஏற்பட்டிருந்தன. அவை சேர, சோழ, பாண்டியநாடுகள் எனப்படும். இவை கி. மு. நான்காம் நூற்றாண்டுக்குமுன் இருந்ததாகப் பல குறிப்புகள் இருக்கின்றன. இந்த நாட்டார் கடல்வியாபாரம் அதிகமாகச் செய்துவந்தனர் என்பதற்கும், ஐரோப்பியா கண்டத்திலுள்ள கிரீஸ், ரோம், முதலிய தேசங்களோடும், ஆசியா கண்டத்தில் பெர்ஷியா, சீனா முதலிய தேசங்களோடும் மிகுந்த வியாபாரம் நடத்திவந்தனர் என்பதற்கும் ஆதாரங்கள் பல இருக்கின்றன. இந்த நாட்டார் வியாபாரத்தில் மாத்-


திரமேயல்லாமல், போர்த்தொழிலிலும் மற்றக்கலை-
களிலும் தேர்ச்சி யடைந் திருந்தார்கள் தமிழ் நாட்டு அரசர்கள் "மூவேந்தர்" எனப் பிரசித்திபெ-ற்றவர்கள். இவர்கள் ஒருவரோடொருவர் அடிக்-கடி சண்டைசெய்வ தல்லாமல், சிங்களத்தீவுக்கும் படையெடுத்துச் செல்வதுண்டு. சிங்களத்தவர்க-ளும் தமிழ் நாடுகளின்மீது படையெடுத்து வந்தார்-கள். சிங்களத்தின் வடபாகத்திலுள்ள யாழ்ப்பா-ணம் (ஜாப்னா) என்பது கி. மு. 100-ஆம் வருஷத்-தில் தமிழர்கள் குடியேறிய நாடென்பார்கள். தமிழ் நாட்டாருடைய துறைமுகப் பட்டணங்கள் 1. காவேரிப்பட்டணம், 2. காயல், 3. கொற்கை, 4. தொண்டி (ராமேசுவரத்திற்கு அருகில்), 5. தூற்-றுகுடி, 6. கன்னியாகுமாரி, 7. கரவூர் (கிராங்க-னூர், வஞ்சிக்குளம் என்னும் ஊர்களுக்கு அருகில்), 8. தொண்டி (குவிலாண்டி) என்பவைகள். இவை-யல்லாமல் வேறு சில துறைமுகப் பட்டணங்களும் இருந்தன. அவை, திருநெல்வேலி ஜில்லாவிற் கடற்-கரையில் மூழ்கிப்போனதாகத் தெரிகிறது.

பாஷைப் பயிற்சி மிகவாயிருந்தது. கி. பி. முதல்நூற்றாண்டிலேயே தமிழ் சிறந்த பாஷை-யாகத் தேர்ந்து விளங்கியது. ஹிந்துமதம், ஜைன மதம், பௌத்தமதம் ஆகிய மூன்றும் தமிழ் நாட்-டில் வழங்கின. நீர்ப்பாசன அனுகூலங்கள் நன்றா-கக் கவனிக்கப்பட்டன; காவேரியாற்றினின்று அனேக கால்வாய்கள் வெட்டிப் பயிர்த் தொழி-லுக்கு அனுகூலமாக்கியதும், பாலாற்றின் வழியை மாற்றி இப்போதுள்ளவாறு செய்ததும் ஆதிகாலத்-துத் தமிழர்களே. இவர்களுடைய சிற்பத்திறமை

கிறிஸ்து பிறப்பதற்கு முன்னிருந்து எல்லாராலும் கொண்டாடப்பட்டு வந்தது. பிரம்மாண்டமான கோவில்கள் கட்டியவர்களும், மகாபலிபுரத்தில் மலைகளைக் குடைந்து ஆலயங்கள் அமைத்தவர்களும், கிருஷ்ணா நதிக்கரையில் அமராவதி பட்டணத்தில் பெரிய ஸ்தூபிகள் செய்துவைத்தவர்களும் இவர்களே.

**பல்லவர்கள்** — பல்லவர்களைப்பற்றி இதுவரையிற் சொல்லியிருக்கிறோம். தமிழ் நாட்டரசர்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டுப் பலங் குன்றியிருந்ததனால் இவர்களை எதிர்க்க முடியவில்லை. கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் இவர்கள் தென் இந்தியாவுக்கெல்லாம் (கிருஷ்ணா முதல் காவேரி வரையில்) அதிபதிகளாயிருந்தார்கள். ஆயினும், தமிழ்நாட்டு மூவேந்தரைத் துரத்திவிட்டு இவர்கள் ஆளவில்லை; அவர்களுக்கு மேலே பிரபுக்களாயிருந்தார்கள். இவர்களுடைய தலைநகரம் காஞ்சீபுரம். பல்லவ 'வைஸ்ராய்'கள் தெலுங்கு நாட்டை வேங்கிபுரத்திலிருந்தும், மேல்கரைநாடுகளைப் பாலக்காட்டிலிருந்தும் ஆண்டுவந்தார்கள்; ஐந்தாம் நூற்றாண்டில் தக்கணத்திற் சிறிது பாகமும் இவர்களுடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. ஆறாம் நூற்றாண்டில் சாளுக்கியர் இவர்களை அங்கிருந்து துரத்திவிட்டார்கள். தக்கணத்தாருக்கும் தென்னாட்டாருக்கும் 600 - வருஷகாலம் அடிக்கடி யுத்தம் நடந்தது. கி. பி. 600-ஆம் ஆண்டில் இரண்டாம் புலிகேசி வேங்கி நாட்டைப் பிடுங்கிக் கொண்டான். அகத்திலிருந்தும் புறத்திலிருந்தும் சத்துருக்கள் ஸதா போராடியதனால், பல்லவர்கள் நீடித்து நிற்கமுடிய

வில்லை. தென்கங்கர்கள் என்பவர்கள் மைசூரில் தலையெடுத்துப் பல்லவர்களுடைய அதிகாரத்தை ஒழித்தார்கள்; சோழர்கள் பலப்பட்டுப் பல்லவ-ராஜாங்கத்தைத் தென் இந்தியாவினின்று முற்றும் ஒழித்துக் காஞ்சீபுரத்தைத் தம் தலைநகராக்கிக் கொண்டார்கள்.




**சோழராஜ்யம்** — பல்லவர்களுக்கிருந்த தென் இந்திய ஆதிக்கியத்தைக் கவர்ந்து புதிய சோழவம்சத்தை ஸ்தாபித்தவன் முதலாம் பராந்தகன். இவன்

கி. பி. 940-வரையில் ஆண்டான். இவன் சிறந்த போர்வீரன்; பாண்டிய ராஜனையும், சிங்களத்தரசனையும் வென்முன். திருச்சிராப்பள்ளிக்கடுத்த உறையூர் இவனுடைய தலைநகரம். 'செழிப்பு மிகுந்தது சோழநாடு' என்னும் வழக்கச்சொல் ஏற்பட்டதனுல், இதனைக் கைப்பற்றக் கருதி, தக்கணத்து ராஷ்டிரகூடர்கள் அடிக்கடி படையெடுத்துவந்தார்கள். தக்கணத்தில் அவர்களுடைய ஆட்சி (கி. பி. 975) குலையவே, சோழவமிசத்தார் தலைநிமிர்ந்து ஓங்கினூர்கள். கி. பி. 985-ஆம் ஆண்டில் ராஜராஜ சோழன் என்பவன் சோழராஜ்யாதிபதி யானுன். இவன் மிகவும் பிரசித்தி பெற்றவன், தென் இந்தியாவுக்கெல்லாம் அதிபதியாக விளங்கினுன். இவனுடைய தலைநகரம் தஞ்சாவூர். சிங்களம், மேல்கரை, கீழ்ச்சாளுக்கிய நாடு, கலிங்கம் ஆகிய நாடுகளின்மீது படையெடுத்துத் தன் அதிகாரத்தை ஸ்தாபித்தான். லக்ஷத்தீவுகளையும் மால்தீவுகளையும் வென்று வசப்படுத்திக் கொண்டான். சேர ராஜனது கப்பற்படையைச் சிதைத்து, அவனுடைய பலத்தை ஒடுக்கினுன். வேங்கிநாட்டை வென்று, திரும்ப அந்த அரசனுக்கே கொடுத்து, அவனுக்குத் தன் மகளையும் கலியாணஞ் செய்து கொடுத்தான். தக்கணத்தின்மீது படையெடுத்துப் பாழாக்கத் தலைப்பட்டான். இப்படி 18 - வருஷம் கழிந்த பிறகு, போர் செய்வதைத் தவிர்த்து, ராஜ்யத்தைச் செம்மைப் படுத்தத் தொடங்கினுன். தான் அடைந்த வெற்றிகளின் ஞாபகக் குறியாகத் தஞ்சாவூர் "பெரிய கோவி"லைக் கட்டினுன்.



தஞ்சாவூர் — பெரிய கோயில்

தென் இந்திய திராவிடர்களின் சிற்பத்திறமை இதனிற் காணலாகும். இந்தக் கோவில் மதில்களி லுள்ள கல்வெட்டுகளினால் ராஜராஜ சோழனுடைய பராக்கிரமம் விளங்கும். கி. பி. 1011-ஆம் ஆண்டில் ராஜராஜ சோழன் தன் மகன் ராஜேந்திரனுக்குச் சிறிது ராஜ்யாதிகாரங் கொடுத்திருந்தான். கி. பி. 1017-ஆம் ஆண்டில் ராஜராஜ சோழ மகாராஜன் இறந்தான்.

ராஜேந்திர சோழன் கி. பி. 1042 வரையில் அரசாண்டான். தென் இந்திய ஆதிபத்தியத்தைப் பூர்ணமாக்கினான். மைசூர் தேசத்துக் கங்கர்களை வென்றான். கீழ்ச்சாளுக்கிய ராஜனுக்குத் தன் மகளைக் கலியாணஞ் செய்து கொடுத்துச் சாளுக்கியருடைய தொல்லையில்லாமற் செய்துகொண்டான். இந்தக் கலியாணத்தினாற் பிறந்தவனே முதலாம் குலோத்துங்க சோழன்.

ராஜேந்திரனுக்குப் பிறகு சோழராஜ்யம் மிகுந்த கஷ்டதசை யடைந்தது. பாண்டியர்களும், சோழர்களும், கங்கர்களும் கலகித்தெழுந்தார்கள். மேல்நாட்டுச் சாளுக்கியர் படையெடுத்து வந்தார்கள். இவர்களுடன் போர் புரிந்ததில் சோழ ராஜன் போர்க்களத்தில் தீரமாக நின்று சண்டை செய்து மாண்டான். வேங்கிநாட்டுச் சாளுக்கியரும் நாணயக் குறைவாக நடந்ததனால், அவர்களை மறுபடி வெல்லவேண்டிய தாயிற்று. இப்படிப்பட்ட யுத்தத்தினால் நேர்ந்த கஷ்டம் இவ்வளவென்பது, 28-வருஷத்திற்குள் ஐந்து சோழராஜர்கள் பட்டத்திற்கு வந்து போனார்களென்பதனாலே விளங்கும்.


ஆயினும், மேலே குறித்துள்ள ராஜேந்திர சோழனது பேரனாகிய முதலாங் குலோத்துங்கன் (கி. பி. 1063) கீழ்ச் சாளுக்கிய வமிசத்திற்குத் தலைவனாகி, போர்த்தொழில் முதலிய பலகலைகளும் பயின்று, ஏழு வருஷம் வேங்கி நாட்டரசனாயிருந்து துரைத்தன முறைகளில் தேறி, சோழ ராஜ்யத்திற்குத் தன் உரிமையை ஸ்தாபித்துப் பட்டத்திற்கு வந்தான். இவன் கலிங்க, கங்க, பாண்டிய நாடுகளையும், தென் திருவாங்கூரையும் வென்றான். அமைதியாக ஐம்பது வருஷகாலம் அரசாண்டான். சோழ நாட்டிற் சீரும் சிறப்பும் செழுமையும் சமாதானமும் குடிகொண்டிருந்தன. அங்கங்கே மாகாணாதிபதிகளையும், ராஜப் பிரதிநிதிகளையும் நியமித்து ராஜ்யபரிபாலனஞ் செய்தான். கி. பி. 1086-ஆம் ஆண்டில் தன் ராஜ்யத்து நிலங்களை அளந்தான் ('ஸர்வே' செய்வித்தான்). நிலவரி சரியாக விதிப்பதற்காக இந்தக் காரியஞ்செய்தான். ராஜராஜ சோழனைப்போல, கோவில்கள் கட்டுவித்தான். தமிழ்ப் பண்டிதர்களையும் தெலுங்கு பண்டிதர்களையும் ஆதரித்தான். சாளுக்கியரும் சோழருங் கலந்த வமிசத்தவனாகையால், இவனுக்குத் தெலுங்கின்மீதும் அபிமானம் இருந்ததும் நியாயமே. ஊர்களின் எல்லைகளில் வசூல் செய்துவந்த சுங்கத்தை (வரியை) ஒழித்தான். இதனால் வர்த்தகர்களுக்கும் பிரயாணிகளுக்கும் பெரிய தொந்தரவு நீங்கிற்று. கிராமங்களில் நீதிவிசாரணைக்குப் பஞ்சாயத்துக்களை நியமித்தான். குடிகள் செளக்கியமா யிருந்தார்கள்.

முதலாங் குலோத்துங்கனுடைய கடைசி காலத்தில் சோழ ராஜ்யம் தளர்வுற்றது. துவார-

ஸமுத்திரத்துச் சிற்றரசான பிட்டிதேவன் (இவனை விஷ்ணுவர்த்தனன் என்பதும் உண்டு) கங்க நாட்டிலிருந்து சோழ 'கவர்ன'ரை (கி. பி. 1117) அடித்துத் துரத்திவிட்டான். அங்கிருந்து, இப்பொழுது மைசூர்தேசம் எனப்படுவதின் பெரும்பாகத்தைக் கைப்பற்றிக் கொண்டான். இவனுடைய பேரன் வீரபல்லாளன் என்பவன் (கி. பி. 1173 — 1220) சோழருக்கும் சாளுக்கியருக்கும் அடங்காமல் தனித் துரைத்தனஞ் செய்தான். கி. பி. 1175-ஆம் ஆண்டில் சிங்களத்தவர் தமிழ் நாட்டின்மீது படையெடுத்து வந்தார்கள். பாண்டியனும் சோழனுங் கூடி இவர்களைத் துரத்தி யடித்தார்கள். 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பாண்டியர் சோழராஜ்யத்தின்மீது படையெடுத்து வந்தார்கள். இதன் பலங் குன்றியிருப்பதைக் கண்டு ஹொய்சாலரும் காக்கதீயரும் சோழ ராஜ்யத்து மேல்மாகாணங்களையும் வட மாகாணங்களையுங் கைப்பற்றிக் கொண்டார்கள். ஹொய்சாலர் திருச்சிராப்பள்ளி வரையில் வியாபித்தார்கள்; காக்கதீயர் காஞ்சீபுரத்தைப் பிடித்துக் கொண்டார்கள்.


பாண்டிய ராஜ்யம் — இப்பொழுது மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி என்னும் மூன்று ஜில்லாக்களாக வழங்குவது பூர்வத்துப் பாண்டிய ராஜ்யம். இதன் தலைநகர் மதுரை. இது முற்காலத்தில் மிகவும் சிறப்புற்று விளங்கியது. தமிழர்களுடைய சிறப்பையும் தேர்ச்சியையும் பற்றிச் சொல்லிய விஷயங்களெல்லாம் பாண்டிய ராஜ்யத்தாருக்கும் கேரள (சேர) ராஜ்யத்தாருக்கும் பொருந்தியவைகளே. பாண்டிய ராஜர்கள் சிறந்த

தெய்வபக்தி யுள்ளவர்கள். இவர்கள் அனேக ஆலயங்கள் கட்டினார்கள். மதுரை நகரிலுள்ள மீனாக்ஷி - சுந்தரேசர் ஆலயம் இன்றைக்கும் சிறப்புற்று விளங்குகிறது. இதன் சிற்பத்திறமை யாவராலும் புகழப்படுகிறது.




பாண்டியர்கள் தமிழ்ப் பாஷையைப் பெரிதும் வளர்த்துப் புகழ்பெற்றவர்கள். தமிழை வளர்ப்பதற்காக இவர்கள் சங்கம் ஒன்று ஏற்படுத்தியிருந்தார்கள். கிரிஸ்து பிறப்பதற்கு முன்னே

இந்தச் சங்கம் நிலைத்திருந்ததென்பதற்கு ஆதாரங்கள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். புலமையிற் சிறந்தவர்க ளெல்லாரும் இந்தச் சங்கத்திற் சேர்ந்திருந்தார்கள். அந்தப் புலவர்கள் இயற்றிய நூல்கள் அனேகம். அவைகளுள் இப்பொழுது நமக்கு எட்டியிருப்பவை சில. இந்த நூல்களினால், அக்-



மதுரை — திருமலை நாயக்கர்மஹால்

தக் காலத்துக் குடிகளுடைய நாகரிகமும், தொழில்களும், தேர்ச்சியும், வியாபாரமும், உள நூலாராய்ச்சியும், மற்றுமுள்ள பலவகைத் திறமைகளும் விளங்கும். கடைசியாகத் தென்னாட்டிற் பிரபலமாக இருந்த ராஜன் சுந்தரபாண்டியன். இவன் தமிழ் நாடு முழுமையும் வென்றதல்லாமல்,

சிங்களத்தையும் வென்றான். இவன் கி. பி. 1293-ஆம் ஆண்டில் இறந்தான்.

பிறநாட்டு வர்த்தகமும், பிறத்தேசத்தாருடைய சகவாசமும் பாண்டியருக்கு அதிகமாக இருந்தது என்பதற்கு அவர்களுடைய ராஜ்யத்திலுள்ள துறைமுகப்பட்டணங்கள்பல சாக்ஷியாவதல்லாமல், வேறு அடையாளங்களும் உண்டு. பாண்டியநாட்டில் ரோம ராஜ்யத்து நாணயங்கள் அநேகம் கண்டெடுக்கப் பட்டிருக்கின்றன. ஐரோப்பா கண்டத்திற் பிரபலர்களாயிருந்த ரோம சக்கரவர்த்திகளின் ஸம்ஸ்தானங்களுக்குப் பாண்டியராஜர் ராயபாரம் அனுப்பியிருந்ததாகவும் தெரியவருகிறது.


இப்படிக் கௌரவமாகவும் சிறப்பாகவும் பாண்டியர்களால் ஆளப்பட்டு வந்த ராஜ்யம் காலவித்தியாசத்தினால் மகம்மதியருடைய கையில் அகப்பட்டுச் சிறிதுகாலம் நொந்திருந்தது. மகம்மதியர்களுடைய பயம் தீர்ந்தவுடனே விஜயநகர ஸம்ஸ்தானத்தார் இந்த ராஜ்யத்திற்கு அதிபதிகளானார்கள். இவர்களுடைய பரம்பரையில் வந்த திருமலை நாயக்கர் என்னும் பிரபு மதுரையம்பதிக்குப் பிரபுவானார். இவருடைய ஆட்சியையும், பெருமையையும், நற்குண நற்செய்கைகளையும் தென்னாட்டார் ஒருபோதும் மறக்கமாட்டார்கள். இவர் காலத்தில் ஏற்பட்ட கட்டடங்கள் பல. மீனாக்ஷிசுந்தரேசுவரர் கோவிலும் இவர்காலத்தில் புதுப்பிக்கப்பட்டது. இவர் அமைத்த அரண்மனை அழகிலும் உறுதியிலுஞ் சிறந்தது. அதன்பெயர் "திருமலைநாயக்கர் மஹால்." அதுமுழுதும் சாந்துக்

கட்டடமே; மர விட்டங்கள் முதலியன உபயோகிக்கப் பெற்றதன்று; இன்றைக்கும் கற்கோட்டையைப்போல் கெட்டியாக இருக்கின்றது.

சேரராஜ்யம் — இது தென்இந்தியாவின் மேற்புறத்திலுள்ளது; அரபிக்கடலின் கரையிலிருப்பது. பாண்டிய நாட்டுக்கு மேற்கிலிருப்பது. இப்பொழுது திருவாங்கூர், கொச்சி, மலையாளம், கோயமுத்தூர் என்னும் தேசங்களும் ஜில்லாக்களுஞ் சேர்ந்து சேரராஜ்யம் என வழங்கிற்று.

சேரராஜர் தெய்வபக்தி மிகுந்தவர்கள். தருமசிந்தனையுள்ளவர்கள். இவர்களுடைய நாட்டில் தருமம் தழைத்திருந்தது. அந்தக் காரணத்தினால் இதனைத் 'தருமராஜ்யம்' என்றும், 'ராமராஜ்யம்' என்றும் சொல்வதுண்டு. இந் நாட்டாருடைய ஒழுக்கங்கள் தமிழ் நாடுகளின் வழக்கங்களுக்கு வேறுபட்டிருக்கும். இவர்கள் பேசும் பாஷை தமிழின் திரிபாகிய மலையாளம். ராஜபரம்பரையும் குடித்தனத்து ஆஸ்தியும் ஆண்மக்களின் வழியிற் செல்லாமல், பெண்மக்களின் வழியிற் செல்லும். ஒருவனுடைய ஆஸ்தி முதலிய உரிமைகள் அவனுடைய சகோதரியின் மக்களுக்குச் சேருமேயல்லாமல், அவனுடைய சொந்த மக்களுக்குச் சேரா. இந்த முறைக்கு "மருமக்கள் தாயம்" என்று பெயர். சேரநாடு கேரளம் எனப்படும்; மலைகளுங் குன்றுகளும் மிகுந்ததாதலால் "மலையாளம்" எனவும் வழங்கப்பெறும். இதனில் திவ்விய ஸ்தலங்களும், கோவில்களும், பக்தர்களும், தர்மிஷ்டர்களும் அதிகம். ஒரு காலத்தில் வஞ்சிநகர் இதற்குத் தலைநகரமாயிருந்தது. கோய-

முத்தூர் ஜில்லாவிற் சேர்ந்திருந்து இப்பொழுது திருச்சிராப்பள்ளி ஜில்லாவிற் சேர்க்கப்பட்டிருக்கும் கருவூரானது வஞ்சிநகரென வழங்கிற்று. பிறகு, ராஜதானி வேறுவேறு இடங்களுக்கு மாறிற்று.




சேர ராஜாக்களுக்கும் சோழ ராஜாக்களுக்கும் கொள்வன கொடுப்பனவாகிய சம்பந்தங்களுண்டு. சோழ ராஜ்யத்துத் தமிழ் வித்துவான்கள் சேர ராஜர்களிடத்திற்குப் போய்ப் பரிசுகள் பெற்று வந்திருக்கிறார்கள். கரிகாற் சோழன் என்னும் ராஜனுடைய குமாரியை இரண்டாம் ஆதன் என்-

னும் சேரராஜன் விவாகஞ் செய்துகொண்டான். இவனுடைய புத்திரர்களுள் ஒருவராகிய இளங்கோவடிகள் என்பவர் "சிலப்பதிகாரம்" என்னும் அருமையான தமிழ் நூல் எழுதினர். சேரராஜர்கள் கல்விப்பயிற்சியிலும் சிறந்தவர்களென்பதற்கு இது ஓர் உதாரணம். இந்த ராஜர்களுள் ஒருவன் கடல்மார்க்கமாகச் சென்று கலிங்க தேசத்தையும் வங்காளத்தையும் வென்றான். ஆனால், இவை நிலையான வெற்றிகளல்ல.

விஜயநகர ஸம்ஸ்தானம் — மகம்மதியர்களுடைய படையெழுச்சிகளினால் தென் இந்தியாவும் தக்கணமும் குழப்பத்தில் ஆழ்ந்திருந்த சமயத்தில் (கி. பி. 1311-1312), கொல்லம் (குவிலான்) என்னும் கேரள நாட்டு அரசனாகிய ரவிவர்ம குலசேகரன் ஜயசீலனாகப் பாண்டிய நாட்டையுஞ் சோழ நாட்டையுங் கடந்து காஞ்சிபுரம் வரைக்குஞ் சென்றான். தென் இந்தியா வெல்லாம் நிலைதடுமாறிக் குழம்பி யிருக்குந் தருணத்தில் (கி. பி. 1336), தக்கணத்தி லிருந்து ஓடி யொளிய வந்தவர்கள் இருவர் துங்கபத்திரா நதிக்கரையில் புதிய நகரமொன்றை ஸ்தாபித்து, அதற்கு விஜயநகரம் எனப் பெயரிட்டு, நிலை கொண்டார்கள். இவர்கள் தேவகிரி யாதவர்களுடைய வமிசத்தவர்க ளென்றும், மைசூர் ஹொய்சாலருடைய வமிசத்தவர்களென்றும் சொல்லிக்கொண்டு, தென் இந்தியா முழுமையும் தம் வசப்படுத்திக் கொண்டார்கள். இவர்களுடைய காலத்திலும் இவர்களுடைய சந்ததியார்களுடைய காலத்திலும் (ராஜ ராஜ சோழனுடைய காலத்திலும் குலோத்துங்கனுடைய காலத்திலும் இருந்ததுபோல) தென் இந்திய நாடுகளெல்லாம் ஒருமைப்பட்டு ஒரு குடையின் கீழ் இருந்தன.

# 11. மகம்மதியப் படையெழுச்சி

மகம்மதியர்கள்—கி. பி. எட்டாம் நூற்றாண்டில் மகம்மதியர்கள் இந்தியாவின்மீது படையெடுத்து நாடுகளைக் கைப்பற்றத் தொடங்கினார்கள். அவர்களுடைய படையெழுச்சிகளைப் பற்றித் தெரிந்து கொள்ளுமுன், அவர்கள் யார், எங்கிருந்து வந்தவர்கள் என்னும் விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

மகம்மதியர்கள் என்பவர்கள் மகம்மதுவின் கொள்கைகளை மேற்கொண்டு, கடவுளைப் பற்றிய விஷயங்களை உலகத்தவர்களுக்கு அறிவிப்பதற்காக அவதரித்த தீர்க்கதரிசி அவரே யென்று நம்புகிறவர்கள். ஆறும் நூற்றாண்டில் அரேபியா தேசத்தில் எங்கே பார்த்தாலும் அமர்க்களமும் கொலைக்களமுமாக இருந்தது. அரேபியா தேசத்தாருக்கு அரபியர்கள் என்று பெயர். அவர்கள் அடங்காத் தன்மை யுள்ளவர்கள், முரடர்கள், குரூரமான காரியங்களைக் கூசாமற் செய்பவர்கள். அவர்கள் பற்பல இனங்களாகப் பிரிந்து, ஒருவரோடொருவர் அடிக்கடி கலகித்துச் சண்டையிட்டுக் கொடுமைகள் செய்வார்கள். இந்தக் குணங்களை யெல்லாம் மாற்றுவதற்கே தீர்க்கதரிசியாகிய மகம்மது அவதரித்து, ஒரு புதிய மதத்தை உபதேசித்தார்.

கி. பி. 570-ஆம் ஆண்டில் மெக்கா பட்டணத்தில் மகம்மது பிறந்தார்; அவருடைய தந்தையின் பெயர் அப்துல்லா; தாயின் பெயர் அமீனு; தாயுந் தந்தையும் அவருடைய இளமையிலேயே காலஞ் சென்றமையின், அவர் மாமனுடைய வீட்டிலே வளர்ந்து வந்தார். யுக்தவயது வந்தவுடனே அவ்விடத்தில் வியாபாரஞ் செய்துகொண்டிருந்த ஒரு ஸ்திரீயினிடத்தில் காரியஸ்தராக வேலைக்கு அமர்ந்து, வியாபார விஷயங்களைக் கருத்துடன் கவனித்து உண்மையாக உழைத்து வந்தார். அவருடைய அமைதியான தன்மையையும், நல்லொழுக்கத்தையும், உண்மையான உழைப்பையுங் கண்டு வியந்து அந்த மாது அவரைக் கலியாணஞ் செய்து கொண்டாள். அவளுடைய பெயர் கடிஜா.

அமைதியும் பொறுமையும் அவருக்கு இயல்பாயிருந்தது போல, ஆழ்ந்த சிந்தனையும் அவருக்கு இருந்தது. தம் நாட்டு ஜனங்களின் நடவடிக்கைகள் அவருக்கு இஷ்டப்படவில்லை. அவர்களை நல்வழியில் திருப்பவேண்டுமென்பது அவருடைய முக்கியமான நோக்கம், மிருகங்களைப் போல உண்பதும், உறங்குவதும், இணங்குவதும், பிணங்குவதுமாகக் காலங்கழித்து ஆயுளைப் போக்குவது அறிவீனமென்று அவர் உன்னினர். எதனிலும் அவருக்கு வெறுப்பு உண்டாயிற்று; பலகாலம் தனியே அமர்ந்திருந்து தீர்க்காலோசனைசெய்து நல்வழியை நாடி ஜனங்களுக்குப் போதிக்க வகைதேடிக் கொண்டிருந்தார். நாற்பது வயதுக்குப் பிறகு அவருக்கு ஞானோதயமாயிற்று. கடவுளை வழிபடுவதே மனிதனுக்கு முக்கியமான தர்மமென்றும், அதற்-

கான வழிவகைகளை ஜனங்களுக்குப் போதிக்கும் பொருட்டே தாம் ஜன்மமெடுத்தாரென்றும் அவருக்குத் தோற்றியது. ஒரு குன்றின்மீதேறிக்கொண்டு ஜனங்களுக்குத் தம் கொள்கையை விவரித்து ஓதினர். கடவுள் ஒருவர் இருக்கிறரென்றும், அவரை வழிபட்டு நற்கதி யடையவேண்டுமென்றும் அவர் சொல்லிய வார்த்தை அனேகருக்கு அர்த்தமாக வில்லை; சிலர் அதைக் கவனிக்க வில்லை; கவனித்தவர்கள் சிலர் அவரை ஏளனஞ் செய்யத் தலைப்பட்டார்கள். பிறருடைய நயத்தையும் பயத்தையும், புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் மேற்கொள்ளாமல் அவர் தம் கொள்கைகளை வெளிப்படையாக உபதேசித்துவந்தார். அவ்வூரார் சிலர் அவருடைய கொள்கைகளை மேற்கொண்டார்கள். அவருடைய மனைவியும் அவைகளை மேற்கொண்டு, அவைகளைப் போதித்துப் பரவச்செய்வதற்கு வேண்டிய ஊக்க மூட்டிவந்தாள். அவருடைய மார்க்கம் அனேகருக்கு இன்னும் பிடிபடாததனல் அவர்கள் அவரை இகழ்ந்து கொடுமை செய்துகொண்டிருக்கையில், அவருடைய மனைவி இறந்துபோனள். உற்ற துணையாயிருந்த மனைவியை இழந்தது அவருக்குப் பெருந் துக்கத்திற்குக் காரணமாயிற்று.

மெக்கா பட்டணத்தாருடைய தொல்லையைப் பொறுக்கமாட்டாமல், அவர் அந்த ஊரைவிட்டு மெடிஞ என்னும் பட்டணத்திற்கு ஓடினர். அவர் ஓடிவந்தது கி. பி. 632-ஆம் வருஷத்திலாகும். இதுவே மகம்மதிய சகாப்தத்து முதல் வருஷமாகக் கணக்கிடப்பட்டு வருகிறது. இதற்கு 'ஹிஜரா'

என்று பெயர். மெடினவாசிகள் அவருடைய வரவை யேற்று, அவரை ஆதரித்தார்கள். அவருடைய நற்போதனை அங்கே சற்றுப் பயன்பட்டது. குடிகளின் ஒழுக்க முறைகளை விவரித்தெழுதி, பயனற்ற போராட்டங்களில் தலையிடக் கூடாதெனவும் வற்புறுத்தி அவர் ஒரு சாஸனம் வெளியிட்டார். மெடினக்காரர் அனேகர் அவைகளை ஒப்புக்கொண்டு அவரைத் தலைவராக மதித்து, அவர் சொற்படி நடந்துவந்தார்கள். ஜனங்கள் கடவுளைத் தொழுவதற்கு அவர் ஒரு மசூதி கட்டினார். அவருடைய மார்க்கத்தை அனுசரித்தவர்களெல்லாரும் அங்கே போய்க் கடவுளைத் தொழத் தொடங்கினார்கள். அப்படி அவருடைய கொள்கைகளிற் பற்றுடையவர்கள் வரவர அதிகமானார்கள். அவர்களுக்கெல்லாம் அவரே தலைவராயிருந்தார். இந்த வகையில் பலம் கூடியவுடனே, இஸ்லாம் குடியரசு ஏற்பட்டுத் தலையெடுத்தது.

மெக்காவிலிருந்தவர்கள் பெரும்பாலார் மகம்மதுவினுடைய மதத்தை ஏற்காவிடினும், அதனை நம்பினவர்கள் சிலர் இருந்தார்கள். மற்றவர்களெல்லாரும் இந்த மகம்மது மார்க்கத்தாரைப் பிடித்து வந்தார்கள். மெக்காக்காரர் திரண்டு மெடினவிலுள்ள மகம்மது மார்க்கத்தாரையும் வருத்த வந்தார்கள். மகம்மது பெரும்படையைத் திரட்டிக்கொண்டு, அவர்களை அடித்துத் துரத்தினார். கி. பி. 630-ஆம் ஆண்டில், பதினாயிரம் ஆட்களைச் சேர்த்துக் கொண்டு மெக்காவுக்குப்போய் அந்தப் பட்டணத்தைப் பிடித்துக் கொண்டார். அது முதல் ஜனங்களுக்கு அவரிடத்தில் பயமும் பக்தி-

யும் அதிகரித்தன. அவருடைய மார்க்கத்தை அனுசரிப்பவர்கள் மேலும் மேலும் அதிகமானார்கள். அவர் கி. பி. 632-ஆம் ஆண்டில் மரணமடைந்தார்.

அவருக்குப் பிறகு, காலிப்புகள் பரம்பரையாகத் தோன்றி, மதாசாரியர்களாக நின்று மகம்மதுவின் கொள்கைகளைப் பரவச் செய்தார்கள். அவர்கள் அனேக நாடுகளை வென்றார்கள். மகம்மதியப் படைகள் மேற்கே ஐரோப்பா கண்டத்தில் ஸ்பெயின் வரையிலும், ஆசியா கண்டத்தில் பெர்ஷியா, இந்தியா வரையிலும் வியாபித்து வெற்றி கொண்டன. இந்தக் காலிப்புகளின் காலத்தில் மகம்மதிய மதக்கிரந்தங்கள் பல எழுதப்பட்டன. லலித கலைகள் (fine arts) பயிற்சி செய்யப்பட்டன. அராபியர் எழுதிய வைத்திய நூல்களும் சோதிட நூல்களும் ஐரோப்பாவில் மிக மதிக்கப்பெற்றன. அவர்களுடைய சிற்ப முறையை யனுசரித்துக் கட்டிய கட்டடங்கள் இன்றைக்கும் அழகிற் சிறந்து விளங்குகின்றன.

## 12. பூர்வ மகம்மதியப் படைகள்

மகம்மது மரித்து நூறுவருஷமாகிறதற்குள்ளாக அவர் அடியார்கள் ஹிந்துகூஷ் மலைவரைக்கும் ஆசியாவின் பல தேசங்களை ஜயித்துக்கொண்டார்கள்.

சிந்து ஜயிக்கப்பட்டது — 711-ம் வருஷத்திலே மகம்மது காசிம் என்னும் ஓர் அராபிச் சேனபதி,

சிந்துநாட்டுக்குள் பாய்ந்து அதனரசனைத் தோற்கடித்து, சிந்துநதி பாய்ந்த பள்ள பூமியிற் குடியேறிக் கொண்டான். அவர்கள் அங்கே 35 வருஷம் தங்கியிருந்தபின்பு ராஜபுத்திரரால் துரத்துண்டார்கள்.

சபக்திஜின் — அப்பால் இருநூறுவருஷம் வரையும் மகம்மதியர் இந்தியாவின்மேல் படையெடுக்கவில்லை; மறுபடியும் படையெடுத்தவன் காஸ்னிசுல்த்தானகிய சப்க்திஜின் என்பவன். 977ம் வருஷத்திலே அவன் லாகோர் அரசனகிய ஜயபாலனுக்கு விரோதமாய்ச் சென்றான். இருசேனைகளும் சந்திக்குமுன் இரவில் புயல் அடித்தது. இந்துக்கள் அதைத் துச்சகுனமாக நினைத்து, பயந்து சமாதானம் வேண்டினார்கள். ஜயபாலன் ஐம்பது யானையும், திரளான பணமும் கொடுக்க ஒப்புக்கொண்டான்.

ஜயபாலன் தன் தேசம் சேர்ந்தபொழுதோ, பணத்தை அனுப்பமாட்டேனென்றான். அவன் டில்லி, ஆஜ்மீர், கனௌஜ் ராஜாக்களை அழைத்துக்கொண்டு, பெருஞ் சேனையோடு சபக்திஜின் மேற் சென்றான். இந்துச் சைனியம் முழுக்கத் தோற்கடிக்கப்பட்டுப் போக, மகம்மதிய ஜயவீரன் சிந்துநதிவரையும் நாட்டைப் பிடித்துக்கொண்டு, பிஷாபுரத்தில் ஒரு அதிபதியை வைத்துப் போனன்.

# 13. காஸ்னி மகம்மது, 996—1030

அதன்பின்பு படையெடுத்தவன் சபக்திஜின் என்பவனுடைய இரண்டாம் புத்திரனாகிய கீர்த்திபெற்ற காஸ்னி மகம்மது. அவன் அதிக திறமையும், யுத்தத்தில் அதிக அநுபவசாலியுமானவன். திரவியத்தைக் குவிப்பதும், மகம்மது மார்க்கத்தைப் பரவச்செய்வதுமே அவனுடைய முக்கிய விருப்பம். இந்த நோக்கத்தோடு அவன் இந்தியாவின்மேல் பன்னிரண்டுதரம் படையெடுத்தான்.

1001-லே எடுத்த முதற்படையிலே அவன் பெரிய சேனையுடன் லாகோர் அரசனான ஜயபாலன் மேற் சென்றான். இரண்டு சேனைகளும் பெஷாவூரிலே சந்தித்துச் செய்த சண்டையிலே, இந்துராஜன் தோற்றுக் கைதியாக்கப்பட்டான்; ஆகிலும், வருஷந்தோறும் வரிகட்டுகிறதாக வாக்குக்கொடுத்த பின்பு விடுதலைபெற்றான். பெற்றும் வீடுநோக்கிச் சென்று, ராஜ்யத்தைத் தன் குமாரன் அனங்கபாலன் கையில் ஒப்புவித்து, தீயிற் குதித்துப் பிராணனை விட்டான்.

பின்னும் இரண்டு படைகள் ராஜாக்கள் வரியை வசூல் பண்ணவும், சில கலகங்களை அடக்கவும் அனுப்பப்பட்டன. நாலாம்படை லாகோர் அரசன் அனங்கபாலன்மீது 1008-லே எடுக்கப்பட்டது. அவனுக்கு உதவிசெய்தவர்கள் ஆஜ்மீர், டில்லி, கானௌஜ் முதலிய ராஜாக்கள். இந்துக்கள் பலத்த யுத்தத்துச் செலவுக்காகத் தங்கள் பொன் ஆபரணங்களை விற்றும் உருக்கியும் கொடுத்தார்கள்.

பிஷாவூரில் நடந்த யுத்தத்திலோ இந்துக்கள் தோல்வி யடைந்தார்கள். அதன் பின்பு மகம்மது ஐசுவரிய மிகுந்த நகர்க்கோட்டைக் கோவிலைக் கொள்ளையடித்து, கொள்ளைப் பொருளும் ஆயிரமாயிரமான இந்துச் சிறைகளுமுடையவனாய் காஸ்னிக்குத் திரும்பினான்.

தனது ஒன்பதாம் படைக்காக மகம்மது பெரிய ஒரு சேனையைத் தயார்செய்தான். 1019-லே அவன் திடீரெனக் கானௌஜ் என்னும் நகரம் வந்துவிட்டான். அந்த அழகான பட்டணத்தில் விஸ்தாரமான திரவியமும், ராஜாக்கள் அரண்மனைகளுமிருந்தன. யாதொரு ஆயத்தமும், செய்யாத ராஜன் தன்னை ஒப்புவித்துவிட்டபடியால், மகம்மது மூன்று நாளான பின்பு ஊரை ஒன்றுஞ் செய்யாமல் விட்டுப் போய்விட்டான். பிறகு, அவன் கிருஷ்ணனின் பிறப்பிடமும், திரவியம் நிறைந்த யாத்திரைஸ்தலமுமாகிய மதுரை மேல் படையெடுத்தான். அதன் கோவில்களைக் கொள்ளையிட்டு அவற்றின் திரவியத்தை எடுத்துக்கொண்டு போய்விட்டான்.

பத்தாம் படை 1022-லே அனங்கபாலனது குமாரன் இரண்டாம் ஜயபாலன்மேற் சென்றது. மகம்மது கானௌஜ்மேல் போனபொழுது அவன் அவனை எதிர்த்தான். மகம்மதுவோ ராஜ்யத்தைப் பிடித்துக்கொண்டு காஸ்னியுடன் சேர்த்து விட்டான். மகம்மதியர் சிந்து நதிக்குக் கிழக்கே தங்கள் அரசை ஸ்தாபித்தது இது தான் முதல் தடவை; இது இந்தியாவிலே மகம்மது ராஜ்யத்திற்கு அஸ்திபாரமாயிற்று.

கடைசியும் பன்னிரண்டாவதுமான * படை-யானது 1024-ல் எடுக்கப்பட்ட மகாகீர்த்திபெற்ற படை. அது குஜராத்திலே சோமநாதின்மேல் எடுக்-கப்பட்டது. சோமநாத் கோவில் இந்தியாவி-லெல்லாம் மிகவும் பேர்போனதும் ஐசுவரிய மிகுந்-ததுமாகும். இதைப் பிடிக்க அவன் பிரமாண்டமான சேனையோடும், 20,000 ஒட்டகங்களோடும் 350-மைல் பாலைவனத்தைக் கடக்க நேரிட்டது. ராஜ-புத்திரர் கோவிலை வெகு வீரதீரமாய்க் காத்தார்கள். மூன்றுநாள் வரையும் கொடிய யுத்தம் நடந்தபின், பட்டணம் பிடிக்கப்பட்டது. மகம்மது கோவி-லுக்குள் சென்று, விக்கிரகத்தைச் சுக்கல் சுக்க-லாய் உடைத்தபொழுது திரளான தங்கமும் நகை களும் தரையிலே கொட்டின. † சரித்திரத்தில் அவன் "விக்கிரகமுடைத்தவன்" என்று பெயர் பெற்றான்.

**மகம்மதுவின் மரணம்** — மகம்மது காஸ்னி 1030-ல் மரண மடைந்தான். அதற்கு இரண்டு நாளைக்கு முன்பு, அவனுடைய பொருளும் நகை-களுமெல்லாம் அவன் கண்ணுக்கெதிரே வைக்கப்-பட்டன; அவற்றை விட்டுப்போகிறதை நினைத்து அவன் கண்ணீர் விட்டானாம். அக்காலத்திலே அவனே சிறந்த தளகர்த்தன். அவன் தைரியமும், விவேகமும் சுறுசுறுப்பு முள்ளவன்; தன் இராஜ்ய-

---

* பார்சிய சரித்திரக்காரர், மகம்மது இந்தியாவின்-மேல் பதினேழு படைகள் எடுத்ததாகச் சொல்லுகிறார்கள்.

† அநேக சரித்திரக்காரர் இதைக் கட்டுக்கதையாக எண்ணுகிறார்கள். அந்த விக்கிரகம் ஒரு லிங்கமாம்; அதிலே பொன்னாவது நகையாவது இல்லை.

த்தை நன்றாயும் நீதியாயும் ஆண்டுவந்தான். மகம்மதிய அரசருள் 'சுல்த்தான்' என்னும் பட்டம் முதலில் தரித்தவன் இவனே. கல்வியை விருத்திசெய்தான். எல்லாரினும் பேர்போன பார்சிய புலவன் பர்டௌசி இவன் அரசாட்சிகாலத்தில் இருந்தான்.

## 14. மகம்மது கோர், 1184 — 1206

**கோர் வமிசம்** — மகம்மதியர் மறுபடியும் இந்தியாவின் மேல் படையெடுக்குமுன் நூற்றைம்பது வருஷம் கழிந்துவிட்டது. இந்தக் காலத்தில் காஸ்னியில் அரசாண்ட வமிசத்தாரை கோர் நாட்டுப் பிரபுக்கள் கவிழ்த்துப் போட்டார்கள். கோர் என்பது ஆப்கானிஸ்தானிலே காஸ்னிக்கும் ஹீராத்துக்கும் இடையிலுள்ள ஒரு மலை ராஜ்யம். அப்போது ஷாவப்புதீன் என்னும் சாதாரண பெயரும், மகம்மது கோர் என்னும் பிரஸ்தாபப் பெயரும் உடையவன் ஒரு-



மகம்மது கோர்

வன் கோர்நாட்டுக்கு அரசனு யிருந்தான். இந்த வமிசத்திலே அவன்தான் மிக்க கீர்த்தி பெற்றவன்.

**மகம்மதுவின் படைகள்** — மகம்மது இந்தியா-வின்மேற் படை யெடுக்க வேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தான். அதை அவன் முதலில் நிறை-வேற்றினது 1191-லே. தானேசுவரம் என்னுமிடத்-திலே டில்லி, ஆஜ்மீர் ராஜாக்கள் அவனோடு போர் செய்தார்கள். இந்த யுத்தத்திலே மகம்மது தோற்-றுப் பெரு நஷ்டமடைந்து சிந்துநதிக்கப்பால் துரத்-துண்டான். அவன் உயிர் பிழைத் தோடியது அருமையாயிற்று.

மிகுந்த வெட்கத்தோடும் துக்கத்தோடும் அவன் காஸ்னிக்குத் திரும்பிப் போய், 120,000 குதிரை வீரரைச் சேகரம் பண்ணினுன். இவர்க-ளோடு அவன் 1193-ல் இந்தியாவுக்கு மறுபடியும் வந்தான். முன் சொல்லிய டில்லி ராஜன் மிகப் பெரிய சேனையோடும் அவனுக்குச் சிநேகரான பல இந்திய அரசரோடும் தானேசுவாம் என்னு-மிடத்தில் அவன் வரவுக்கெதிர் நோக்கியிருந்தான். இந்துக்கள் முற்றிலும் அபஜயப்பட்டுப் போனார்-கள். பல ராஜாக்கள் மாண்டது மல்லாமல், டில்லி ராஜனும் பிடிபட்டுக் கொலையுண்டான். மகம்மது தனது தளகர்த்தரில் ஒருவனை குட்புதீன் என்ப-வனைத் தன் இந்திய நாடுகளுக்கு அதிகாரியாக வைத்துவிட்டு, தன் கொள்ளைப் பொருளையெல்லாம் எடுத்துக் கொண்டு காஸ்னிக்குத் திரும்பினுன். குட்புதீன் டில்லியைப் பிடித்து அதைத் தனக்கு ராஜதானியாக்கிக் கொண்டான்.

சிறிது காலத்துக்குப் பின்பு, மகம்மது இந்தியாவின்மேல் இன்னொருமுறை படையெடுத்தான். குட்போடு சேர்ந்துகொண்டு கானௌஜ் ராஜனை முற்றிலும் முறியடித்து, கானௌஜைப் பிடித்துக் கொண்டான்; அரசன் யுத்தத்தில் கொலையுண்டான். பிறகு, அவன் காசிக்குச் சென்று அதன் கோவில்களை யெல்லாம் கொள்ளையடித்தான். இதற்குள்ளாக அவனுடைய சேனைபதிகள் மகதாவையும் மற்ற ராஜபுத்திர ராஜ்யங்களையும் ஜயித்துக் கொண்டார்கள். பங்காளம் அவர்களை யெதிர்த்துப் போராடாமல் அகப்பட்டுக் கொண்டது.

**மகம்மதுவின் மரணம்,** 1206 — காஸ்னிக்குப் போகிற வழியில், மகம்மது சிந்துநதிக்கரையோரத்தில் கூடாரமடித்தான். பஞ்சாபில் வசித்த காக்கர் என்னப்பட்ட ஒரு முரட்டு மலைநாட்டார்க் கூட்டம் கூடாரத்துக்குள் நுழைந்து அவனைக் கொன்று போட்டார்கள். காஸ்னி மகம்மதுவைப்போல அவனும் மிகப் பேர்போன ஜயவீரன். ஆகிலும், அவனைப்போல வித்வான்களை ஆதரித்து, தன் மார்க்கத்தைப் பரவச்செய்யக் கவலையெடுக்கவில்லை.


மகம்மதுகோர் சிறந்த சேனைபதி; அவன் இந்தியாவிலே நிலையான ஜயங்களடைந்தான்; காஸ்னி மகம்மதுவின் ஜயங்கள் கொள்ளைகளாயிருந்தன. மகம்மது கோர் தர்மசாலி என்று பெயர்பெற்றவன். பத்து வருஷத்தில் அவன் இந்தியாவின்மேல் ஒன்பது படை எடுத்து ஏகதேசம் இந்துஸ்தான் முழுவதையும் தன் வசமாக்கிக்கொண்டான். ஆனால், அவன் இந்தியாவிலே

நிலையாய் இருந்துவிடவில்லை. அவன் மரித்தபின்பு கோர் ராஜ்யம் சிதைந்து, வட இந்தியா முழுதும் அவனுடைய சேனபதிகளுக்குக் கிடைத்தது. அவர்களில் ஒருவனாகிய குட்புதீன், இனி நாம் பார்க்கப்போகிறபடி, இந்தியாவில் நிலையாய்த் தங்கிவிட்டான்.

## 15. டில்லியின் அடிமை அரசர்கள், 1206—1290

**குட்புதீன், 1206-1290.** — மகம்மது இறந்துபோனபின்பு, குட்புதீன் வட இந்தியாவுக்கு அரசனாக முடிசூட்டப்பட்டான். அவன் ஆதியில் அடிமையாயிருந்தவன்; அதனால், அவன் ஸ்தாபித்த ராஜவமிசத்திற்கு 'அடிமை அரசர்கள்' என்று பேர். தன் சாமர்த்தியத்தினால் அவன் மகம்மதுகோரின் தயவைச் சம்பாதித்து, அவனால் சேனபதிப்பட்டம் பெற்றவன். டில்லியரசன் தோற்றபின்பு, ஜயிக்கப்பட்ட நாடுகளுக்கெல்லாம் இவன் அதிகாரியாக நியமிக்கப்பட்டான். பிறகு, அவன் 1206-லே டில்லியில் சுயாதீன ராஜ்ய மொன்றை ஏற்படுத்தினான். ஆயினும், அவன் ஆண்ட வருஷம் ஐந்தே; அந்தக் காலத்திலோ அவன் தன் குடிகளின் நன்மைக்காக அதிக முயற்சி எடுத்துக்கொண்டான். அவன் திறமையும், நீதியும், நற்குணமும் பொருந்திய அரசன்; பெருங் கொடையாளி. பூர்வ டில்லியிலிருந்த கோவில்களை இடித்துப் பெரிய மசிது கட்டினான். அதற்கருகில் குட்புமினார் என்னும் ஒரு ஸ்தம்பத்-

தைக்கட்ட ஆரம்பித்தான். அதன் உயரம் 250 அடி, அதினும் உயர்ந்த ஸ்தம்பம் உலகத்திற் கிடையாது. அதைக் கட்டி முடித்தவன் இவனுக்குப்



டில்லியிலுள்ள குட்புமினர் ஸ்தம்பம்

பின் வந்த ஆல்தாம்ஷ். குட்புதீன் 1210-லே மரித்தான்.

ஆல்தாம்ஷ், 1210-1236-அவன் குமாரன் பட்டத்துக்கு வந்தும் யாதொரு திறமையும் காட்டா-

மையால், குட்பின் அடிமையும் மருமகனுமான ஆல்தாம்ஷ் என்பவனால் அவன் அரசிலிருந்து விரைவிலே நீக்கப்பட்டான். அடிமையரசர்களிலே இவனே மிகச் சிறந்தவன், அபூர்வசக்தியுள்ளவன். ஆல்தாம்ஷ் குவாலியர், உஜ்ஜைன், மால்வா என்பவைகளை ஜயித்தான். இதனால் இவன் மரிக்கிறதற்கு முன்னே, மகம்மதிய அரசாட்சி வட இந்தியா எங்கும் பரவிவிட்டது. இருபத்தைந்து வருஷம் ஆண்டபின்பு ஆல்தாம்ஷ் 1236-லே மரித்தான். இந்தக் காலத்தில்தான் செங்கிஸ்கானைத் தலைவனாகக்கொண்டு முகலர் என்பவர் சிந்து நதிக்கு மேல்தேசத்தையெல்லாம் கொள்ளையாடினார்கள்; டில்லியைமாத்திரம் அவர்கள் தீண்டவில்லை.



ரசியா ராணி.

**ரசீயா ராணி, 1236-1239.**—ஆல்தாம்ஷுக்குப் பின் அவன் மூத்தகுமாரன் பட்டத்துக்கு வந்தான்; ஆனால், அவனுடைய அக்கிரமங்களி னிமித்தம் அவனை நீக்கிவிட்டு, அவன் தங்கை ரசியாவை

சிங்காசன மேற்றினார்கள். புருஷர் தரிக்கிற சுல்த்தான் என்கிற பட்டத்தை அவளுக்குத் தரிப்பித்தார்கள். அவள் அரிய சாமர்த்திய முடையவள், நன்றாய் வாசித்தவள், தன் காரியங்களைப் பக்குவமாய் நடத்தும் சக்தியுள்ளவள். மூன்று வருஷத்துக்கதிகமாக அவள் நல்ல அரசாட்சி நடத்தினாள். ஆகிலும், தன் குதிரைச் சேனைத் தலைவனான ஒரு அபிசீனிய அடிமைக்கு அவள் தயை காண்பித்ததாக, பிரபுக்கள் அவள்மேல் எரிச்சல் கொண்டு, அவளைச் சிறையில் போட்டார்கள். காவற்காரரின் தலைவன் அல்தூனியா என்பவன் அவளை மணம் புரிந்து கொண்டான். இருவருங்கூடி அரசைக் கைப்பற்ற முயன்றபோது, தோல்வியுற்றுக் கொல்லப்பட்டார்கள்.

அப்பால் ஆறுவருஷம் வரையும் நடந்த இரண்டு ஆளுகையிலே விசேஷமான தொன்றும் நடக்கவில்லை.

நேசருதீன், 1245-1266 — அல்தாமஷின் பேரனும், வெகுநாள் சிறையிற் கிடந்தவனுமான நேசருதீன் என்பவன் 1246-லே பட்டத்திற்கு வந்தான். அவனுடைய வழக்க பழக்கங்கள் வெகு சொற்ப மானவை; அவன் புஸ்தகங்களைப் பெயர்த்தெழுதித் தன் ஜீவனத்தை நடத்திக் கொண்டான். அவனுடைய ஆகாரம் மெத்த அற்பம்; அதுவும் ராணியினால் சமைத்தது; அவனுக்கு அவன் வேலைக்காரர் வைக்கவில்லை.

நேசருடைய ஆளுகைக் காலமெல்லாம் ராஜ்யத்தில் சமாதானமிருந்தது. அவன் அநேக இந்து

அரசர்களை அடக்கி, அன்னிய படைகளினின்று ராஜ்யத்தைக் காத்தான்; வித்வானுகையால் பார்சிப் படிப்பை விருத்தி செய்தான். அவன் ஜனங்களுக்கு உபகாரியும் எழைகளுக்குச் சிநேகிதனுமாயிருந்தான். அவன் இருபது வருஷம் ஆண்டு, 1266-லே மரித்தான்.



நெசருதீன்

பால்பன், 1266-1287 — முந்தின அரசனது ஆளுகைக் காலமெல்லாம் மந்திரியாயிருந்த பால்பன் என்பவன் யாதொரு தடையின்றி ராஜாவானன். ஆதியிலே அடிமையாயிருந்த அவன் தன் திறமையினலே ஆல்தாம்ஷ் ஆண்ட காலத்தில் சேனுபதி யாக்கப்பட்டான். இவனுடைய ஆளுகையின் ஆரம்பத்திலே, டில்லிக்குத் தெற்கேயிருந்த மீவாத் ராஜபுத்திரர் கலகம் பண்ணினுர்கள். அவர்கள் துரத்துண்டு, அவர்களிலநேகர் கொல்லப்பட்டார்கள். கூட்டங் கூட்டமான திருடர்களுக்கு ஒளிப்பிடமா யிருந்த காடுகளை யெல்லாம் அழித்து விட்டான்.

இவன் ஆண்ட காலத்தில், பங்காளத்தின் மகம்மதிய பிரதிநிதி இவனுக்கு விரோதமாய் எழும்பினான். அவன்மேல் இரண்டு சேனைகளை அனுப்பியும் பயன்படாமற் போயிற்று. கடைசியிலே, இவன் கிழவனாயிருந்தும் தானே பங்காளம் போய்க் கலகத்தை அமர்த்தினான். பிரதிநிதி கொலையுண்டான்; கலகக்காரர் கொடிய வதையுண்டு மாண்டார்கள்.

இந்தக் காலத்தில் மூகலர் இத்தேசத்தின்மீது படையெடுத்தார்கள்; அரசன் தன் மூத்தகுமாரனை அவர்களுக்கு விரோதமாய் அனுப்பினான். அவன் அவர்களை முழுக்கத் தோற்கடித்தும், தானே கொலையுண்டான். தன் அருமைப் புத்திரன் இறந்த துக்கத்தை அந்த வயது சென்ற அரசன் தாங்க மாட்டாமல் மனம் நொந்து சில தினங்களுக்குள் (1287-லே) இறந்து போனான்.

பால்பன் குரூரகுணமும் தற்பிரியமுமுள்ளவனாயிருந்தும், மூகலரால் தம் தேசத்தினின்றும் துரத்துண்ட பிரபுக்களுக்கும் வித்வான்களுக்கும் அடைக்கலம் அளித்தான்.

கில்ஜிகளின் தலைவனான ஜலாலுதின் என்பவன் 1290-ல் டில்லி ராஜாங்கத்தைப் பிடித்துக்கொண்டு முப்பது வருஷம் ஆண்டு ஒரு வம்சத்தை ஸ்தாபித்தான்.

# 16. கில்ஜி ராஜவமிசம், 1290-1320

**கில்ஜிகள்** — டில்லி ராஜாங்கத்தைப் பிடித்துக் கொண்ட கில்ஜிகள் துருக்க வமிசத்தார்; ஆகிலும் அவர்கள் ஆப்கானிஸ்தானிலே வெகுநாள் குடியிருந்தமையால் ஆப்கன்களாகவும் பட்டாணிகளாகவும் எண்ணப்பட்டார்கள்.

**ஜலாலுதீன்** — (1290 - 1295) அவர்களுக்குத் தலைவன். அவன் ராஜாவானபோது அவனுக்கு வயது எழுபது. அவன் அதிசமர்த்தன். ஆசியாவின் வித்வான்கள் அவன் அரண்மனைக்குப் போய்ப் பரிசு பெறுவார்கள். ஆகிலும் அவன் தன் சத்துருக்களுக்கு அதிக தயை காண்பித்ததால் நாடெங்கும் அக்கிரமம் அதிகரித்துக் கலகங்கள் உண்டாயின.



ஜலாலுதீன்

**தக்ஷிணத்தின்மேல் படையெடுத்தது, 1294** — அவனுடைய ஆளுகை முக்கியமானது; அதிலேதான் தக்ஷிணத்தின்மேல் மகம்மதியர் முதலிற் படை யெடுத்தார்கள். அலகபாத்துக்கு வடமேற்கே 40 மைல் தூரத்திலிருந்த காருவுக்கும், ஔட்டுக்கும் கவர்னரும், அரசனுக்குச் சகோதரன் குமாரனுமான அலாவுதீன் அதை நடத்தினன். இவன், 8,000 குதிரை வீரரோடு தக்ஷணம் சென்று நிஜாம் ராஜ்யத்தில் இப்போது தௌலதபாத்து என்றும் அப்பொழுது தியோகிரி என்றும் சொல்-

லப்பட்ட மஹாராஷ்டிர ராஜதானிக் கெதிரிலே திடீரெனத் தோன்றினான். அதன் அரசன் ராம் தேவு என்பவன் அதைச் சில தினங்கள் வரையும் தைரியமாய்க் காத்தான். அலாவுதீன் என்பவனோ பின்னும் பெரிய ஒரு சேனை டில்லியிலிருந்து வருகிறதாக அவனை நம்பச்செய்து, சமாதானத்துக்கு வரப் பலவந்தம்பண்ணி, ஏராளமான திரவியத்தை யெடுத்துக்கொண்டு வட இந்தியாவுக்குத் திரும்பினான். தள்ளாத அவன் பெரியப்பன் அவனைச் சந்திக்க எதிர்கொண்டு வர, அலாவுதீன் அவனைக் குத்திக் கொன்று போட்டான்.

**அலாவுதீன், 1295-1316** — அலாவுதீன் டில்லிக்குப்போய் 1296-லே பட்டம் தரித்துக்கொண்டான். குடிகளுக்கு வெகுமானங்கள் கொடுத்து, அவர்கள் தயவைச் சம்பாதிக்கப் பார்த்தான்; ஆகிலும், அவன் ஆண்ட காலத்தில் அநேக கலகங்கள் உண்டாயின; அவன் அவைகளை அமர்த்திப் போட்டான். குஜராத்தை இந்துக்களிடத்திலிருந்து திரும்ப ஜயித்துக் கொண்டான். முகலதேசத்தார்கள் அடிக்கடி நுழைந்தும், நுழைந்த பொழுதெல்லாம் துரத்துண்டார்கள்.

**ராஜபுதானம் ஜயிக்கப்பட்டது** — இந்தக் காலத்தில் வட இந்தியாவிலே துருக்கரும், ஆப்கான்களும், முகலரும் வந்து நிறைந்துவிட்டார்கள்; அவர்களைக் கொண்டு அலாவுதீன் இந்து அரசர்களோடு நடத்தின யுத்தங்களுக்கு வேண்டியபெருஞ் சேனைகளைச் சேகரம் பண்ணிக்கொண்டான். ராஜபுதானம் என்ற இந்து ராஜ்யத்தை ஜயிக்க விரும்பினான். அதை அவன் பலமுறையும் சுற்றிவந்தானே

தவிர, அதற்குள்ளே போனதில்லை. அதன் அரசன் ராஜபுத்திரன்; அவன் ராஜதானி சிற்றூர். ராஜபுத்திர பிரபுக்களுக்கெல்லாம் அவன் தலைவன். இந்தப் பட்டணத்தின்மேல் அலாவுதீன் 1303-ல் படையெடுத்தான். ராஜபுத்திரர் தங்கள் நகரத்தை வெகு வீரதீரமாய்க் காத்தார்கள்; ஆனால், அவர்களால் ஒன்றும் முடியாத சமயத்தில், ராணியும் மற்ற ராஜபுத்திர மங்கையரும் நெருப்பில் வீழ்ந்து பிராணனை இழக்க, நாயகன்மார் சத்துருக்களின் ஆயுதங்களின்மேற் பாய்ந்து மடிந்தார்கள்; சிலர் ஆரவல்லி மலைக்குத் தப்பி ஓடினார்கள். சிற்றூர் பிடிக்கப்பட்டது.



அலாவுதீன் கில்ஜி.

தக்ஷிணம் படையெடுக்கப்பட்டது — 1306-லே அலாவுதீன், முன்பு அடிமையாயிருந்து பின்பு உயர்ந்த அந்தஸ்துக்கும் ராஜ தயைக்கும் வந்தெட்டிய மாலிக் காப்பர் என்ற முதற் சேனாபதியை தக்ஷணத்திற்கு அனுப்பினான். பெரிய சேனையுடன் அவன் தியோகிரிக்குப்போய், அந்த அரசன் வரிகட்டாததற்காக அவனைத் தண்டித்தான். இந்-

தப்படி மஹாராஷ்டிரத்தின் குடிகளாகிய மராட்டியர் அடக்கப்பட்டார்கள்.

**தென்தேசம் கொள்ளையிடப்பட்டது** — மாலிக் காப்பர் என்பவன் மறுபடியும் 1309-ல் தக்ஷணத்தின் பேரில் படையெடுக்க அனுப்பப்பட்டான். தெலிங்கானா என்ற இந்து ராஜ்யத்தின் ராஜதானியான வாரங்கலை அவன் பிடித்துக் கொண்டான். அப்பால் காப்பர் சோழ மண்டலக்கரை முழுவதையும், இந்தியாவின் தென்முனையிலிருக்கிற ராமேசுவரம் வரைக்கும் கொள்ளையாடி, அங்கே தன் வெற்றிகளுக்கு ஞாபகக் குறிப்பாக ஒரு கோவில் கட்டினான். பிறகு திரளான திரவியத்துடன் டில்லி போய்ச் சேர்ந்தான்.

**அலாவுதீனின் அந்திய நாட்கள்** — அலாவுதீன் ஆளுகையின் கடைசிப் பாகத்தில் அநேக கலகங்களும் துரோகச் செயல்களும் நிகழ்ந்தன. சித்தூர் அரசன் கலகஞ் செய்து ஸ்வதந்திரம் மேற்கொண்டான். குஜராத்தும் யுத்தத்துக் கெழும்பி விட்டது. அலாவுதீன் சுகவீனப்பட்டு 1316-ல் மரித்துப் போனான். அவன் ஆண்டது 20 வருஷம். அவன்தான் இந்தியாமுழுதும் ஜயிக்க முயன்ற முதல் மகம்மதியன். அவனோ கொடியன், ராஜாவானபின்பு படிக்கக் கற்றுக்கொண்டவன். அவன் ஆண்டகாலத்தில் ராஜ்யத்திலே செல்வமும் சமாதானமும் உண்டாயிருந்தன; அநேக பெரிய மாளிகைகளைக் கட்டுவித்தான்.

**கில்ஜி வமிசத்து முடிவு** — கில்ஜி வமிசத்தின் கடைசி நான்கு வருஷங்களிலே, சகல அதிகாரமும் மகம்மதியனாய்விட்ட குஸ்ருகான் என்ற ஒரு இழி-

குல இந்துவுக்கு வந்து விட்டது. அவன் கடைசி அரசனைக்கொன்றுபோட்டு, ராஜாங்கத்தைக் கைப்பற்றிக்கொண்டு, ராஜ வமிசத்து ஒவ்வொரு ஆண்பிள்ளையையும் கொன்றுவிட்டான். இதனால் ஜனங்கள் அவனைப் பகைக்க நேரிட்டது. பஞ்சாப் கவர்னர் காசிகான் துக்லக்கும் வேறு பிரபுக்களும் ராஜதானிமேற் சென்று, குஸ்ருவைத் தோற்கடித்துக் கொன்றார்கள். கில்ஜி வமிசத்தில் ஒருவனும் கிடையாமையால் குடிகள் காசிகானை அரசனாக்கினார்கள். அவன் துக்லக் வமிசத்தவனாகையால், அவனுடைய பரம்பரையில் வந்தவர்களுக்குத் துக்லக் வமிசத்தரசர்களென்று பெயர்.

## 17. துக்லக் வமிசம், 1320—1414

**கியாசுதீன் துக்லக்,** 1320-1325 — காசிகான் பட்டம் பெற்றபொழுது "மதபரிபாலன்" என்றர்த்தமுள்ள கியாசுதீன் என்னும் பெயரைத் தரித்துக்கொண்டான். அவன் கலகக்காரர் நிறைந்த டில்லியைவிட்டு நாலு மைலுக்கப்பால் துக்லக்கபாத்தில் தன் பரிவாரத்துடன் வசித்தான். அவன் போகியாயும், தைரியசாலியாயு மிருந்தான். முகலர் தன் தேசத்தின்மேல் படை யெடுக்காவண்ணம் அரண்கள் கட்டினான். அவனது சுருக்கமான நாலு வருஷ ஆளுகையிலே, தான் எடுத்த பிரயாசையினாலே தேசத்தில் அமைதியும் ஒழுங்கும் குடிகொள்ளச் செய்தான். சில விவாதங்களைத் தீர்க்கும்பொருட்டு பங்காளம் போய்த் திரும்பினபின்பு,

அவனது வருகைக்காக அவன் குமாரன் உலுக் என்பவன் போட்டிருந்த பந்தல் விழுந்து கொலையுண்டான்.

**மகம்மது துக்லக், 1325-1351** — ராஜாங்கத்தைப் பிடித்துக்கொண்ட உலுக்கான் மகம்மது துக்லக் என்னும் பெயர் தரித்துக் கொண்டான். இந்தப் புது ராஜன் சிறந்த கல்வியும் திறமையுமுள்ளவன். சாஸ்திரத்திலும், வைத்தியத்திலும், தத்துவத்திலும் தேர்ந்த வித்வான். அதிக பக்தியுமுள்ளவன். இத்தனை நற்குணங்களிருந்தும், அவன் கொடியன்; பித்தன் என்றும் எண்ணப்பட்டான்.

**மகம்மதுவின் மூடச்செயல்கள்** — அவன் பட்டத்துக்கு வந்தவுடனே, முகலர் டில்லிவரையும் தேசத்தைக் கொள்ளை யடித்தார்கள்; ராஜனோ புத்தியில்லாமல் அவர்களுக்கு லஞ்சம் கொடுத்தனுப்பிவிட்டான். பின்பு அவன் தக்ஷிணம்போய்ச் சில கலகங்களை அடக்கினான். பிறகு, ஹிமாலய மலைவழியாய்ச் சீனாவின்மீது படையெடுக்க 100,000 குதிரை வீரரை அனுப்பினான்; சிலர் மாத்திரம் திரும்பி வந்தார்கள்; அந்தச் சில்லரை ராஜன் கொலை செய்தான். இந்த மூடப் படையெடுப்பின் செலவுக்காக அரசன் காகித நாணயம் உண்டு பண்ணினான். இது யாவருக்கும் பிடிபடாமையால், வர்த்தகம் விருத்தியாகாமல் நின்று விட்டது; வரவு குறைந்துவிட்டது. அதுகண்டு அரசன் வரிகளை உயர்த்திவிட்டான். உழவர் வயல்களை விட்டுவிட்டு காட்டுக்கு ஓடிப் போனார்கள்; பட்டணங்களில் ஜனம் கிடையாது; ராஜன் பைத்திய வெறிபிடித்து ஏழை ஜனங்களைத் தன் சேனையால் வளைத்துக்-

கொண்டு காட்டு மிருகங்களைப் போல் அவர்களை வேட்டையாடினான். இப்படி அடிக்கடி கொடுமை செய்து வந்தான்; அதனால் பஞ்சமும் துன்பமும் உண்டாயிற்று.

இன்னொரு மூடச்செயல் — மகம்மது இப்பொழுது தியோகிரியைத் தனக்கு ராஜதானியாக்கத் தீர்மானித்து; அதற்கு தௌலதபாத் என்று பெயரிட்டான்; அதற்கு அதிர்ஷ்ட நகரம் என்று அர்த்தம். டில்லி ஜனங்களை 800 மைல் தூரத்திலிருந்த அவ்வூருக்குப் போகச் செய்தான். அதுவோ கஷ்டப் பிரயாணம்; ஜனங்கள் மலைகளைக்கடந்து, காடுகள் வழியாய்ச் செல்ல நேரிட்டது. ஆயிரமாயிரமானபேர் வழியிலே மாண்டார்கள். அவ்வூரைச் சேர்ந்த சிலரை மறுபடியும் டில்லிக்குத் திரும்பிப் போகும்படி உத்தரவு செய்தான்.

அவனுடைய மரணகாலம் — அவன் ஆளுகையின் கடைசி வருஷங்கள் கலகக்காலமாயிருந்தன. மால்வாவிலே அவன் சொந்த சகோதரன் மகன் கலகஞ்செய்ய, அவனைப் பிடித்து உயிரோடே தோலுரித்தார்கள். பங்காளம் சுயாதீனமாகி இருநூறு வருஷம் அவ்வாறிருந்தது. கர்னாட்டா ராஜன் மறுபடியும் தன் சுயாதீனத்தை அடைந்து விஜயநகர ராஜ்யத்தை ஸ்தாபித்தான்; தக்ஷிணத்தில் பாமினி என்னும் இன்னொரு ராஜ்யமும் தோன்றிற்று.

சிந்து நாட்டை யடக்கும்படி செல்கையில், ராஜனுக்கு ஜுரம்கண்டு, சிந்து நதிக்கரையிலே 1351-ல் மரித்தான். அவன் ஆண்டது 25 வருஷம்; அத்தனையும் துன்பகாலம். இவ்வாறு இந்தப் பைத்தியக்காரன் உலகத்தை விட்டுத் தொலைந்தான்.

பிரூஸ் ஷா, 1351-1388 — மகம்மது இறந்த பின்பு அவன் சகோதரன் குமாரன் பிரூஸ் ஷா பட்டத்துக்கு வந்தான். அவன் மிகவும் உத்தம-மான அரசன்; ஜனங்களால் மிக நேசிக்கப்பட்ட-வன். சகல அநியாய வரிகளையும் நிறுத்தி விட்டு, பாலங்கள், ஆஸ்பத்திரிகள், கோவில்கள், வித்தியா சாலைகள் கட்டினான். சட்லெஜ் நதி முதல் கங்கை வரையும் அவன் வெட்டின 300 மைல் நீளமான யமுனை வாய்க்காலினால் அவனது பெயர் நாளது வரைக்கும் நினைக்கப்பட்டு வருகிறது. பிரூஸ் 1388-ல் தொண்ணூறு பிராயத்தில் மரித்தான்.

அரசன் மரித்தவுடனே உள்நாட்டு யுத்தம் ஆரம்பித்தது. அரசர்கள் சிறிதுகாலம் ஆண்ட-பின்பு நீக்கப்பட்டும் கொல்லப்பட்டும் போனார்கள். மால்வா, குஜராத், காண்டேஷ், ஜவுன்பூர் ராஜ்ய-ங்கள் ஸ்வயாதீனமாயின. டில்லியும் அதைச் சூழ்ந்த பூமியும் மாத்திரம் ராஜ்யத்துக்-குச் சொந்தமாயிருந்தன.



தாமர்லேன்

திமூர் எடுத்த முகலர்ப்படை, 1399 — துக்லக் வமிசத்துக் கடைசி ஆளுகையிலே தாமர்-லேன் அல்லது திமூர் என்பவன் முகலரோடு இந்தியாவுக்குள் பிரவேசித்தான். அவன் ஊர் ஊராய்க் கொள்ளையடித்து, ஜனங்களைக் கொன்று கொண்டு போனான். கைதிகள் அதிகமாயிருக்கிறதைப் பார்த்து, லக்ஷம் பேரைக் கொலைசெய்ய உத்தர வளித்தான். கடைசியில் அவன் டில்லியின்மேற்

சென்று, அரசனைத் தோற்கடித்து, பட்டணத்தைப் பிடித்துக்கொண்டு குடிகள் எல்லாரையும் கொன்று போட்டான். தனக்குப் பின்னாலே குழப்பத்தையும், பஞ்சத்தையும், கொள்ளை நோயையும் வைத்துவிட்டு, மிகுந்த திரவியத்துடன் தன்னாட்டுக்குத் திரும்பினான்.

## 18. சையித், லோடி வமிசங்கள், 1414—1526

**சையித்** — துக்லக் வமிசத்தின் கடைசி அரசன் 1412-ல் இறந்தான்; இரண்டு வருஷத்துக்குள், பஞ்சாப் கவர்னர் கிசியிர் என்பவன், துக்லக் வமிசத்தை அழித்துத் தன்னை ராஜாவாக்கிக் கொண்டான். அவன் தீர்க்கதரிசியாகிய மகம்மதுவின் வமிசத்தானும், இந்தியாவிற் பிறந்தவனுமாவன். 1421-லே அவன் மரித்தது ஜனங்களுக்கு பெருந் துக்கமாயிருந்தது.

**லோடி வமிசம்** — அவனுக்குப்பின் வந்தவர்களின் ஆளுகையை விவரிக்க வேண்டியதில்லை. டில்லி ராஜ்யம் வரவரச் சிறிதாகி, ராஜதானியைச் சூழ்ந்த கொஞ்சம் பூமிதான் அதற்கிருந்தது. சையித்களின் கடைசி ஆளுகைக் காலத்தில், அதற்குச் சிறிது காலத்துக்கு முந்தி பஞ்சாபைப் பிடித்துக்கொண்ட பூலோல் லோடி என்ற ஒரு பிரபு ராஜாங்கத்தைக் கைப்பற்றிக்கொண்டு லோடி வமிசத்தை ஸ்தாபித்தான் (1450). இவன் குடிகளை விவேகமாயும் நன்றாயும் ஆண்டு, தேசத்திலுண்டான தாறுமாறுகளை அடக்கினான். அவனுடைய நெடுங்கால ஆளுகை ஜவுன்பூர் (ஔட், அலகபாத் சூழ்ந்த நாடு) சுல்த்-


தான்கள் சண்டையிலே பெரும்பாலும் கழிந்தது; கடைசியில் அந்த ராஜ்யம் அடங்க அரசன் பங்காளத்துக்கு ஓடிப்போனான். பூலோல் 1488-ல் மரித்தபொழுது, அவன் ராஜ்யம் பஞ்சாப்முதல் பங்காளம் வரையும் பரவியது.

பேபர் இந்தியாவின்மேல் படை யெடுத்தது — லோடி வமிசத்துக் கடைசி அரசன் இப்ராயிம்; அவனுடைய குரூரச் செயல்களால் கலகங்கள் எங்கும் மூண்டன. பிஹார் அரசன் தன் சுவாதீனத்தை வெளியிட்டான். பஞ்சாப் கவர்னர் டௌலத்கான் லோடி எழும்பி, காபூலுக்குப் போய், அதன் முகல் அரசன் பேபரை இந்தியாவுக்கு வந்து இப்ராயிமின் கொடூரங்களை நிறுத்தும்படி வேண்டிக் கொண்டான். அப்படியே பேபர் 1526-ம் வருஷத்திலே இந்தியாவின் மேல் படையெடுத்து, பானிப்பட்டு என்னுமிடத்திலே இப்ராயிமோடு போர் புரிந்து அவனைக் கொல்லுவித்தான்.

## 19. பாமினி விஜயநகர ராஜ்யங்கள்

பாமினி ராஜ்யம், 1347-1525 — மகம்மது துக்லக் ஆண்ட காலத்தில் வேறு அநேகம் மகம்மதிய ராஜ்யங்கள் இந்தியாவின் பல இடங்களில் தோன்றி சுவயாதீனமாயிருந்தனவென்று முன்னமே தெரிந்து கொண்டோம். இவைகளி லெல்லாம் பெரியது தக்ஷிணத்துப் பாமினி ராஜ்யம். மகம்மது துக்லக்கின் காலத்தி லிருந்த சப்பர்கான் என்ற ஒரு ஆப்கன் சேனாபதி அதை ஸ்தாபித்தான். இவன், டில்லி யரசன் அனுப்பின சேனாபதிகளைத் தோற்கடித்து,

குல்பர்காவிலே, ஹைதிராபாத்துக்கு 150 மைல் தூரத்தில் ஸ்வயாதீனராஜ்யமொன்று ஏற்படுத்தினன். அவன் கங்கோ என்ஞெரு பிராமணனுக் கடிமையாயிருந்தவன். அந்தப் பிராமணன் காட்டிய அன்புக்குநன்றியாக "சுல்த்தான் அலாவுதீன் ஹாஸன் கங்கோ பாமினி" என்னும் பெயரைத் தரித்துக் கொண்டான்.




பிஜாப்பூரிலுள்ள பூர்வ கோரிகள்

இந்த ராஜ்யம் நருமதையாற்றுக்குத் தெற்கில், இப்போது நிஜாம் ராஜ்யம் என்னப்பட்ட பூமியும், பிரிட்டிஷ் அதீனத்திலுள்ள சில மாகாணங்களும் சேர்ந்ததாகும். இது 1347-முதல் 1525-உள்பட 178-வருஷமிருந்து, பின்பு ஐந்து சிற்றரசுகளாகப் பாகிக்கப்பட்டது — பிஜாப்பூர், கோல்கொண்டா, ஆமெட்நகரம், பீரார், பிடர்.

விஜயநகர ராஜ்யம், 1350 - 1565 — வாரங்கலே மகம்மதியர் பிடித்துக் கொண்டபிறகு, அங்கிருந்து

தப்பி ஓடிய இந்துக்களால் விஜயநகர ராஜ்யம் ஏறக்குறைய 1350-லே ஸ்தாபிக்கப்பட்டது. இப்பொழுது சென்னை ராஜதானிக்கும் மைசூருக்கும் சேர்ந்த பூமியே அதன் விஸ்தீர்ணம். பல்லாரியிருக்கிற ஸ்தானத்திலே அதன் ராஜதானி துங்கபத்திரா நதியோரத்தில் இருந்தது; நூறு வருஷத்திலே 24 மைல் சுற்றளவு கொண்ட பட்டணமாக அது பெருகிவிட்டது.

**தலிக்கோட்டை யுத்தம், 1565**— பாமினி சுல்த்தான்களுக்கும் விஜயநகர அரசர்களுக்கும் இரு-



விஜயநகரம்

நூறு வருஷகாலமாக ஒழியாப்போர் நடந்து வந்தது; இருகக்ஷியாரிலும் ஏராளமான பேர் மாண்-

டார்கள். 1565-லே நாலு சுல்த்தான்கள் ஒன்றுகூடி இந்துராஜாவின்மேற் சென்று தலிக்கோட்டையிலே அவனை முறியடித்தார்கள். வயதுசென்ற அரசன் கொலையுண்டான். அவன் ராஜதானி கொள்ளையிடப்பட்டது. இந்த யுத்தத்தால் இருநூறுவருஷம் நிலைத்திருந்த விஜயநகர அரசின்பலம் ஒடுங்கிப் போயிற்று. அதுமுதல் பல சிற்றரசர் ராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். அவர்களிடத்திலிருந்துதான் சென்னை ராஜதானி பாளையக்காரரும், மைசூர் மகாராஜாவும் உதித்தவர்கள். ராஜவமிசத்தாரில் ஒருவன் சந்திரகிரிக்கு ஓடிப்போனான். அவன் சந்ததியாரில் ஒருவனே 1639-ல் அங்கிலேயருக்குச் சென்னையைக் கொடுத்தான்.

## 20. போர்த்துகீசர்

போர்த்துகீசர் ஆப்பிரிக்காவைச் சுற்றி யாத்திரை செய்தது—இப்பொழுது நாம் முகலரைச் சிறிது காலம் விட்டு, இந்தியாவுக்கு இக்காலத்தில் வந்த போர்த்துகீசர் என்ற ஒரு புது ஜனத்தின் விருத்தியைக் கவனிக்க வேண்டும். இந்தியாவிலிருந்து சரக்குகள் வெகு காலமாய் ஆப்கானிஸ்தான், மத்திய ஆசியா மார்க்கமாயும், சில சமயங்களில் எகிப்து மார்க்கமாயும் யூரோப்புக்கு அனுப்பப்பட்டு வந்தன; யூரோப்பிலே வெனிஸ், ஜினோவா பட்டணங்களில் இந்த வியாபாரம் முக்கியமாய் நடந்தது. யூரோப்பின் மேற்குத் திசையிலுள்ள தேசத்தார் இந்தியாவோடு நேராய் வர்த்தகஞ் செய்ய விரும்பி-

ஞர்கள். அதுவோ ஆப்பிரிக்காவைச் சுற்றி யாத்திரை செய்தால்தான் கூடியதாகும். போர்த்துகல் அரசன் ஆப்பிரிக்காவைச் சுற்றிப்போய் இந்தியாவைச் சேரத்தக்க கப்பற்கூட்டம் ஒன்று தயார் செய்தான். பர்த்தாலமியுடியஸ் என்பவன் 1487-லே ஆபிரிக்காவின் தென் கரையைச் சுற்றிச் சென்று, அவ்விடம் அவனுக்கு நேரிட்ட புயல்காற்றைப்பற்றி அதற்குப் "புயல்முனை" என்று பெயரிட்டான். போர்த்துகல் அரசனோ அதை "நற்கோரிக்கை முனை" என்று பெயர்வைத்தான்.

வாஸ்கோடகாமா இந்தியாவிற்கு வந்தது — வாஸ் கோடகாமா தலைவனாக இன்னொரு கப்பற் கூட்டம் 1497-லே தயாராயிற்று. அவன் "நற்கோரிக்கை முனை"யைச் சுற்றி ஒரு வருஷமாக யாத்திரைசெய்து 1498-லே கள்ளிக்கோட்டைக்கடுத்த ஒரு துறைமுகத்தில் வந்து சேர்ந்தான். கள்ளிக்கோட்டையின் இந்து ராஜாவாகிய ஜாமோரினை வாஸ்கோடகாமா போய்த் தரிசனம் செய்தான். அவன் அவனை அன்பாய் உபசரித்து வர்த்தகம் ஆரம்பிக்க உத்தரவருளினான். அங்கிருந்த அராபியரோ, எங்கே தங்கள் வியாபாரம் நஷ்டப்படுமோ என்று பயந்து, ஜாமோரினிடத்தில் அவன் கடற் கள்ளன் என்று கோள் சொன்னார்கள். அது கேட்டு ஜாமோரின் போர்த்துகீசரில் சிலரைப் பிடித்துக்கொள்ள, அவர்களை விடுவிக்கிற வரைக்கும் டகாமா சுதேசிகள் சிலரைப் பிடித்துச் சிறையில் வைத்துக் கொண்டான். மலபார்க் கரையிலே ஆறுமாத மிருந்து பின்பு டகாமா போர்த்துகலுக்குப் போய் விட்டான்.

ஆல்வரஸ் கேப்ரல் — பிறகு கேப்ரலின் வசமாய் ஒரு புதிய கப்பற் கூட்டம் அனுப்பப்பட்டது. அநேக புயல்களும் இடையூறுகளுக்கும் தப்பி இந்தக் கப்பற் கூட்டம் 1500-லே கள்ளிக்கோட்டை வந்துசேர்ந்தது. அங்கே ஒரு வர்த்தகசாலை ஏற்படுத்த உத்தரவு கிடைத்தது. ஆனல், அராபியருக்கும் போர்த்துகீசருக்கும் சண்டை தொடங்கவே, போர்த்துகீசர் கொச்சிக்குப் போய் விட்டார்கள். இங்கே அவர்கள் பக்ஷமாய் உபசரிக்கப்பட்டமையால், கேப்ரல் கொச்சியிலே ஒரு வர்த்தகசாலையை ஸ்தாபித்தான்.

வேறு பல பிரயத்தனங்களும் செய்யப்பட்டன. 1507-லே ஆல்மைடா என்பவன் இந்தியாவுக்குப் போர்த்துகீஸ் கவர்னராகவும் பிரதிநிதியாகவும் வந்து சேர்ந்தான். அவன் அராபியர் கையிலிருந்து டியு என்னும் தீவைப் பிடித்துக் கொண்டான். இதனல் போர்த்துகீசருக்கு ஆசியாவிலே சமுத்திர அதிகாரமும் கிடைத்தது. 1509-லே ஆல்புகர்க் கவர்னராக வந்தான். அவன் 1510-லே கோவையைப் பிடித்து, அதைப் போர்த்துகீஸ் இந்தியாவுக்கு ராஜதானி யாக்கினன். பிறகு அவன் மலாக்காவைப் பிடித்து, சியம், ஸ்பைஸ் தீவுகளோடு வர்த்தகம் ஆரம்பித்தான். போர்த்துகீசரை இந்திய சமுத்திரத்தவர்களுக் கெல்லாம் அதிகாரிகளாக்கிய பின்பு, ஆல்புகர்க் கோவையிலே 1519-லே இறந்தான். 1500 முதல் 1600 வரையும் சரியாய் நூறு வருஷமளவும் கீழ்த் தேசத்து வர்த்தகம் போர்த்துகீசர் கையிலிருந்தது. அவர்கள் பாசீன், டியு, மங்களூர், ஹூக்ளி இவ்விடங்களில் கோட்டைகள் கட்டினர்கள்.

ஆல்புகர்க்குக்குப் பின்வந்தவர்கள் திறமையில்லாதவர்களானதால், அவர்கள் காலத்தில் போர்த்துகீஸ் அதிகாரம் க்ஷீணிக்கத் தொடங்கிற்று. பங்காளத்திலே முகலர் அவர்கள் அதிகாரத்தைக் கவிழ்த்துப் போட்டார்கள்; மேற்றிசையிலே மராட்டியர் அவர்களை உபத்திரவப் படுத்தினார்கள். இந்தியக் கடல்களிலே டச்சுக்காரரும், அங்கிலேயரும் தோன்றினார்கள். இதெல்லாம் அவர்கள் அதிகாரத்தைக் கீழ்த்தேசத்தில் அழிக்காமற் போகவில்லை. இப்போது இந்தியாவில் அவர்களுக்குச் சொந்தமானவைகள் கோவை, டாமான், டியு; இவை மூன்றும் மேற்றிசையிலுள்ளவை.

## 21. முகல் ராஜ்யம் ஸ்தாபித்த பேபர், 1526—1530.



பேபர்

**பேபரின் ஆரம்ப ஜீவியம்**—தந்தை வழியில் பேபர் துருக்க வமிசத்துத் திமூரிலிருந்தும், தாய்வழியில் செஞ்சிஸ்கானி லிருந்தும் உண்டான சந்ததி. ஆகிலும் வடக்கிலிருந்து வந்த எல்லா மகம்மதியரையும் முகலர் என்று இந்துக்கள் பொதுவாகச் சொல்லுவார்கள்; ஆதலால், பேபர் ஸ்தாபித்த வமிசத்துக்கு முகல் வமிசமென்று பேர்.

பேபர் 1482-ல் பிறந்தவன். பன்னிரண்டென்னும் இளம்பிராயத்திலே அவன் தன் தகப்பன் பட்டத்துக்கு வந்தான். பதினைந்து வயதாயிருக்கையிலேயே அவன் சமார்க்கண்டு என்னும் ஊரைப் பிடித்துக்கொண்டு, ராஜாவை ஓட்டினான். இது நடந்து சில வருஷங்களானபின்பு, அஸ்பெக்கர் என்பவரால் துரத்துண்டு, அவன் ஊர் ஊராய் ஓட நேரிட்டது. அஸ்பெக்கர் நடு ஆசியாவைச் சேர்ந்த ஒரு பலத்த ஜாதியார். கடைசியில் அவன் காபூலைப் பிடித்து அங்கொரு ராஜ்யத்தை ஸ்தாபித்தான். இங்கே இருபத்திரண்டு வருஷம் ஆண்ட பின்பு, அவன் இந்தியாவின்மேற் படையெடுத்து முகல் ராஜ்யத்தை ஸ்தாபித்தான்.

1526-ல் **இந்தியாவின் ஸ்திதி** — இந்தப் பிரசித்தமான ராஜ்யத்தின் வரலாற்றை உரைக்குமுன், அந்தக்காலத்தில் இந்தியா இருந்த நிலைமையை நாம் அறியவேண்டும். தென் இந்தியாவிலே சோழ, பாண்டிய ராஜ்யங்கள் இருந்தன. இந்து ராஜ்யமாகிய விஜயநகரம் மகம்மது ராஜ்யமாகிய பாமினியோடு சண்டை செய்துகொண்டிருந்தது. ஹிந்துஸ்தானுக்குத் தெற்கிலும் வடக்கிலும் ஆப்கானர் ஆண்ட மால்வா, குஜராத்து, காண்டெஷ் இருந்தன. பிஹார், பங்காளமாகிய மகம்மது ராஜ்யங்கள் சிறிது காலத்துக்குமுன்தான் தனியரசுகளாய்விட்டன. ராஜபுதானாவிலே ராஜபுத்திரரின் அதிகாரம் அதிகம். மகம்மதிய அதிகாரம் அதிகரித்திருந்தாலும், டில்லி ராஜ்யம் விஸ்தீரணத்திலும், வல்லமையிலும் குறைந்திருந்தது; இந்தக்காலத்தில் இப்ராயிம் லோடி அதற்கரசனாயிருந்து தன் குரூரச்

செயல்களால் நாலாபக்கமும் கலகங்களை எழுப்பி விட்டான். பஞ்சாப் கவர்னர் டௌலத்கான் லோடி அவனுக்கு விரோதமாய் எழும்பி, காபூலில் ஆண்டுகொண்டிருந்த பேபரின் உதவியை வேண்டினான்.



ராஜபுத்திரர் கூட்டம்


பேபர் இந்தியாவின்மேல் படையெடுத்தது— பேபர் நெடுநாளாய் இந்தியாவை ஆசையோடு நோக்கியிருந்தமையால், அதிக சந்தோஷமாய் வந்து, முதலில் லாகோரை அடித்துக் கொள்ளையாடி, காபூலுக்குத் திரும்பினான். அவன் 1526-ல் இந்தியாவுக்கு மறுபடியும் வந்து, டில்லிக்குச் சமீபமாயிருந்த பானிப்பட்டிலே லோடியோடு போர் புரிந்தான். இந்திய சேனைகள் ஓட்டம்பிடித்தன,

லோடி கொலையுண்டான். பேபர் டில்லியையும் ஆக்ராவையும் பிடித்துக்கொண்டு இந்தியாவிலே முகல் ராஜ்யத்தை ஸ்தாபித்தான்.

**பேபரின் சங்கடங்கள்** — இந்த ஜயம் வந்தும், ராஜ்யத்தை ஜயிக்க இன்னும் அநேக தடைகள் உண்டென்று அவனுக்குத் தெரியவந்தது. தன் சொந்தத் தலைவர்களுக்கே இந்திய உஷ்ணம் சரிப்படவில்லை; சித்தூர் ராஜபுத்திரர் இந்தப் புதிய சத்துருவைத் துரத்திவிட வேண்டுமென் றிருந்தார்கள்; ஆப்கானர் தங்கள் ஆதி நிலைமைக்கு வர முயன்றார்கள்; பேபர் சேனைகளுக்கும் இந்துக்களுக்கும் பெரும்பகை விளைந்துகொண்டு வந்தது. தன் மனவலிமையினால் எல்லாரையும் தன் வசப்படுத்தினான்.

**ராஜபுத்திரர் தோற்றது, 1527** — சித்தூரின் ராஜபுத்திர அரசன் சங்கா என்பவன் தன் அடிமைகளின் உதவியோடு பெருத்த சேனையுடன் பேபர் மேல் சென்றான். ஆக்ராவுக்கு 20-மைல் தூரத்திலுள்ள சிக்ரி என்னுமிடத்தில் இரு சேனைகளும் சந்தித்தன. அவனுடைய முன் சேனை ராஜபுத்திரரால் அடிபட, வீரர்கள் அதைரியப்பட்டு முதுகு காட்டத் தொடங்கினார்கள். பேபரோ அவர்கள் நாணயத்தைப் புகழ்ந்துரைக்க, அவர்கள் ஜயிக்கவாவது சாகவாவது சபதம் பண்ணிக் கொண்டார்கள். பெரிய யுத்தம் நடந்தது. பேபர் ஜயித்தான்; சங்கா வெகு சங்கடத்துடன் தப்பித்துக் கொண்டான். அடுத்த வருஷத்து ஆரம்பத்தில் பேபர் மால்வாவுக்குச் சமீபமான சந்தரியின்மேற் சென்றான். அதன் ராஜபுத்திர ராஜன் வெகு வல்லமைசாலியாயிருந்தான். ஊர் முற்றுகை போடப்பட்-

டது; தங்கள் எண்ணமெல்லாம் வியர்த்தமானதைக் கண்ட ராஜபுத்திரர் தங்கள் மனைவி மக்களைக் கொன்றுபோட்டு வெளியே பாய்ந்து, ஜயத்துக்குப் பதில் மரணத்தை அடைந்தார்கள். ஒவ்வொருவனும் சாகிறவரையும் சண்டை செய்தான்.



பட்டிபூர் சிக்ரி அழிவுகளின் பொதுக்காட்சி

இன்னும் சில ஜயங்கள் — பிறகு, பேபர் ஆப்கானரை அடக்கத் தொடங்கினன். பிஹாரும் பங்காளமும் ஜயிக்கப்பட்ட பின்பு, ஜவுன்பூர்வரையும் தேசமெல்லாம் தன்வசமாயிற்று. அவன் மரணத்துக்குமுந்தி வடஇந்தியாமுழுதும், பஞ்சாப்புமுதல் பிஹார்வரைக்கும் அவனுடைய அதிகாரத்துக்குள் வந்துவிட்டது.

பேபரின் மரண நாட்கள் — தன் மகன் ஹுமாயூன் அதிக வியாதிப் பட்டபொழுது அவனுயிர்க்குத் தன்னுயிரைக் கொடுக்க பேபர் தீர்மானஞ் செய்தான்; அப்படியே அவன் ஜபம்பண்ணிக்கொண்டு ஹுமாயூன் படுக்கையை மூன்றுமுறை சுற்றிக்கொண்டு வந்தான்; அற்புதமாக ஹுமாயூன் சௌக்கியப்பட்டான். சில மாதங்களாய் நல்ல சுகமில்லாத தகப்பன் மிகவும் அசௌக்கியமாகி இறந்துபோனன் — 1530.

பேபர் குணவிசேஷங்கள் — பேபருக்கு தயை தாக்ஷிணியம் இயல்பாயினும் தன் சத்துருக்களைச் சில சமயங்களில் கொடூரமாய் நடத்தினன். யுத்தத்தில் அவன் துணிவுள்ளவன், எதற்கும் அஞ்சான். இல்லற ஒழுக்கத்திலே அவன் யுக்திப் பேச்சும், சிநேக குணமுமுடையவன்; ஆனல், மதுபானப் பிரியன். தேசமெல்லாம் குதிரைச் சவாரி செய்வது அவனுக்குப் பிரியம். அவன் வாய்க்கால்களும் ஏரிகளும் வெட்டினன்; அத்தனை வேலைகளிருந்தும் அவன் பெர்ஷியன் பாஷையில் கவிகள் அனேகம் பாடினன்; அதற்கு அவன் அவகாசம் வைத்துக்கொண்டது அதிசயம்.

## 22. பிறதேசம்போன யூமாயூன் அரசன், 1530—1555

117637

பஹாதூர் ஷா — பேபருக்குப்பின் அவன் முதற் குமாரன் யூமாயூன் பட்டத்துக்கு வந்தான். இவன் தன் இரண்டு சகோதரரையும் காபூலையும் காந்தாரத்தையும் கொடுத்துவிட்டான். பின்பு குஜராத்து அரசன் பஹாதூர் ஷாவுக்கு விரோதமாகச் சென்று, அவனைத் தோற்கடித்து, அவன் தேசத்தை அபகரித்துக் கொண்டான்; அரசன் திரவியமெல்லாம் வைத்திருந்த சாம்பனீர் என்னும் ஊர் வெகு கஷ்டத்துடன் பிடிக்கப்பட்டது. பஹாதூர்ஷா ஊர் ஊராய்


யூமாயூன்

ஓடிக் கடைசியிலே போர்த்துகீசரால் டில்லியிலே கொலையுண்டான்.

யூமாயூன் தோற்றது—தன் வீரதீரத்தாலும் புத்தி நுட்பத்தாலும் பங்காளத்துக்குக் கவர்னராய்விட்ட ஷெர்ஷா என்றொரு ஆப்கன் வீரன் யூமாயூன்மேற்சென்று பக்சார் என்னுமிடத்தில் 1539-லே அவனை முறியடித்தான். அதனால் யூமாயூன் இந்தியாவைவிட்டு ஓடி, சிந்துவனத்தைக் கடந்து, பர்ஷியாவுக்குப் போய் விட்டான். இந்தக்காலத்தில்தான் அவனுடைய கீர்த்திபெற்ற குமாரன் ஆக்பர் என்பவன் அமரக்கோட்டில் பிறந்தான் — 1542.

ஷெர்ஷாவின் ஆளுகை 1540 — 1545 — அப்பொழுது ஷெர்ஷா தன்னைச் சக்கரவர்த்தி ஆக்கிக்கொண்டான். அவன் ஆண்டது ஐந்தே வருஷமாயினும் ஜனங்களுக்கு அதிக நன்மை செய்தான். அவன் கங்கை தொடங்கிச் சிந்துநதி வரைக்கும் ஒரு சாலை போட்டு, இரண்டு வரிசையிலும் பழமரங்கள் வைத்து, இரண்டு இரண்டு மைலுக்கொரு கிணறுவெட்டி, அஞ்சலுக்கொரு சத்திரமும் கட்டுவித்தான். 1545-லே



ஷெர்ஷா.

கலிங்கர் என்னும் கோட்டையைப் பிடிக்கையில் அவன் கொல்லப்பட்டான்.

யூமாயூனுக்கு ராஜ்யம் மறுபடியும் கிடைத்தது — 1555 - ஷெர்ஷாவுக்குப் பின் அவன் குமாரன் பட்டத்துக்கு வந்தான். வமிசத்தின் கடைசி அரசனது காலத்தில் ஹேமு என்ற ஒரு இந்து மந்திரியாக, ஆப்கானர் கலகஞ் செய்தார்கள். உடனே யூமாயூன் இந்தியாவுக்குத் திரும்பி வந்து, ஆப்கான் சேனையை ஸர்ஹிந்து என்னு மிடத்தில் முறியடித்துத் தன் ராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொண்டான்.

ஆகிலும், துரதிருஷ்டக்காரனை அவன் சில மாதங்கள்தான் அரசாண்டான். தன் அரண்மனையின் சலவைக்கல் படிக்கட்டிலிருந்து விழுந்து இறந்துபோனான். அவன் தைரியமும், நற்குணமும், கல்வியு முள்ளவனாயினும், ஸ்திரமற்றவனும் தன் தந்தையின் திறமையற்றவனுமா யிருந்தான்.

## 23. முகல்ராஜ்யத்தைக் கட்டின மஹா ஆக்பர், 1556 - 1605

பானிப்பட் யுத்தம் — ஆக்பரின் தகப்பன் பட்டத்துக்கு வந்தபொழுது அவனுக்கு வயது பதின்மூன்று. தன் தகப்பனுடைய உத்தம நேசனும் திறமையுள்ள தளகர்த்தனுமான பைராம்கான், "ஆண்டவருக் காண்டவன்" என்றர்த்தங் கொள்ளும் கான்கானான் என்ற பட்டத்துடன் ராஜப்பிரதிநிதியாக நியமிக்கப்பட்டான். ஹுமாயூன் இறந்தவுடனே ஹேமு பலத்த ஒரு சேனையோடு ஆக்பர் மேற்சென்றான். பைராம்கானே நல்ல தேர்ச்சியில்லாத சொற்ப சேனையுடன் ஹேமுவைப் பானிப்பட்டென்னும் இடத்திற் சந்தித்தான். இங்கே பெருத்த யுத்தம் நடந்தது. ஹேமுவுக்குக் கண்ணில் காயம்பட, அவன் வீரர் எல்லாரும் தாறுமாறாய் ஓடி விட்டார்கள்; முகலருக்கு ஜயம் கிடைத்தது.



ஆக்பர்
(பாலியப்பருவம்)

பைராம் நீக்கப்பட்டது — தன் மந்திரியின் கீழிருப்பது ஆக்பருக்கு இஷ்டப்படவில்லை. அதனால் அவனுக்குச் செலவுகொடுத்து அனுப்பிவிட்டு, ராஜ்யபாரத்தைத் தானே எடுத்துக் கொண்டான்; பைராம் மக்காவுக்குப் போகப் புறப்பட்டான். வழியிலே, அவன் தகப்பனால் கொலையுண்ட

ஆப்கன் ஒருவனின் குமாரன் அவனைக் கொன்று போட்டான்.

ஆக்பரின் ராஜாங்க ஏற்பாடு — இக்காலத்தில் டில்லி ராஜ்யம் என்பது டில்லியும் அதைச் சூழ்ந்த நாடும் பஞ்சாபுந்தான். ஆக்பர் தன் ராஜ்யத்தை அதிகரிக்க விரும்பினான்; ஆகிலும் அவனுடைய முகலர்ச் சேனை தொகையில் அற்பமாயும், யுத்தப் பயிற்சி யற்றதாயு மிருந்ததால், அது அவனுக்கு உதவாமற் போயிற்று. ஆப்கானரையோ அவன் நம்பப்படாது. ஆகையால் அவன் இந்துக்களைத் தன் பக்கம் திருப்பிக்கொள்ளப் பார்த்தான்.

ராஜபுதானத்தின்மேல் படையெடுத்தது — ஆக்பரின் பிரபுக்கள் அவனைச் சங்கடப் படுத்தினார்கள்; ஆகிலும் அதிகப் பிரயாசை யெடுத்துக் கொண்டு அவர்களை அடக்கினான். பிறகு ராஜபுதர்னுவை அடக்கவேண்டி யிருந்தது; சித்தூர் ராணுவாகிய உதயசிங்கன்கீழ் கிட்டத்தட்ட நூறு ராஜபுத்திர பிரபுக்கள் இருந்தார்கள். ஆக்பர் அவர்கள்மீது சென்றான்; இருவரும் அடங்கி விட்டார்கள். அப்புறம் அவன் தன் எண்ணத்தைத் தெரிவித்தான். அவர்கள், தன்னைத் தங்கள் அதிபதியாக அங்கீகரித்துக்கொண்டால், அவர்கள் நிலத்தை அவர்களுக்குக் கொடுத்துவிடுவதாகச் சொன்னான். அநேகர் அதற்கு இணங்கினார்கள். அன்றியும், ஆக்பர் ராஜபுத்திர மங்கையரைக் கலியாணம் பண்ணிக் கொண்டான்; தன் குமாரிகளை ராஜபுத்திர பிரபுக்களுக்குக் கலியாணஞ் செய்வித்தான்; தன் சொந்தக் குமாரன் சாலீம் என்பவன் ஜோட்பை என்னும் அழகமைந்த மாதை மணம்புரிந்தான்;


சித்தூர் ராணுமாத்திரம் இணங்கேன் என்றுன். ஆக்பர் அவன்மேற் சென்று சித்தூரைப் பிடித்துக்கொள்ள, ராணு ஆரவல்லிக்கு ஓடி அங்கொரு ராஜ்யம் ஸ்தாபித்தான்; அதன் ராஜதானி உதயப்பூர் எனப் பெயர்பெற்றது.

**வேறு ஜயங்கள்** — தன் இந்துச் சிநேகரின் உதவி பெற்று ஆக்பர் ஹிந்துஸ்தானிலிருந்த ஆப்கானரின் சிற்றரசுகள்மேல் படையெடுத்தான். குஜராத்து, பங்காளம், ஒரிசா, காஷ்மீர், சிந்து இவை ஒவ்வொன்றுய்ப் பிடிக்கப்பட்டு தன் ராஜ்யத்தோடு சேர்க்கப்பட்டன. பிறகு அவன் தக்ஷிணம் போய் காண்டெஷ், ஹாமெட் நகரம் ராஜ்யங்களை அடக்கினுன். இந்த விதமாய் முதல் ராஜ்யம் வடக்கே காபூல், காஷ்மீர், காண்டஹார் தொடங்கித் தெற்கே நருமதை நதிவரையும் பரவியது.

**ஆக்பரின் அந்தியகாலம்** — இந்தச் சக்கரவர்த்தியின் கடை நாலு வருஷங்களிலே, குடியனும் அபின் தின்னியுமான தன் குமாரன் சலீமின் துர்நடக்கையினுல் அவன் மனம் கடுந்துயருற்றது. நாற்பத்தொன்பது வருஷம் ஆண்ட பின்பு ஆக்பர் 1605-ல் மரணமடைந்தான்.

**ஆக்பரின் குணவிஷயங்கள்** — ஆக்பர் உயரமும் சௌந்தரியமுமுள்ளவன்; அவனுக்கு வேட்டையும் வெளி அப்பியாசமும் விருப்பம்; தினம் ஒன்றுக்கு முப்பது நாற்பது மைல் நடப்பது சகஜம். அவன் குரல் உரப்பும், பேச்சு பிரியமானதாயும், ஆசாரம் மனதைக் கவரத்தக்கதாயும் இருக்கும். இந்தியாவின் மகம்மதிய அரசர்களி லெல்லாம் அவனே

சிறந்தவன். அவன் கை எந்நாளும் யுத்தத்தி-லிருந்தாலும், அவன் மனம் தன் குடிகளின் நன்மை-யைக் கருதியது. வியாச்சியங்களை யெல்லாம் அவனே விசாரித்து, தனக்குத் தெரியாமல் எந்தக் குற்றவாளியையும் தண்டிக்கவிட்டான். ஆக்பர் தன்



ஆக்ராவிலுள்ள ஆக்பருடைய கோரி

ராஜ்யத்தில் நாலா பக்கமும் திரிந்துலாவி, கனமா-யும் விரைவாயும் நீதி நடப்பித்தான். தனக்கு எழுதப் படிக்கத் தெரியாமற் போனாலும், புஸ்த-கங்களை வாசிக்கக் கேட்பது அவனுக்கு மெத்தப் பிரியம். அதன் ஸம்ஸ்தானத்தில், இந்துக்களும் மகம்மதியருமான அனேக வித்துவான்கள் இருந்-தார்கள்; அவர்களில் பெரியவன் ஆபுல்பேசில் என்பவன். சாதாரண குடிகளிடத்திலும் ஆக்பர் பக்ஷம் பாராட்டினான். அவர்கள் முன்னிலும் பாக்கியசாலிகளாயிருந்தார்கள். ஆண்கள் பதினா-றுக்கும், பெண்கள் பதினான்குக்கும் முந்தி விவாகஞ் செய்யக்கூடாதென்று கட்டளையிட்டான்.


ஆக்பர்

ஆக்பரின் மதக்கொள்கைகள் — ஆக்பர் அதிக கண்டிப்பான மகம்மதியனல்ல. ஒவ்வொருவனும் தன் தன் மார்க்கத்தைப் பின்பற்றச் சம்மதித்தான்; ஆகிலும் இப்போது பிரிட்டிஷ் அரசாட்சியிருக்கிற பாக்கியம் அக் காலத்தோருக்கு இருந்ததென நினைக்கலாகாது. தனக்குக் கிரிஸ்து மார்க்கத்தைக் கற்பிக்கும்படி கோவையிலிருந்து கத்தோலிக் குருமாரை வரவழைத்தான். இந்துக்களுக்கு ராஜ்யத்தில் உயர்ந்த உத்தியோகங்கள் அளித்தான். மகம்மதியர் அல்லாதவர் செலுத்தவேண்டிய "ஜசியா" என்னும் வரியைத் தள்ளிவிட்டான். இந்து விதவைகள் மறுபடியும் கலியாணம் பண்ணச் சம்மதித்து, விதவைகள் தகனமாகிய "சத்தி" என்னும் சடங்கை நிறுத்திவிட்டான். தன் நண்பன் ஆபுல்பெசில் யோசனை கேட்டு திவ்வியமார்க்கம் என்று ஒரு புதிய மார்க்கத்தை ஸ்தாபித்தான்; தன்னை ஒரு சற்குருவாகப் பாவித்து, தன்னைத் தெய்வமாக வணங்கச் சம்மதித்தான்.

வரி வரவு ஏற்பாடு — ஆக்பரின் இந்து மந்திரி ராஜா தோடர்மல என்பவன் நிலவரி வசூல் பண்ணும் விதத்தைத் திருத்தினன். இதற்காக நிலங்கள் பத்திரமாயும் திருத்தமாயும் தங்கள் தங்கள் தரத்துக்கேற்றபடி மூன்று வகுப்பாக வகுக்கப்பட்டு, குடிகள் சர்க்காருக்குத் தங்கள் நிலத்தின் விளைவுக்

கிரயத்திலே மூன்றிலொருபாகம் கொடுக்கக் கடன்பட்டிருந்தார்கள்.

**சேனையில் சீர்திருத்தம்** — சேனையானது சட்டத்துக்கு அமைந்து நடக்கக் கற்பிக்கப்பட்டது. போர்வீரருக்கு ஜாகீருக்கு (நிலம்)ப் பதில் சம்பளம் கிடைத்தது. இதுகளும் மற்றவைகளும் ஆபுல்பேசில் இயற்றின ஆக்பரின் சட்டங்களாகிய "அய்னி ஆக்பாரி"யில் அமைந்திருக்கிறது.

## 24. மனையாளுக் கடிமையான ஜஹாங்கீர், 1605 - 1627

சாலீம் — ஆக்பருக்கும் ராஜபுத்திர ராணிக்கும் அருமைப் புத்திரனு யிருந்த சாலீம் என்பவன் "உலகத்தை வென்றவன்" என்று பொருளுள்ள ஜஹாங்கீர் என்கிற பெயருடன் தகப்பனுக்குப் பின் 1605-லே ஆளத் தொடங்கினான். அவனுக்குத் தகப்பனின் திறமையாவது ஞானமாவதுகிடையாது. ஆக்பர் மாத்திரம் ராஜ்யத்தை அந்தச் சிறந்த ஸ்திதியில் வைத்திராமற் போனால் அது சின்னுபின்னமாய்ச் சிதறுண்டிருக்கும். சாலீம்பெரும்பாலும் தன் காலத்தைக் கலகங்கள் அமர்த்துகிறதிலும் சிற்றின்பத்திலும் செலவழித்தான். அவன் யுத்தங்கள் புரிந்தும், ராஜ்யத்துக் கொன்றும் சேர்த்ததில்லை.



சாலீம்

[கலகம் — சக்ரவர்த்தியின் மூத்த குமாரன் குஷ்ராவென்பவன் அவனுக்கு விரோதமாக எழும்பினான். அவன் பஞ்சாபுக்கு ஓடிப்போய், விசேஷமாய் ராஜபுத்திரர் அடங்கிய பெருஞ் சேனை ஒன்று சேர்ப்பித்தான்; அவனைத் துரத்திப் பிடித்து, விலங்கு மாட்டித் தகப்பனிடம் கொண்டு வந்தார்கள். ஜஹாங்கீர் கைதிகளில் 700 பேரை உயிரோடு கழுவிலேற்றினான்; குஷ்ராவை அவர்கள் வேதனையைப்பார்க்கக் கூட்டிக்கொண்டு போனார்கள். தன் மரணம் வரையிலும் அவன் சிறையிற் கிடந்தான்].

**நூர்ஜஹான் சக்ரவர்த்தினி** — தன் ஆளுகை முழுதும் ஜஹாங்கீர் "உலகத்தொளி" என்றர்த்தங் கொள்ளும் நூர்ஜஹான் என்ற தன் சக்ரவர்த்தினியின் அதிகாரத்துக்குட்பட்டிருந்தான். அவள் பிறந்த குடும்பம் ஏழையாயினும் சிறந்த பிரபுக் குலம். அவளை ஒரு பார்சிய வர்த்தகன் வளர்த்திருந்தான். ஆக்பர் ஆண்ட காலத்தில் அவள் அழகு சாலீமை மயக்கி விட்டது. அவள் தன் குமாரன் வழியில் வராதபடி ஆக்பர் அவளை ஒரு



நூர்ஜஹான்

பங்காளத்து வீரனுக்குக் கலியாணஞ் செய்து விட்டான். ஜஹாங்கீர் பட்டத்துக்கு வந்தபொழுதோ அவள் புருஷனைக் கொன்றுவிட்டு, சிலகாலமான பின்பு அவளைக் கலியாணஞ் செய்து கொண்டான். இந்தக் காலம் முதற்கொண்டு ராஜ்யத்தில் அவளுடைய செல்வாக்கு அதிகமாய்விட்டது. அவள் பெயரால் நாணயங்கள் அடிக்கப்பட்டன. அவள் தகப்பன் மந்திரியாகவும், அவள் சகோதரன் உயர்ந்த உத்தியோகஸ்தனாகவும் நியமிக்கப்பட்டார்கள்.

தக்ஷிணத்தில் கலகங்கள் — ஹாமெட்நகர அராசாட்சியை நடத்திவந்த மாலிக் ஆம்பர் என்ற அதிக திறமையுள்ள ஒரு ஆபிஸின்ய பிரபுவால் தக்ஷிணத்திலே 1621-ல் கலகங்கள் உண்டாயின. சக்கரவர்த்தியின் இளைய குமாரன் ஷாஜஹான் அவன்மேல் அனுப்பப்பட்டான். மாலிக் ஆம்பர் தோற்று ஜஹாங்கீருக்கு வரிகட்டவும், தன் ராஜ்யத்தின் பெரும் பாகத்தைக் கொடுத்துவிடவும் நேரிட்டது.

ராஜாங்கத்தை அபகரிக்க உபாயஞ் செய்தது — சில காலத்திற்குள் ஜஹாங்கீர் வியாதிப்பட்டான்; இதனால், அவன மரிக்கும் பக்ஷத்தில் யாரைப் பட்டத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்று பல உபாயங்கள் செய்யப்பட்டன. மூத்த குமாரன் குஷ்ரா இறந்துபோயிருந்ததால், ஷாஜஹான் தனக்குப் பின் அரசுபுரிய வேண்டுமென்று நியமித்திருந்தான்; நூர்ஜஹானோ தன் முதற்புருஷனுக்குப் பிறந்த மகளைக் கலியாணம் பண்ணின (சக்கரவர்த்தியின்) கடைசிக் குமாரன் ஷாரியார் பட்டத்துக்கு வரவேண்டுமென விரும்பினாள். தன் காரியத்துக்கு உதவியாக அக்காலத்தில் முதற் சேனாதிபதியா

யிருந்த மஹாபத்கானை அரண்மனைக்கு வரவழைத்தாள். ஷாஜஹான் அதற்கு விரோதமா யெழும்ப, அவன் மேற்சொன்ன மஹாபத்கானால் முறியடிக்கப்பட்டான். ஆகிலும் சீக்கிரத்தில் ஷாஜஹான் தகப்பனோடு சமாதானமாய் விட்டான்.

ஜஹாங்கீரின் கடைசித் தினங்கள் — நூர்ஜஹான் இப்பொழுது மஹாபத்கானைக் குறித்து எரிச்சலடைந்தாள்; அவன்பேரில் அநேக தோஷங்கள் சாட்டப்பட்டன. உத்தரவு சொல்ல ராஜ மாளிகைக்கு வரக் கட்டளைப் பெற்றான். அவனோ பெரிய ராஜபுத்திர சேனையோடு வந்தான். ஆகிலும் நூர்ஜஹான் அவனைக் கெடுக்கத் தீர்மானித்திருக்கிறதைக் கண்டு, சக்கரவர்த்தியைப் பிடிக்கத் தீர்மானித்தான். ஜீலம் நதிக்கரையிலே ஜஹாங்கீர் கைதியானான். சிறிது காலத்திற்குள்ளாக ஜஹாங்கீர் தப்பிவிட, மஹாபத்கான் தக்ஷிணத்துக்கு ஓடி ஷாஜஹானைச் சேர்ந்துகொண்டான். அடுத்த வருஷம் லாகோருக்குப் போகும் வழியிலே ஜஹாங்கீர் இறந்து போனான் — 1627.

ஸர் தாமஸ் ரோ — இந்த அரசாட்சி காலத்தில் 1617-ல் ஸர் தாமஸ் ரோ என்பவன் முகல் அரண்மனையில் வந்து சேர்ந்தான். இங்கிலாந்தரசன் முதலாம் ஜேம்ஸ் என்பவன் அவனைத் தானாபதியாய் அனுப்பி ஈஸ்ட் இந்திய கம்பெனிக்குச் சில மிராசுகள் அளிக்கச் சக்ரவர்த்தியைக் கேட்டுக்கொண்டான். அவனுக்கு எவ்விதமும் மரியாதை செய்யப்பட்டது. தேசத்தின் ஸ்திதி, ஜனங்களின் நிலைமை, ஜஹாங்கீர் ஸம்ஸ்தான காரியங்கள் முதலானவைகளைப்பற்றி ரோ என்பவன் விவரமாய் எழுதியிருக்கிறான்.

# 25. பேர்போன கட்டடக்காரன் ஷாஜஹான், 1627—1658

**ஷாஜஹான்** — தன் தகப்பன் மரித்த சங்கதியை கேட்டவுடனே ஷாஜஹான் தக்ஷிணத்தைவிட்டு வடக்கே ஆத்திரமாய்த் திரும்பிபோய் 1628 ஜனுவரியிலே ஆக்ராவில் ராஜாங்கத்தைப் பிடித்துக்கொண்டான். தனக் கெதிரிகளாகத்தக்க ஆக்பர் வமிசத்தார் யாவரையும் கொலைசெய்து விட்டான். நூர்ஜஹான் பெரிய பென்ஷன் பெற்றுக்கொண்டு ராஜமாளிகைவிட்டு நீங்கினாள்.

**தக்ஷிணத்தில் யுத்தங்கள்** — ஷாஜஹான் ஆளுகையிலே முதல் பத்துவருஷகாலம் தக்ஷிணத்து யுத்தங்களில் கழிந்தது. தக்ஷிணத்துப் பிரதிநிதி கலகஞ் செய்து, மராட்டியரைச் சிநேகம் பண்ணிக்கொண்டு, முகலரைத் தோற்கடித்து அவர்களுக்குப் பெருத்த நஷ்டத்தை உண்டுபண்ணினான். ஆகிலும் ஷாஜஹான் தானே அவன்மேற் சென்று நடத்தின யுத்தத்தில் அந்தப் பிரதிநிதி இறந்தான். ஹாமெட் நகரம் இன்னும் தொந்தரவு செய்தது. மராட்டிய ராஜ்யத்தை ஸ்தாபித்த சிவாஜியின் தகப்பன் ஷாஜி அதன்மேல் ஒரு புதிய அரசனை வைத்து அதைச் சுவாதீனமாக்க முயன்றான். ஷாஜஹான் தக்ஷிணம் சேர்ந்தபொழுதோ, ஷாஜி அடங்கிச் சமாதானஞ்




ஷாஜஹான்

செய்துகொண்டான். இவ்வாறு ஹாமெட் நகரும், பின்பு பிஜாப்பூர், கோல்கொண்டாவும் அடக்கப்பட்டன.

சக்கரவர்த்தி குமாரர் குணவிஷயங்கள் — ஷாஜஹானுக்குக் குமாரர் நாலுபேர்; மூத்தவனாகிய டாரா என்பவன் தைரியமுங் கபடமற்றவனும், மதவிஷயங்களிலே கண்டிப்பில்லாதவனுமா யிருந்தாலும், கர்வியும் மூர்க்கனுமாவன். ஷூஜா கொஞ்சம் திறமையுள்ளவனாயினும், மதுபானப் பிரியனும் சிற்றின்ப ஜீவியுமானவன். ஔரங்சிப் எல்லாரிலும் சமர்த்தனும் பேராசை பிடித்தவனும் பெருத்த வஞ்சகனும் தந்திரசாலியுமாவன். நால்வரிலும் இளைஞனை மோரட் என்பவன் தைரியமும் தயாளமும் பொருந்தியவனாயினும், மந்த புத்தியும் துர்நடக்கையு முடையவன். நாலுபேரும் உயர்ந்த உத்தியோகத்தில் அமர்ந்திருந்தார்கள். டாரா அரசாட்சியிற் கலந்தவன்; ஷூஜா பங்காளத்துப் பிரதிநிதி; ஔரங்சிப் தக்ஷிணத்து கவர்னர்; மோரட் குஜராத்தை ஆண்டுவந்தான்.

அரசாட்சிக்குப் போர் — 1657-லே ஷாஜஹான் வியாதிப்பட்டுச் சாகப் பிழைக்கக் கிடந்தான். ராஜாங்கத்தை நடத்த டாரா நியமிக்கப்பட்டான். இது அவன் சகோதரருக்கு வெறுப்பாயிருந்தது; அவர்களில் ஒவ்வொருவனும் அரசைத் தனக்கே சம்பாதிக்கப் பிரயத்தனம் செய்தான். போரைத் தொடங்கினவன் ஷூஜா; அவன் பங்காளத்திலிருந்து டில்லிக்குப் பிரயாணமாய்ப் போனான். மோரட் பொக்கிஷசாலையைப் பிடித்துக்கொண்டு, சக்கரவர்த்தி யென்று பெயர்வைத்துக்

கொண்டான். வஞ்ச நெஞ்சனாகிய ஔரங்சிப் என்பவனோ தான் உலகத்தை விட்டு விட்டு மெக்காவுக்குப் போகவிருந்தமையால், அவபக்தனை டாராவுக்கு விரோதமாக மோரட்டுக்கு உதவி செய்கிறதாக அவனுக்குக் கடிதமெழுதினான். மூட மோரட் அவனை நம்பினான்; இருவரும் தங்கள் சேனைகளைச் சேர்த்துக்கொண்டு ஆக்ராவின்மேற் சென்றார்கள். அவர்களுக்கு விரோதமாய் டாரா அனுப்பின சேனையை அவர்கள் எதிர்த்து முறி-




டில்லிவாசல், ஆக்ரா கோட்டை

யடித்தார்கள். அவர்கள் வென்று போகையில் பெருஞ் சேனையோடு வந்திருந்த டாராவை ஆக்ராவுக்குச் சமீபத்திற் சந்தித்தார்கள். டாரா தோற்றுப் போய்த் தன் சேனையில் மீதியான சிலருடன் ராஜபுதானத்துக்கு ஓட்டம் பிடித்தான். அங்கிருந்து சிந்துப் பாலைவனங்களைக் கடந்து காபூலுக்கு ஓடினான். பின்பு ஒரு ஆப்கன் அவ-

னைக் காட்டிக்கொடுத்து ஔரங்கசிப்புக்கு அவனை விற்றுப்போட்டான். டாராவை யானைமேலேற்றி டில்லிக் கடைத்தெரு வழியாய்க் கொண்டுபோய்ப் பின்பு ரகசியமாய்க் கொன்றுபோட்டார்கள்.

யுத்தம் நடந்து மூன்று நாளான பின்பு ஔரங்கசிப் ஆக்ராவுக்குப் போய்ப் பட்டணத்தைப் பிடித்துக் கொண்டான். தகப்பனைக் கைதியாக்கி, மோரட்டுக்கு விலங்கிட்டு குவாலியருக் கனுப்பி




டில்லியிலுள்ள ஜம்மா மசிது

விட்டான். பிறகு அவன் டில்லிக்குப் போய்ச் சக்கரவர்த்திப் பட்டம் தரித்துக் கொண்டான்.

**ஷாஜஹான் மரணமும் குணமும்** — ஷாஜஹான் ஆளுகை இவ்வாறு அநியாயமாய் முடிவுபெற்றது. அவன் இன்னும் ஏழுவருஷம் கடுஞ்சிறையிற் கிடந்து, 1666-லே மரணமடைந்தான். ஷாஜஹா-

னுக்கு இன்பமும் சௌக்கியமும் பிரீதியாயினும், அவன் குடிகளை நியாயமாய் நடத்தினான். தன் அரசாட்சி காலத்தில் ராஜ்ய விஸ்தீர்ணம் மிகவும் பெருகிற்று. ஆகிலும் அவன் கட்டுவித்த அலங்கார-மான கட்டடங்களுக்கே அவன் பேர்போனவன்.



ஆக்ராவிலுள்ள தாஜ்

அவன் டில்லியிலே புதுநகரம் ஒன்றுகட்டி, அதிலே விசாலமான வீதிகளும், வழியோரம் மரங்களும், மத்தியிலேபலமான அரண்மனையும்உண்டாக்கினான். ஆக்ராவிலே வெண் சலவைக் கல்லால் தன் முக்கிய மனைவி மம்டாஸ் மஹாலுக்குக் கட்டுவித்த கம்பீர-மான கோரிக்கு "தாஜ்மஹால்" என்றுபேர். அவன் இரண்டு கோவில்களும் கட்டினான். ஒன்று ஆக்ரா-விலே மோத்தி மஸ்ஜிட், மற்றொன்று டில்லியிலே ஜம்மா மஸ்ஜிட் என்பது. பேர்போன மயில் சிங்காசனம் என்பது அவனால் டில்லியில் அமைக்-கப்பட்டது.

# 26 கண்டிப்பான மகம்மதியன் ஔரங்சிப், 1658-1707

**ஔரங்சிப்பின் சகோதரர்** — தன் சகோதரர் உள்ள வரையும் ஔரங்சிப்புக்கு ராஜாங்கத்திற் க்ஷேமமில்லை யெனக் காணப் பட்டது. டாரா முன்னமே கொலை செய்யப்பட்டான். இன்னொரு வருஷம் கழிந்த பின்பு, தன் இரண்டாம் சகோதரன் ஷுஜாவை இந்தியாவிலிருந்து துரத்திவிட, அவன் ஆரக்கானுக்குஓடி அங்கே மாண்டான். மோரட் சிறைச் சாலையிலே சிரச்சேதமானான். இப்படிப் பெருங் கொடுமையான செயல்களால் ஔரங்சிப் சக்கரவர்த்தியானான்.



ஔரங்சிப்
(வாலிபப் பருவம்)

**ஔரங்சிப்பின் ராஜாங்க ஏற்பாடு** — அக்பரும் அவனுக்குப் பின்வந்த இருவரும் இந்துக்களையும் முகலரையும் ஒருமைப் படுத்த தங்களாலான வரையும் முயன்றார்கள். ஔரங்சிப்போ "ஜசியா"

வரியைத் திரும்பப் போட்டு, இந்துக்களுக்குச் சர்க்கார் உத்தியோகம் கொடுக்கக் கூடாதென்று கட்டளையிட்டான். இந்துக் கோவில்கள் அழிக்கப்பட்டு, அவையிருந்த ஸ்தானத்தில் மகம்மதிய கோவில்கள் கட்டப்பட்டன. இவையெல்லாம் ராஜபுத்திரரைக் கலகத்துக்கு எழுப்பக் காரணமாயின. சதாராயணர் என்ற ஒரு மதாநுசாரிகள் விரோதமாய் எழும்ப ஔரங்சிப்சேனை அவர்களைத் தோற்கடித்தது.

மராட்டியர் — மராட்டியர் என்றொரு புதிய இந்திய ராஜாங்கம் தக்ஷிணத்தில் ஸ்தாபிக்கப் பட்டது. அவர்கள் வரலாறு இன்னொரு அதிகாரத்திற் சொல்லப்படும்; இவர்கள் விருத்தியைக் கெடுத்தழிக்க ஔரங்சிப் தீர்மானம் பண்ணிக் கொண்டான். 1674-ல் மராட்டிய தலைவனாகிய சிவஜி என்பவன் தான் பயமுறுத்தக்கூடிய மாகாணங்களி லெல்லாம் வரவிலே கால்பாகமாகிய "சௌத்" என்னும் வரிவாங்கத் தொடங்கினான். ஔரங்சிப் பெரிய ஒரு சேனையைக் கூட்டிக்கொண்டு தெற்கேயிருந்த மகம்மதிய சிற்றரசுகளை அடக்கப் போனான். கோல்கொண்டா, பிஜாப்பூர் என்ற மகம்மதியராஜ்யங்கள் பிடிக்கப்பட்டன. அவன் அப்படிச் செய்தது பெரும் பிசகு; அவன் அவர்களைக் காத்துப் பரிபாலித்திருந்தானானால், மராட்டியரை அடக்க அவர்கள் அவனுக்கு உதவியிருப்பார்கள். பிறகு அவன் மராட்-



ஔரங்சிப்
(கிழப் பருவம்)

டியரை அடக்கப் போனான். சிவஜியின் குமாரன் சம்பாஜி பிடிபட்டுக் கொலையுண்டான்; அநேக மராட்டிய கோட்டைகள் பிடிக்கப் பட்டன. இவ்வாறு 1688-லே முகலரதிகாரம் இவ்வளவென்று சொல்லமுடியாது.

**ஔரங்சிப்பின் மரணகாலம்**—வெகுசீக்கிரத்தில் மராட்டியர் தங்கள் மலையரண்களிலிருந்து புறப்பட்டுவந்து முகலரைத் தோற்கடித்தார்கள். இந்தக் கொள்ளைக்காரரோடு சண்டைசெய்ய முகலருக்கு முடியவில்லை. மராட்டியர் தங்கள் கோட்டைகளை மறுபடியும் பிடித்துக்கொண்டார்கள். இத்தருணத்தில் ஔரங்சிப்புக்கு தேக சௌக்கியமில்லாமற் போனதினால், சண்டையை நடத்த அவனுக்குச் சக்தியில்லை. 1707-லே அவன் மரித்த போது ராஜ்யம் மிகப் பலங்குறைந்து வெவ்வேறாகப் பிரிந்து கிடந்தது.

**குணவிஷயம்**—ஔரங்சிப் கண்டிப்பான மகம்மதியன்; முகம்மதிய சரித்திரக்காரர் அவனை முகல்வமிசத்தரசர்களி லெல்லாம்—டைமோரயின் ஆக்பரையும்விட பெரியவன் என்று மதிக்கிறார்கள். ஆகிலும் தன் மத உபத்திரவத்தால் ஒருவேளை அவன் ஒவ்வொரு இந்துவையும் தனக்குச் சத்துருவாக்கிக் கொண்டான். அவன் ஆக்பரைப்போலவே சிறந்த தளகர்த்தன்; வேலையில் மிக்க ஜாக்கிரதையும், இல்லற ஒழுக்கத்தில் மிக்க சாதாரண ஜீவியுமா யிருந்தான்.